புஞ்ஜாநா	-	அனுபவித்துக்கொண்டு
கதாயுஷ:	-	அல்பாயுசையுடைய
மாநுஷஸ்ய	-	மானிடனாகிய
ராமஸ்ய	-	ராமனை
ந ஸ்மரிஷ்யஸி	-	நினையாதிருப்பாய்.

स्थापयित्वा प्रियं पुत्रं राज्ञा दशरथेन यः ।
मन्दवीर्यः सुतो ज्येष्ठस्ततः प्रस्थापितो वनम् ॥

ஸ்தாபயித்வா ப்ரியம் புத்ரம் ராக்ஞா தஶரதேந ய: ।
மந்தவீர்யஸ் ஸுதோ ஜ்யேஷ்டஸ் தத: ப்ரஸ்தாபிதோ வனம் ॥ 15

தஶரதேந ராக்ஞா	-	'தசரத மன்னனால்
ப்ரியம்	-	இஷ்டமான
புத்ரம்	-	புதல்வனை
ஸ்தாபயித்வா	-	இருக்கச்செய்து,
ய:	-	எந்த ஒரு
ஜ்யேஷ்ட: ஸுத:	-	ஜ்யேஷ்ட புதல்வன்
தத:	-	அங்கிருந்து
வனம்	-	காட்டிற்கு
ப்ரஸ்தாபித:	-	துரத்தப்பட்டானோ அவன்
மந்தவீர்ய:	-	அல்ப ஆற்றலுற்றவன்.

तेन किं भ्रष्टराज्येन रामेण गतचेतसा ।
करिष्यसि विशालाक्षि तापसेन तपस्विना ॥

தேந கிம் ப்ரஷ்டராஜ்யேன ராமேண கதசேதஸா ।
கரிஷ்யஸி விஶாலாக்ஷி தாபஸேந தபஸ்விநா ॥ 16

ப்ரஷ்ட ராஜ்யேன	-	'ராஜ்யத்தைப் பறிகொடுத்து
கத சேதஸா	-	மனம் முறிந்து
தபஸ்விநா	-	உலகப் பற்றற்று
தாபஸேந	-	ரிஷியாகிய
தேந ராமேண	-	அந்த ராமனோடு
விஶாலாக்ஷி	-	தடங்கண்ணாய்
கிம் கரிஷ்யஸி	-	என்ன செய்யப் போகின்றாய்?

यक्षराक्षसभर्तारं कामय स्वयमागतम् ।
न मन्मथशराविष्टं प्रत्याख्यातुं त्वमर्हसि ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யக்ஷ ராக்ஷஸ பர்தாரம் காமய ஸ்வயமாகதம் ।
நமன்மதஶராவிஷ்டம் ப்ரத்யாக்யாதும் த்வமர்ஹஸி ॥ 17

காமாத் - 'ஆசையால்
ஸ்வயம் - நேரில்
இஹ - இவ்விடத்திற்கு
மன்மதஶராவிஷ்டம் - மன்மத பாணங்களால் மொத்துண்டு
ஆகதம் - வந்தவனாகிய
யக்ஷ ராக்ஷஸ பர்தாரம் - யக்ஷர்களுக்கும் ராக்ஷஸர்களுக்கும் அரசனாகும் என்னை
ப்ரத்யாக் யாதும் - திரஸ்கரிக்க
த்வம் ந அர்ஹஸி - நீ கூடாது.

प्रत्याख्याय हि मां भीरु परितापं गमिष्यसि ।
चरणेनाभिहत्येव पुरूरवसमुर्वशी ॥

ப்ரத்யாக்யாய ஹி மாம் பீரு பரிதாபம் கமிஷ்யஸி ।
சரணேநாபிஹத்யேவ புரூரவஸமுர்வஶீ ॥ 18

பீரு - 'அஞ்சுபவளே!
உர்வஶீ - ஊர்வசீ
புரூரவஸம் - புரூரவஸ் என்பவரை
சரணேந - காலால்
அபிஹத்ய - உதைத்து,
பரிதாபம் - பச்சாத்தாபத்தை
இவ - அடைந்ததுபோலவே
மாம் ஹி - என்னையும்
ப்ரத்யாக்யாய - அலக்ஷியஞ்செய்து
கமிஷ்யஸி - நீ அடைவாய்.

अङ्गुल्या न समो रामो मम युद्धे स मानुषः ।
तव भाग्येन संप्राप्तं भजस्व वरवर्णिनि ॥

அங்குல்யா ந ஸமோ ராமோ மம யுத்தே ஸ மானுஷ: ।
தவ பாக்யேன ஸம்ப்ராப்தம் பஜஸ்வ வரவர்ணினி ॥ 19

வரவர்ணினி - 'சுந்தரீ!
ஸ: மானுஷ: - அந்த மானிடனாகும்
ராம: - ராமன்
யுத்தே - போரில்
மம - எனது
அங்குல்யா - கைவிரல் ஒன்றுக்கு
ந ஸம: - இணையாகான்.
தவ - உனது
பாக்யேன - புண்யவிசேஷத்தால்
ஸம்ப்ராப்தம் - வந்திருக்குமென்னை
பஜஸ்வ - ஏற்றுக்கொள்.'

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

एवमुक्ता तु वैदेही क्रुद्धा संरक्तलोचना ।
अब्रवीत् परुषं वाक्यं रहिते राक्षसाधिपम् ॥

ஏவமுக்த்தா து வைதேஹீ க்ருத்தா ஸம்ரக்தலோசநா।
அப்ரவீத் பருஷம் வாக்யம் ரஹிதே ராக்ஷஸாதிபம்॥ 20

ரஹிதே - ஒருவருமில்லாத சமயத்தில்
ஏவம் - மேற்கண்டவாறு
உக்த்தா - சொல்லப்பட்ட
வைதேஹீ து - சீதாதேவியோ
க்ருத்தா - சினங்கொண்டு
ஸம்ரக்த லோசநா - சிவந்த கண்களுற்றவளாய்
ராக்ஷஸாதிபம் - ராக்ஷஸ மன்னனைப் பார்த்து
பருஷம் வாக்யம் - கண்டிப்பான பதிலை
அப்ரவீத் - பின்வருமாறு மொழிந்தாள்.

कथं वैश्रवणं देवं सर्वभूतनमस्कृतम् ।
भ्रातरं व्यपदिश्य त्वमशुभं कर्तुमिच्छसि ॥

கதம் வைஶ்ரவணம் தேவம் ஸர்வபூதநமஸ்க்ருதம்।
ப்ராதரம் வ்யபதிஶ்ய த்வமஶுபம் கர்துமிச்சஸி॥ 21
ஸர்வபூத நமஸ்க்ருதம்-'எல்லாப் பிராணிகளாலும் நமஸ்கரிக்கப்பட்ட
தேவம் வைஶ்ரவணம்-தேவனாகிய குபேரனை
ப்ராதரம் - தமையனாக
வ்யபதிஶ்ய - சொல்லிக்கொண்டு,
த்வம் - நீ
அஶுபம் கர்தும் - அடாததைச் செய்ய
கதம் இச்சஸி - எப்படித் துணிகின்றனை?

अवश्यं विनशिष्यन्ति सर्वे रावण राक्षसाः ।
येषां त्वं कर्कशो राजा दुर्बुद्धिरजितेन्द्रियः ॥

அவஶ்யம் விநஶிஷ்யந்தி ஸர்வே ராவண ராக்ஷஸா:। 22
யேஷாம் த்வம் கர்கஶோ ராஜா துர்புத்திரஜிதேந்த்ரிய:॥
யேஷாம் - 'எவர்களுக்கு
த்வம் கர்கஶ: - நீ முன்பின் ஆலோசியாத முரடனும்
துர்புத்தி: - புத்தியற்றவனும்
அஜிதேந்த்ரிய: - புலன்களை யடக்காதவனுமான
ராஜா - மன்னனோ, (அந்த)
ராக்ஷஸா: - அரக்கர்கள்
ஸர்வே - எல்லோரும்
அவஶ்யம் - கட்டாயம்
ராவண - ராவணா!
விநஶிஷ்யந்தி - அழியப் போகிறார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

अपहृत्य शचीं भार्यां शक्यमिन्द्रस्य जीवितुम् ।
न च रामस्य भार्यां मामपनीयास्ति जीवितम् ॥

அபஹ்ருத்ய ஶசீம் பார்யாம் ஶக்யமிந்த்ரஸ்ய ஜீவிதும் ।
ந ச ராமஸ்ய பார்யாம் மாமபநீயாஸ்தி ஜீவிதம் ॥ 23

இந்த்ரஸ்ய	-	'இந்திரனது
பார்யாம்	-	மனைவியாகிய
ஶசீம்	-	சசிதேவியை
அபஹ்ருத்ய	-	திருடி,
ஜீவிதும்	-	உயிருடனிருக்க
ஶக்யம்	-	முடிந்தாலும் முடியும்.
ராமஸ்ய	-	ஸ்ரீராமனது
பார்யாம் மாம்	-	மனைவியாகிய என்னை
அபநீய	-	அபகரித்து,
ஜீவிதம்	-	உயிர்
ந ச அஸ்தி	-	இருக்கவே மாட்டாது.

जीवेच्चिरं वज्रधरस्य हस्तात् शचीं प्रधृष्याप्रतिरूपरूपाम् ।
न मादृशीं राक्षस धर्षयित्वा पीतामृतस्यापि तवास्ति मोक्षः ॥

ஜீவேச்சிரம் வஜ்ரதரஸ்ய ஹஸ்தாத்
ஶசீம் ப்ரத்ருஷ்யாப்ரதிரூபரூபாம் ।
ந மாத்ருஶீம் ராக்ஷஸ தர்ஷயித்வா
பீதாம்ருதஸ்யாபி தவாஸ்தி மோக்ஷ: ॥ 24

அப்ரதிரூப ரூபாம்	-	'ஒப்பற்ற அழகிய திருமேனியையுடைய
ஶசீம்	-	சசிதேவியை
வஜ்ரதரஸ்ய	-	இந்திரனது
ஹஸ்தாத்	-	கையிலிருந்து
ப்ரத்ருஷ்ய	-	அபகரித்து,
சிரம்	-	வெகுகாலம்
ஜீவேத்	-	உயிருடனிருந்தாலுமிருக்கலாம்.
ராக்ஷஸ	-	அரக்கா!
மாத்ருஶீம்	-	என்போன்றவளை
தர்ஷயித்வா	-	அபகரித்து,
பீதாம்ருதஸ்ய அபி	-	அமிருதபானம் பண்ணினவனாயினும்
தவ	-	உனக்கு
மோக்ஷ:	-	கூற்றுக்குத் தப்புதல்
ந அஸ்தி	-	கிடையாது.'

இத்யார்ஷே ஸ்ரீமத் ராமாயணே வால்மீகீயே ஆதிகாவ்யே
சதுர்விம்ஶதி ஸஹஸ்ரிகாயாம் ஸம்ஹிதாயாம் ஆரண்ய காண்டே
ராவண விகத்தனம் நாம அஷ்டசத்வாரிம்ஶ: ஸர்க: ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஏகோந பஞ்சாஶ: ஸர்க: - 49

सीताया वचनं श्रुत्वा दशग्रीवः प्रतापवान् ।
हस्ते हस्तं समाहत्य चकार सुमहद्वपुः ॥

ஸீதாயா வசனம் ஶ்ருத்வா தஶக்ரீவ: ப்ரதாபவான்।
ஹஸ்தே ஹஸ்தம் ஸமாஹத்ய சகார ஸுமஹத்வபு: ॥ 1

ஸீதாயா: - சீதாதேவியின்
வசனம் ஶ்ருத்வா - வார்த்தையை கேட்டு,
ப்ரதாபவான் - பிரதாபவானாகிய
தஶக்ரீவ: - தசக்ரீவன்
ஹஸ்தே ஹஸ்தம் - கையோடு கையை
ஸமாஹத்ய - தட்டி,
ஸுமஹத் வபு: - ஓர் பெரிய உருவத்தை
சகார - செய்துகொண்டான்.

स मैथिलीं पुनर्वाक्यं बभाषे च ततो भृशम् ।
नोन्मत्तया श्रुतौ मन्ये मम वीर्यपराक्रमौ ॥

ஸ மைதிலீம் புனர்வாக்யம் பபாஷே ச ததோ ப்ருஶம்।
நோந்மத்தயா ஶ்ருதௌ மன்யே மம வீர்யபராக்ரமௌ॥ 2

ஸ: - அவன்
தத: - அதன்மேல்
மைதிலீம் - சீதாப்பிராட்டியாரைப் பார்த்து
புன: - மீளவும்
வாக்யம் - பின்வரும் சொல்லை
ப்ருஶம் - அதிபயங்கரமாய்
பபாஷே - மொழிந்தான்.
மம - 'எனது
வீர்ய பராக்ரமௌ - போரிற்புறம்போகாமையும் சத்ருக்களைஜயித்தலும்
உந்மத்தயா - அதி கர்வியான உன்னால்
ந ஶ்ருதௌ ச - செவிகொடுக்கப்படவில்லை என்று
மன்யே - நினைக்கிறேன்.

उद्वहेयं भुजाभ्यां तु मेदिनीमम्बरे स्थितः ।
आपिबेयं समुद्रं च हन्यां मृत्युं रणे स्थितः ॥

உத்வஹேயம் புஜாப்யாம் து மேதிநீமம்பரே ஸ்தித:। 3
ஆபிபேயம் ஸமுத்ரம் ச ஹந்யாம் ம்ருத்யும் ரணே ஸ்தித: ॥

அம்பரே - 'ஆகாயத்தில்
ஸ்தித: - இருந்துகொண்டு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மேதிநீம் - பூமியை
புஜாப்யாம் - இரு கைகளாலும்
உத்வஹேயம் - உயரத் தூக்குவேன்.
ஸமுத்ரம் ச - சமுத்திரத்தையும்
ஆபிபேயம் - வற்றக் குடிப்பேன்.
ரணே ஸ்தித: - போரில் எதிர்க்கும் நான்
ம்ருத்யும் து - யமனையும்
ஹந்யாம் - மடிப்பேன்.

अर्कं रुन्ध्यां शरैस्तीक्ष्णैर्निर्भिन्द्यां हि महीतलम् ।
कामरूपिणमुन्मत्ते पश्य मां कामदं पतिम् ।।

அர்கம் ருந்த்யாம் ஶரைஸ் தீக்ஷ்ணைர் நிர்பிந்த்யாம் ஹி மஹீதலம் ।
காமரூபிண முன்மத்தே பஶ்ய மாம் காமதம் பதிம் ॥ 4

அர்கம் - 'சூரியனை
தீக்ஷ்ணை: ஶரை: - கூரிய பாணங்களால்
ருந்த்யாம் - மறைப்பேன்,
மஹீதலம் ஹி - பூமியையே
விபிந்த்யாம் - பிளப்பேன்.
உன்மத்தே - புத்தி சிதறியவளே!
மாம் - என்னை
காமரூபிணம் - நினைத்த உருவம் எடுக்கவல்லவனும்
காமதம் - கோரியதைக் கொடுப்பவனுமான
பதிம் - நாயகனாக
பஶ்ய - எண்ணிக்கொள்.'

एवमुक्तवतस्तस्य रावणस्य शिखिप्रभे ।
क्रुद्धस्य हरिपर्यन्ते रक्ते नेत्रे बभूवतुः ।।

ஏவமுக்தவதஸ்தஸ்ய ராவணஸ்ய ஶிகிப்ரபே ।
க்ருத்தஸ்ய ஹரிபர்யந்தே ரக்தே நேத்ரே பபூவது: ॥ 5

க்ருத்தஸ்ய - சினங்கொண்டு
ஏவம் - மேற்கண்டவாறு
உக்தவத: - பேசின
தஸ்ய ராவணஸ்ய - அந்த ராவணனுடைய
ஹரிபர்யந்தே - கபிலநிற ஓரங்களையுடைய
நேத்ரே - இரு கண்களும்
ஶிகிப்ரபே - அக்னிக்கொப்பாய்
ரக்தே - சிவந்தவைகளாய்
பபூவது: - ஆயின.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

सद्यः सौम्यं परित्यज्य भिक्षुरूपं स रावणः ।
स्वं रूपं कालरूपाभं भेजे वैश्रवणानुजः ॥

ஸத்ய: ஸௌம்யம் பரித்யஜ்ய பிக்ஷுரூபம் ஸ ராவண: ।
ஸ்வ ரூபம் காலரூபாபம் பேஜே வைஶ்ரவணாநுஜ: ॥

ஸ: - அந்த 6
வைஶ்ரவணாநுஜ: - குபேரன் தம்பியாகிய
ராவண: - ராவணன்,
ஸௌம்யம் - அழகிய
பிக்ஷுரூபம் - சந்நியாசி வேஷத்தை
ஸத்ய: பரித்யஜ்ய - உடனே விட்டு,
காலரூபாபம் - எமனுருவை நிகர்த்த
ஸ்வரூபம் - தனதுருவத்தை
பேஜே - எடுக்கலுற்றான்.

संरक्तनयनः श्रीमांस्तप्तकाञ्चनकुण्डलः ।
क्रोधेन महताविष्टो नीलजीमूतसंनिभः ॥

ஸம்ரக்தநயன: ஶ்ரீமாந் தப்தகாஞ்சன குண்டல: ।
க்ரோதேந மஹதா விஷ்டோ நீல ஜீமூதஸந்நிப: ॥ 7

தப்தகாஞ்சன குண்டல: - சுத்த பொன்குண்டலங்களையுடையவனும்
ஶ்ரீமாந் - செல்வம் செறிந்தவனும்
நீல ஜீமூத ஸந்நிப: - கருத்த மேகத்தை நிகர்த்தவனுமான அவன்
ஸம்ரக்த நயன: - சிவந்த கண்களுற்றவனாய்
மஹதா - அளவுகடந்த
க்ரோதேந - சினத்தால்
ஆவிஷ்ட: - மெய் மறந்தவனானான்.

दशास्यः कार्मुकी बाणी बभूव क्षणदाचरः ॥

தஶாஸ்யோ கார்முகி பாணி பபூவ க்ஷணதாசர: ॥ 8

க்ஷணாதாசர: - அரக்கன்,
தஶாஸ்ய: - பத்து முகமுடையவனாய்
கார்முகி - விற்பிடித்தவனாய்
பாணி - சரபாணியாய்.
பபூவ - ஆயினன்.

स परिव्राजकच्छद्म महाकायो विहाय तत् ।
प्रतिपेदे स्वकं रूपं रावणो राक्षसाधिपः ॥

ஸ பரிவ்ராஜகச்சத்ம மஹாகாயோ விஹாய தத் । 9
ப்ரதிபேதே ஸ்வகம் ரூபம் ராவணோ ராக்ஷஸாதிப: ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ: மஹாகாய: - அந்த பெருமுடலுற்ற
ராக்ஷஸாதிப: - ராக்ஷஸ மன்னனாகிய
ராவண: - ராவணன்,
தத் - அந்த
ப்ரிவ்ராஜகச்சத்ம - கபட சந்நியாசி வேஷத்தை
விஹாய - துறந்து,
ஸ்வகம் ரூபம் - தனது உருவத்தை
ப்ரதிபேதே - அடைந்தான்.

संरक्तनयनः क्रोधाज्जीमूतनिचयप्रभः ।
रक्ताम्बरधरस्तस्थौ स्त्रीरत्नं प्रेक्ष्य मैथिलीम् ।।

ஸம்ரக்தநயந: க்ரோதாஜ்ஜீமூத நிசயப்ரப: ।
ரக்தாம்பரதரஸ்தஸ்தௌ ஸ்த்ரீரத்நம் ப்ரேக்ஷ்ய மைதிலீம் ॥ 10

ஜீமூத நிசயப்ரப: - மேகக்குவியல் மேனியனும்,
ரக்தாம் பரதர: - சிவந்த ஆடையையணிந்தவனுமான அவன்,
க்ரோதாத் - கோபத்தால்
ஸம்ரக்த நயந: - சிவந்த கண்களுடையவனாய்
ஸ்த்ரீரத்நம் - ஸ்திரீரத்னமாகிய
மைதிலீம் - மைதிலியாரை
ப்ரேக்ஷ்ய - உற்றுப்பார்த்து,
தஸ்தௌ - சற்றுத் தயங்கினான்.

सीतामसितकेशान्तां भास्करस्य प्रभामिव ।
वसनाभरणोपेतां मैथिलीं रावणोऽब्रवीत् ।।

ஸீதாமஸித கேஶாந்தாம் பாஸ்கரஸ்ய ப்ரபாமிவ ।
வஸநாபரணோபேதாம் மைதிலீம் ராவணோऽப்ரவீத் ॥ 11

அஸித கேஶாந்தாம் - கருத்தடர்ந்த குழலுடையவளும்,
பாஸ்கரஸ்ய - சூர்யபகவானது
ப்ரபாம் இவ - ஒளியை நிகர்த்தவளும்,
வஸநாபரணோபேதாம் - சிறந்த ஆடையாபரணங்களை அணிந்தவளுமான
மைதிலீம் - மிதிலை மன்னரின் திருமகளாகிய
ஸீதாம் - சீதையைப் பார்த்து
ராவண: - ராவணன்
அப்ரவீத் - பின்வருமாறு மொழிந்தான்.

त्रिषु लोकेषु विख्यातं यदि भर्तारमिच्छसि ।
मामाश्रय वरारोहे तवाहं सदृशः पतिः ।।

த்ரிஷு லோகேஷு விக்யாதம் யதி பர்தாரமிச்சஸி ।
மாமாஶ்ரய வராரோஹே தவாஹம் ஸத்ருஶ: பதி: ॥ 12

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வராரோஹே - 'சுந்தரீ!
த்ரிஷு - மூன்று
லோகேஷு - உலகங்களிலும்
விக்யாதம் - பிரஸித்திபெற்ற
பர்தாரம் - கணவனை
இச்சஸி யதி - விரும்புகின்றாயென்றால்
மாம் ஆஶ்ரய - என்னைத் தேர்ந்தெடு.
அஹம் - நான்
தவ - உனக்கு
ஸத்ருஶ: பதி: - ஏற்ற கணவன்.

मां भजस्व चिराय त्वमहं श्लाघ्यस्तव प्रियः ।
नैव चाहं क्वचिद्भद्रे करिष्ये तव विप्रियम् ।।

மாம் பஜஸ்வ சிராய த்வமஹம் ஶ்லாக்ய: ஸ்தவ ப்ரிய ।
நைவ சாஹம் க்வசித்பத்ரே கரிஷ்யே தவ விப்ரியம் ॥ 13

பத்ரே - 'நல்லாய்!
த்வம் - நீ
சிராய - இப்பவே
மாம் பஜஸ்வ - என்னை ஏற்றுக்கொள்.
அஹம் - நான்
தவ - உனக்கு
ஶ்லாக்ய: ப்ரிய: - அருமையான கணவன்.
அஹம் - நான்
தவ - உனக்கு
விப்ரியம் - மனம்கோண
க்வசித் ச - ஒருபொழுதும்
ந ஏவ கரிஷ்யே - நடக்கவே மாட்டேன்.

त्यज्यतां मानुषो भावो मयि भावः प्रणीयताम् ।
राज्याच्च्युतमसिद्धार्थं रामं परिमितायुषम् ।।

த்யஜ்யதாம் மானுஷோ பாவோ மயி பாவ: ப்ரணீயதாம் । 14
ராஜ்யாச்ச்யுதமஸித்தார் தம் ராமம் பரிமிதாயுஷம் ॥

कैर्गुणैरनुरक्तासि मूढे पण्डितमानिनि ।
यः स्त्रिया वचनाद्राज्यं विहाय ससुहृज्जनम् ।।

கைர்குணைரநுரக்தாஸி மூடே பண்டித மாநிநி । 15
ய: ஸ்த்ரியா வசநாத் ராஜ்யம் விஹாய ஸஸுஹ்ருஜ்ஜனம் ॥

अस्मिन् व्यालानुचरिते वने वसति दुर्मतिः ।।

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அஸ்மின் வ்யாலாநுசரிதே வனே வஸதி துர்மதி: ॥ 16

மானுஷ: பாவ:	-	'மானிட எண்ணம்
த்யஜ்யதாம்	-	விடப்படட்டும்,
மயி	-	என்னிடத்தில்
பாவ:	-	அன்பு
ப்ரணீயதாம்	-	வைக்கப்படட்டும்
ய:	-	எந்த
துர்மதி:	-	ஒரு முட்டாள்
ஸ்த்ரியா:	-	ஒரு பெண்பிள்ளையினது
வசநாத்	-	சொல்லைக்கொண்டு
ஸஸுஹ்ருஜ்ஜனம்	-	அன்பர்களோடு கூடிய
ராஜ்யம்	-	ராஜ்யத்தை
விஹாய	-	துறந்து,
அஸ்மின்	-	இந்த
வ்யாலாநுசரிதே	-	துஷ்டமிருகங்கள் வசிக்கும்
வனே	-	காட்டில்
வஸதி	-	காலங்கழிக்கிறானோ, அந்த
ராஜ்யாத்	-	ராஜ்யத்தினின்று
ச்யுதம்	-	நீக்கப்பட்டவனும்,
அஸித்தார்தம்	-	பங்கமடைந்த மனோரதங்களையுடையவனும்,
பரிமிதாயுஷம்	-	அற்பாயிசுடையவனுமான
ராமம்	-	ராமனை
பண்டித மாநிநி	-	எல்லாந்தெரிந்ததென நடிக்கும்
மூடே	-	அசடே!
கை:	-	எந்த
குணை:	-	குணங்களைக்கொண்டு
அநுரக்தா அஸி	-	நீ காதலிக்கின்றனை.'

इत्युक्त्वा मैथिलीं वाक्यं प्रियार्हां प्रियवादिनीम् ।
अभिगम्य सुदुष्टात्मा राक्षस: कालचोदित: ॥

இத்யுக்த்வா மைதிலீம் வாக்யம் ப்ரியார்ஹாம் ப்ரியவாதிநீம் ।
அபிகம்ய ஸுதுஷ்டாத்மா ராக்ஷஸ: கால சோதித: ॥

जग्राह रावण: सीतां बुध: खे रोहिणीमिव ॥

ஜக்ராஹ ராவண: ஸீதாம் புத: கே ரோஹிணீமிவ ॥

புத:	-	கற்றுணர்ந்த
ஸுதுஷ்டாத்மா	-	பரம துஷ்டாத்மாவாகும்
ராக்ஷஸ:	-	அரக்கனாகிய
ராவண:	-	ராவணன்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கால சோதித: - விதியால் தூண்டப்பட்டவனாகி,
ப்ரியார்ஹாம் - பக்திக்குரியவளும்
ப்ரிய வாதிநீம் - ஹிதத்தையே சொல்லுகிறவளுமாகிய
மைதிலீம் - சீதாதேவியைப் பார்த்து
இதி - மேற்கண்ட
வாக்யம் - சொல்லை
உக்த்வா - சொல்லிவிட்டு,
கே - ஆகாயத்தில்
ரோஹிணீம் இவ - மின்னல் கொடிபோலிருக்கும்
ஸீதாம் - சீதாதேவியை
அபிகம்ய - கிட்டி,
ஜக்ராஹ - பற்றி இழுத்தான்.

वामेन सीतां पद्माक्षीं मूर्धजेषु करेण सः ।
ऊर्वोस्तु दक्षिणेनैव परिजग्राह पाणिना ॥

வாமேன ஸீதாம் பத்மாக்ஷீம் மூர்தஜேஷு கரேண ஸ: ।
ஊர்த்வோஸ்து தக்ஷிணேநைவ பரிஜக்ராஹ பாணிநா ॥

ஸ: - அவன்
பத்மாக்ஷீம் - தாமரைக் கண்ணியான
ஸீதாம் - சீதையை
மூர்தஜேஷு - கூந்தலில்
வாமேன - இடது
கரேண - கையாலும்
ஊர்வோ: து - இரு துடைகளிலுமே
தக்ஷிணேந - வலது
பாணிநா ஏவ - கையாலும்
பரிஜக்ராஹ - பிடித்துத் தூக்கினான்.

तं दृष्ट्वा गिरिशृङ्गाभं तीक्ष्णदंष्ट्रं महाभुजं ।
प्राद्रवन्मृत्युसदृशं भयार्ता वनदेवताः ॥

தம் த்ருஷ்ட்வா கிரிஸ்ருங்காபம் தீக்ஷ்ண தம்ஷ்ட்ரம் மஹாபுஜம் ।
ப்ராத்ரவன் ம்ருத்யுஸத்ருஶம் பயார்தா வனதேவதா: ॥

வனதேவதா: - வனதேவதைகள்
கிரி ஸ்ருங்காபம் - மலைக்கொடுமுடி போன்றவனும்,
தீக்ஷ்ண தம்ஷ்ட்ரம் - கூரிய கோரப் பற்களையுடையவனும்,
மஹாபுஜம் - பெருத்த கைகளையுடையவனும்,
ம்ருத்யு ஸத்ருஶம் - யமனைப் போன்றவனுமான
தம் த்ருஷ்ட்வா - அவனைப் பார்த்து
பயார்தா: - உள்ளம் நடுங்கியவர்களாய்
ப்ராத்ரவன் - ஓடினார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

स च मायामयो दिव्यः खरयुक्तः खरस्वनः ।
प्रत्यदृश्यत हेमाङ्गो रावणस्य महारथः ॥

ஸ ச மாயாமயோ திவ்ய: கரயுக்த: கரஸ்வன: ।
ப்ரத்யத்ருஶ்யத ஹேமாங்கோ ராவணஸ்ய மஹாரத: ॥

ராவணஸ்ய - ராவணனுடைய
ஸ: - அந்த
மாயாமய: - மாயையால் சிருஷ்டிக்கப்பட்டதும்,
கரயுக்த: - கோவேழுகழுதைகள் பூட்டப்பட்டதும்,
கரஸ்வன: - கோரமான ஒலியுடையதும்,
ஹேமாங்க: ச - பொன்னாலானதுமான
திவ்ய: - சிறந்த
மஹாரத: - பெரும் ரதம்
ப்ரத்யத்ருஶ்யத - திடீரென்று காணப்பட்டது.

ततस्तां परुषैर्वाक्यैरभितर्ज्य महास्वनः ।
अङ्केनोद्यम्य वैदेहीं रथमारोपयत्तदा ॥

ததஸ்தாம் பருஷைர் வாக்யைர் அபிதர்ஜ்ய மஹாஸ்வன: ।
அங்கேநாதாய வைதேஹீம் ரதமாரோபயத் ததா ॥

ததா - அப்பொழுது
மஹாஸ்வன: - அவன் பெருங்குரலுற்று
தாம் வைதேஹீம் - அந்த சீதாதேவியை
பருஷை: - கொடிய
வாக்யை: - வார்த்தைகளால்
அபிதர்ஜ்ய - மிரட்டி,
அங்கேந - துடையில்
உத்யம்ய - தாங்கி
தத: - அதிலிருந்து
ரதம் - ரதத்தில்
ஆரோபயத் - தூக்கிவைத்தான்.

सा गृहीता विचुक्रोश रावणेन यशस्विनी ।
रामेति सीता दुःखार्ता रामं दूरगतं वने ॥

ஸா க்ருஹீதா விசுக்ரோஶ ராவணேன யஶஸ்விநீ ।
ராமேதி ஸீதா துக்கார்தா ராமம் தூரகதம் வனே ॥

யஶஸ்விநீ - பெரும் புகழ்பெற்ற
ஸா ஸீதா - அந்த சீதாதேவி
ராவணேன - ராவணனால்
க்ருஹீதா - திருடப்பட்டவளாய்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

துக்கார்தா - துயரத்தில் மூழ்கியவளாய்
வனே - காட்டில்
தூரகதம் - தூரத்திலிருந்த
ராமம் - ஸ்ரீராமரை நினைத்து
ராம இதி - 'ஸ்ரீராம' என்று
விசுக்ரோஶ - கதறினாள்.

तामकामां स कामार्तः पन्नगेन्द्रवधूमिव ।
विवेष्टमानामादाय उत्पपाताथ रावणः ॥

தாமகாமாம் ஸ காமார்த: பந்நகேந்த்ரவதூமிவ ।
விவேஷ்டமாநாமாதாய உத்பபாதாத ராவண: ॥ 25

அத - அப்பொழுது
காமார்த: - காமவெறிகொண்ட
ஸ: ராவண: - அந்த ராவணன்,
பந்நகேந்த்ர வதூம் இவ - சர்ப்பராஜன் மனைவியைப் போன்றவளும்,
அகாமாம் - சிறிதுமுடன்படாதவளாய்
விவேஷ்டமாநாம் - துடித்துக்கொண்டிருக்கிறவளுமான
தாம் - அவளை
ஆதாய - சிறைப்படுத்தி,
உத்பபாதாத - உயரக் கிளம்பினான்.

ततः सा राक्षसेन्द्रेण ह्रियमाणा विहायसा ।
भृशं चुक्रोश मत्तेव भ्रान्तचित्ता यथातुरा ॥

தத: ஸா ராக்ஷஸேந்த்ரேண ஹ்ரியமாணா விஹாயஸா ।
ப்ருஶம் சுக்ரோஶ மத்தேவ ப்ராந்தசித்தா யதாதுரா ॥ 26

தத: - அப்பொழுது
ராக்ஷஸேந்த்ரேண - ராக்ஷஸ மன்னனால்
விஹாயஸா - ஆகாயமார்க்கத்தில்
ஹ்ரியமாணா - கொண்டுபோகப்படுகிற
ஸா - அவள்
ஆதுரா - ஏதொன்றையும் தான் செய்ய முடியாதவளாய்
யதா - இருந்தமையால்
ப்ராந்தசித்தா - உள்ளம் கலங்கி
மத்தா இவ - பைத்தியம் பிடித்தவள் போலாகி
ப்ருஶம் - மிகக் கஷ்டமாய்
சுக்ரோஶ - பின்வருமாறு கதறினாள்.

हा लक्ष्मण महाबाहो गुरुचित्तप्रसादक ।
ह्रियमाणां न जानीषे रक्षसा माममर्षिणा ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஹா லக்ஷ்மண மஹாபாஹோ குருசித்தப்ரஸாதக ।
ஹ்ரியமாணாம் ந ஜாநீஷே ரக்ஷஸா மாமமர்ஷிணா ॥ 27

ஹா லக்ஷ்மண - 'ஹா! லக்ஷ்மணரே!
மஹாபாஹோ - சுத்த வீரரே!
குருசித்த ப்ரஸாதக - பெரியோர்கள் மனம் மகிழ நடப்பவரே!
அமர்ஷிணா - மகா முரடனாகிய
ரக்ஷஸா - அரக்கனால்
மாம் - என்னை
ஹ்ரியமாணாம் - திருடிக்கொண்டு போகப்படுகிறவளாய்
ந ஜாநீஷே - நீர், அறியவில்லை.

जीवितं सुखमर्थांश्च धर्महेतोः परित्यजन् ।
ह्रियमाणामधर्मेण मां राघव न पश्यसि ॥

ஜீவிதம் ஸுகமர்தாம்ஶ்ச தர்மஹேதோ: பரித்யஜன் ।
ஹ்ரியமாணாமதர்மேண மாம் ராகவ ந பஶ்யஸி ॥ 28

ராகவ - 'ஸ்ரீராம!
ஸுகம் ஜீவிதம் - சுகவாழ்வையும்,
அர்தான் ச - பொருள்களையும்,
தர்மஹேதோ: - தர்மத்திற்காக
பரித்யஜன் - துறக்கும், நீர்
மாம் - என்னை
அதர்மேண - அநியாயமாய்
ஹ்ரியமாணாம் - திருடிக்கொண்டு போகப்படுகிறவளாய்
ந பஶ்யஸி - காணவில்லை.

ननु नामाविनीतानां विनेतासि परंतप ।
कथमेवंविधं पापं न त्वं शाधि हि रावणम् ॥

நநு நாமாவிநீதானாம் விநேதாஸி பரந்தப ।
கதமேவம்விதம் பாபம் ந த்வம் ஶாதி ஹி ராவணம் ॥ 29

பரந்தப - 'சத்ருசம்ஹாரகா!
அவிநீதானாம் - அபராதிகளை
விநேதா - சிக்ஷிக்கின்றவராய்
அஸி - விளங்குகின்றீர்.
ஹி - அப்படியிருந்தும்
நநு நாம - இப்பொழுதோ
ஏவம் விதம் - இப்படிப்பட்ட
பாபம் - பாபியாகிய
ராவணம் - ராவணனை
கதம் - ஏனோ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

த்வம் - தேவரீர்
ந ஶாதி - சிக்ஷியாதிருக்கிறீர்?

न तु सद्योऽविनीतस्य दृश्यते कर्मणः फलम् ॥

ந நு ஸத்யோऽவிநீதஸ்ய த்ருஶ்யதே கர்மண: பலம் ॥

அவிநீதஸ்ய - 'துஷ்டனுக்கு 30
கர்மண: - பாபச்செயலின்
பலம் - பயன்
ஸத்ய: - உடனே
ந த்ருஶ்யதே து - காணப்படவில்லையே!

कालोऽप्यङ्गीभवत्यत्र सस्यानामिव पक्तये ॥

காலோऽப்யங்கீபவத்யத்ர ஸஸ்யாநாமிவ பக்தயே।

அத்ராபி - 'இதிலும்
ஸஸ்யாநாம் - பயிர்களின்
பக்தயே - பயனடையும் விஷயத்தில்
இவ - எவ்வண்ணமோ, அப்படியே
கால: - அதற்கேற்ற, காலம்
அங்கீபவதி - காரணமாகிறது.

स कर्म कृतवानेतत् कालोपहतचेतनः ।
जीवितान्तकरं घोरं रामाद्व्यसनमाप्नुहि ॥

ஸ கர்ம க்ருதவாநேதத் காலோபஹத சேதந:।
ஜீவிதாந்தகரம் கோரம் ராமாத் வ்யஸநமாப்நுஹி ॥ 31

காலோபஹத சேதந:- 'விதிவசத்தால் கெட்ட புத்தியுடையவனாய்
ஏதத் கர்ம - இந்தக் காரியத்தை
க்ருதவாந் - செய்த
ஸ: - அந்த, நீ
ஜீவிதாந்தகரம் - உயிருக்கு முடிவை விளைவிக்கிறதும்
கோரம் - அஸஹ்யமானதுமான
வ்யஸநம் - சிக்ஷையை
ராமாத் - ராமரிடத்திலிருந்து
ஆப்நுஹி - அடைவாய்.

हन्तेदानीं सकामास्तु कैकेयी सह बान्धवैः ।
ह्रिये यद्धर्मकामस्य धर्मपत्नी यशस्विनः ॥

ஹந்தேதாநீம் ஸகாமாஸ்து கைகேயீ ஸஹ பாந்தவை:। 32
ஹ்ரியே யத் தர்மகாமஸ்ய தர்மபத்நீ யஶஸ்விந: ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தர்மகாமஸ்ய - 'தர்மத்தில் மிகுந்த பற்றுடைய
யஶஸ்விந: - பெரும் புகழ் படைத்தவருக்கு
தர்மபத்நீ - தர்மபத்னியாகும், நான்
ஹ்ரியே - திருடிப் போகப்படுகின்றேன்.
யத் - என்பதால்
இதாநீம் து - இப்பொழுதுதான்
கைகேயீ - கைகேயிதேவி
பாந்தவை: ஸஹ - பந்துக்களோடுகூட
ஸ காமா - மனோரதம் கைகூடியவள்.
ஹந்த - ஐயோ! கஷ்டம்! (குற்றமற்ற எங்கள் வருத்தத்தைக் கண்டு பிறர் மகிழக் காலம் கிட்டியதே).

आमन्त्रये जनस्थाने कर्णिकारान् सुपुष्पितान् ।
क्षिप्रं रामाय शंसध्वं सीतां हरति रावणः ॥

ஆமந்த்ரயே ஜனஸ்தானே கர்ணிகாரான் ஸுபுஷ்பிதான் ।
க்ஷிப்ரம் ராமாய ஶம்ஸத்வம் ஸீதாம் ஹரதி ராவண: ॥ 33

ஜனஸ்தானே - 'ஜனஸ்தானத்திலிருக்கும்
ஸுபுஷ்பிதான் - நன்கு புஷ்பித்திருக்கின்ற
கர்ணிகாரான் - கர்ணிகார விருக்ஷங்களைப் பார்த்து
ஆமந்த்ரயே - நான் வேண்டிக் கொள்கிறேன்.
ராவண: - ராவணன்,
ஸீதாம் - சீதையை
ஹரதி - திருடிப் போகிறான் என்று
ராமாய - ஸ்ரீராமருக்கு
க்ஷிப்ரம் - விரைவில்
ஶம் ஸத்வம் - தெரிவியுங்கள்.

दैवतानि च यान्यस्मिन् वने विविधपादपे ।
नमस्करोम्यहं तेभ्यो भर्तुः शंसत मां हृताम् ॥

தைவதானி ச யான்யஸ்மின் வனே விவிதபாதபே ।
நமஸ்கரோம்யஹம் தேப்யோ பர்து: ஶம்ஸத மாம் ஹ்ருதாம் ॥ 34

விவிதபாதபே - 'பலவகை மரங்களடர்ந்த
அஸ்மின் வனே - இந்தக் காட்டில்
தைவதாநி - தேவதைகள்
யானி ச - எவைகளோ,
தேப்ய: - அவைகளுக்கு
அஹம் - நான்
நமஸ்கரோமி - நமஸ்கரிக்கிறேன்.
மாம் - என்னை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஹ்ருதாம் - திருடப்பட்டவளாக
பர்து: - கணவனாருக்கு
ஶம்ஸத - சொல்லுங்கள்.

यानि कानिचिदप्यत्र सत्त्वानि निवसन्त्युत ।
सर्वाणि शरणं यामि मृगपक्षिगणानपि ॥

யாநி காநிசிதப்யத்ர ஸத்வாநி நிவஸந்த்யுத ।
ஸர்வாணி ஶரணம் யாமி ம்ருகபக்ஷிகணாநபி ॥ 35

யாநி காநிசித் - 'யாதொரு
ஸத்வாநி - பிராணிகள்
அத்ர - இங்கு
நிவஸந்தி - வசிக்கின்றனவோ
ஸர்வாணி - அந்த எல்லாவற்றையும்
ம்ருகபக்ஷிகணாந் அபி- மிருகங்கள் பக்ஷிகள் இந்த கணங்களையும்'
உத அபி - இன்னும் மற்றவைகளையும்
ஶரணம் - தஞ்சம்
யாமி - அடைகின்றேன்.

ह्रियमाणां प्रियां भर्तुः प्राणेभ्योऽपि गरीयसीम् ।
विवशापहृता सीता रावणेनेति शंसत ॥

ஹ்ரியமாணாம் ப்ரியாம் பர்து: ப்ராணேப்யோऽபி கரீயஸீம் ।
விவஶாபஹ்ருதா ஸீதா ராவணேநேதி ஶம்ஸத ॥ 36

பர்து: - 'கணவருக்கு
ப்ராணேப்ய: அபி - உயிரினும்
கரீயஸீம் - அருமையானவளும்
ஹ்ரியமாணாம் - திருடிக்கொண்டு போகப்படுகிறவளுமான
ப்ரியாம் - மனைவியைப்பற்றி
ஸீதா - சீதை
விவஶா - ரக்ஷகரில்லாது தவிப்பவளாய்
ராவணேந - ராவணனால்
அபஹ்ருதா - திருடிக்கொண்டு போகப்பட்டாள்,
இதி ஶம்ஸத - என்று சொல்லுங்கள்.

विदित्वा मां महाबाहुरमुत्रापि महाबलः ।
आनेष्यति पराक्रम्य वैवस्वतहृतामपि ॥

விதித்வா மாம் மஹாபாஹுரமுத்ராபி மஹாபல: ।
ஆநேஷ்யதி பராக்ரம்ய வைவஸ்வதஹ்ருதாமபி ॥ 37

மஹாபல: - 'மகா பலிஷ்டரான
மஹாபாஹு: - போர்வீரராகுமவர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாம் - என்னை
வைவஸ்வத - யமனால் கொண்டுபோகப்பட்டவளாக
ஹ்ருதாம் அபி - இருப்பினும்,
அமுத்ரா அபி - அவ்வுலகிலிருப்பவளாயும்
வித்வா - அறிந்து,
பராக்ரம்ய - (எதிரிகளை) புடைத்து,
ஆநேஷ்யதி - திருப்பிக்கொண்டு வந்துவிடுவார்.'

सा तदा करुणा वाचो विलपन्ती सुदुःखिता ।
वनस्पतिगतं गृध्रं ददर्शायतलोचना ॥

ஸா ததா கருணா வாசோ விலபந்தீ ஸுதுக்கிதா ।
வனஸ்பதி கதம் க்ருத்ரம் ததர்ஶாயதலோசநா ॥ 38

ததா - அப்பொழுது
ஸுதுக்கிதா - மிக துக்கப்படுகின்றவளாய்
கருணா: - கஷ்டமான
வாச: - புலம்பல்களை
விலபந்தீ - கதறிக்கொண்டிருப்பவளான
ஆயத லோசநா - அகன்ற கண்களுற்ற
ஸா - அவள்
வனஸ்பதி கதம் - ஓர் மரத்திலுட்கார்ந்திருக்கும்
க்ருத்ரம் - கழுகை (ஜடாயுவை)
ததர்ஶ - கண்டாள்.

सा तमुद्वीक्ष्य सुश्रोणी रावणस्य वशं गता ।
समाक्रन्दद्भयपरा शब्दोपहतया गिरा ॥

ஸா தமுத்வீக்ஷ்ய ஸுஶ்ரோணீ ராவணஸ்ய வஶம் கதா ।
ஸமாக்ரந்தத் பயபரா ஶப்தோபஹதயா கிரா ॥ 39

ராவணஸ்ய - ராவணனது
வஶம் கதா - வசத்தில் சிக்கிக்கொண்ட
ஸா ஸுஶ்ரோணீ - அந்த சுந்தரி
பயபரா - பயத்தால் தவிக்கின்றவளாய்
ஶப்தோப ஹதயா - தழுதழுத்து வரும்
கிரா - சொற்கொண்டு
தம் உத்வீக்ஷ்ய - அதைப் பார்த்து,
ஸமாக்ரந்தத் - அலறினாள்.

जटायो पश्य मामार्य ह्रियमाणामनाथवत् ।
अनेन राक्षसेन्द्रेण करुणं पापकर्मणा ॥

ஜடாயோ பஶ்ய மாமார்ய ஹ்ரியமாணா மநாதவத் ।
அனேன ராக்ஷஸேந்த்ரேண கருணம் பாபகர்மணா ॥ 40

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஜடாயோ - 'ஜடாயுவே!
ஆர்ய - பெரியவரே!
அநாதவத் - அநாதைபோல்
மாம் - என்னை
பாபகர்மணா - கொடிய செயலுற்ற
அனேன - இந்த
ராக்ஷஸேந்த்ரேண - அரக்க மன்னனால்
கருணம் - இரக்கமின்றி
ஹ்ரியமாணாம் - திருடிக்கொண்டு போகப்படுகிறவளாய்
பஶ்ய - அறியும்.

नैष वारयितुं शक्यस्त्वयाक्रूरो निशाचरः ।
सत्त्ववाञ्जितकाशी च सायुधश्चैव दुर्मतिः ॥

நைஷ வாரயிதும் ஶக்யஸ்த்வயா க்ரூரோ நிஶாசர: ।
ஸத்வவாஞ்ஜிதகாஶீ ச ஸாயுதஶ்சைவ துர்மதி: ॥ 41

ஜிதகாஶீ - 'போர்வீரனைப்போல் நடிக்கும்
ஏஷ: - இவன்
க்ரூர: நிஶாசர: - கொடிய அரக்கன்.
ஸத்வவான் - முரட்டுத்தைரியமுள்ளவன்.
துர்மதி: - அற்ப புத்தியுள்ளவன்.
ஸாயுத: ஏவ - ஆயுதங்களையும் தரித்தவனாகவிருக்கிறான்;
ச - ஆனதால்
த்வயா ச - உங்களாலும்
வாரயிதும் - தடுக்க
ந ஶக்ய: - முடியாதவன்.

रामाय तु यथातत्त्वं जटायो हरणं मम ।
लक्ष्मणाय च तत् सर्वमाख्यातव्यमशेषतः ॥

ராமாய து யதாதத்வம் ஜடாயோ ஹரணம் மம ॥ 42
லக்ஷ்மணாய ச தத் ஸர்வமாக்யாதவ்ய மஶேஷத: ॥

ஜடாயோ - 'ஜடாயுவே!
மம ஹரணம் - எனது அபகரித்தலை
யதாதத்வம் - நடந்தபடி
அஶேஷத: - எதையும் விடாமல்
தத் ஸர்வம் - அது முழுமையும்
ராமாய - ஸ்ரீராமருக்கும்
லக்ஷ்மணாய ச - லக்ஷ்மணருக்கும்
து - இப்பவே
ஆக்யாதவ்யம் - சொல்லப்பட வேண்டும்.'

இத்யார்ஷே ஸ்ரீமத் ராமாயணே வால்மீகீயே ஆதிகாவ்யே
சதுர்விம்ஶதி ஸஹஸ்ரிகாயாம் ஸம்ஹிதாயாம் ஆரண்ய காண்டே
ஸீதாபஹரணம் நாம ஏகோநபஞ்சாஶ: ஸர்க: ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பஞ்சாஶ: ஸர்க: - 50

तं शब्दमवसुप्तस्तु जटायुरथ शुश्रुवे ।
निरैक्षत च वैदेहीं रावणं च ददर्श ह ॥

தம் ஶப்தம் அவஸுப்தஸ்து ஜடாயுரத ஶுஶ்ருவே ।
நிரைக்ஷத ச வைதேஹீம் ராவணம் ச ததர்ஶ ஹ: ॥ 1

ஜடாயு:	-	ஜடாயு
அவஸுப்த: அபி	-	நன்கு தூங்கிக் கொண்டிருந்தவராயிருக்கையிலும்
து	-	அப்பொழுது
தம் ஶப்தம்	-	அந்த சப்தத்தை
ஶுஶ்ருவே	-	கேட்டார்.
வைதேஹீம் ச	-	சீதாதேவியையும்
நிரைக்ஷத	-	திரும்பிப் பார்த்தார்.
ராவணம் ச	-	ராவணனையும்
ததர்ஶ	-	கண்டார்.
ஹ	-	காண்!

ततः पर्वतकूटाभस्तीक्ष्णतुण्डः खगोत्तमः ।
वनस्पतिगतः श्रीमान् व्याजहार शुभां गिरम् ॥

தத: பர்வத கூடா பஸ்தீக்ஷ்ணதுண்ட: ககோத்தம: ।
வனஸ்பதிகத: ஸ்ரீமான் வ்யாஜஹார ஶுபாம் கிரம் ॥ 2

பர்வத கூடாப:	-	பர்வதசிகரம் போன்றவரும்
தீக்ஷ்ண துண்ட:	-	கூரிய மூக்குடையவரும்,
ஸ்ரீமான்	-	லக்ஷ்மீகடாக்ஷம் பெற்றவருமான
ககோத்தம:	-	பறவைகளிலுத்தமராகிய அவர்
வனஸ்பதிகத:	-	மரத்திலிருந்தவராகவே
தத:	-	அப்பொழுது
ஶுபாம் கிரம்	-	ஹிதமான பின்வரும் சொல்லை
வ்யாஜஹார	-	மொழிந்தார்.

दशग्रीव स्थितो धर्मे पुराणे सत्यसंश्रयः ।
जटायुर्नाम नाम्नाहं गृध्रराजो महाबलः ॥

தஶக்ரீவ ஸ்திதோ தர்மே புராணே ஸத்யஸம்ஶ்ரய: ।
ஜடாயுர்நாம நாம்நாஹம் க்ருத்ரராஜோ மஹாபல: ।

தஶக்ரீவ	-	'தசக்கிரீவா!
அஹம் ஜடாயு: நாம நாம்நா	-	நான் ஜடாயு எனப் பெயர் கொண்டவன்.
மஹாபல:	-	மகா பலிஷ்டனான

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

க்ருத்ர ராஜ: - கழுகரசு.
புராணே - தொன்றுதொட்டு வரும்
தர்மே - தர்மத்தில்
ஸ்தித: - பற்றுடையவன்.
ஸத்யஸம்ஶ்ரய: - சத்தியத்தையே ஸர்வமுமாய்க் கொண்டவன்.

राजा सर्वस्य लोकस्य महेन्द्रवरुणोपमः ।
लोकानां च हिते युक्तो रामो दशरथात्मजः ॥

ராஜா ஸர்வஸ்ய லோகஸ்ய மஹேந்த்ரவருணோபம: ।
லோகாநாம் ச ஹிதே யுக்தோ ராமோ தஶரதாத்மஜ: ॥ 4

தஶரதாத்மஜ: - 'தசரதரின் திருக்குமாரராகிய
ராம: - ஸ்ரீராமர்
ஸர்வஸ்ய - எல்லா
லோகஸ்ய - உலகிற்கும்
ராஜா - ஈசுவரர்.
மஹேந்த்ர வருணோபம: - இந்திரனுக்கும் வருணனுக்கும் சமமானவர்.
லோகாநாம் - பிரஜைகளுடைய
ஹிதே ச - நன்மையிலேயே
யுக்த: - ஈடுபட்டவர்.

तस्यैषा लोकनाथस्य धर्मपत्नी यशस्विनी ।
सीता नाम वरारोहा यां त्वं हर्तुमिहेच्छसि ॥

தஸ்யைஷா லோகநாதஸ்ய தர்மபத்நீ யஶஸ்விநீ ।
ஸீதா நாம வராரோஹா யாம் த்வம் ஹர்துமிஹேச்சஸி ॥ 5

யாம் - 'எவளை
த்வம் இஹ - நீ, இப்பொழுது
ஹர்தும் - திருட
இச்சஸி - துணிகின்றாயோ, அந்த
வராரோஹா - ஸ்திரீரத்னமாகிய
ஏஷா ஸீதா நாம - ஸீதையென்ற இவள்
தஸ்ய - அந்த
லோக நாதஸ்ய - லோகநாதருடைய
யஶஸ்விநீ - புகழ்பெற்ற
தர்மபத்நீ - தர்மபத்னீ.

कथं राजा स्थितो धर्मे परदारान् परामृशेत् ।
रक्षणीया विशेषेण राजदारा महाबल ॥

கதம் ராஜா ஸ்திதோ தர்மே பரதாரான் பராம்ருஶேத் । 6
ரக்ஷணீயா விஶேஷேண ராஜதாரா மஹாபல ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தர்மே ஸ்தித: - 'தர்மத்தில் பற்றுடைய
ராஜா - அரசன்
பரதாரான் - பிறர் மனைவிகளை
கதம் - எப்படி
பராம்ருஶேத் - தொடுவான்?
மஹாபல - மகாபலசாலியே!
ராஜதாரா: - ராஜர்களின் மனைவிகள்
விஶேஷேண - அதிக ஆதரவுடன்
ரக்ஷணீயா: - கார்க்கப்பட வேண்டியவர்கள்.

निवर्तय मतिं नीचां परदाराभिमर्शनात् ।
न तत् समाचरेद्धीरो यत् परोऽस्य विगर्हयेत् ॥

நிவர்தய மதிம் நீசாம் பரதாராபிமர்ஶநாத் ।
ந தத் ஸமாசரேத் தீரோ யத் பரோऽஸ்ய விகர்ஹயேத் ॥ 7

यथात्मनस्तथान्येषां दारा रक्ष्या विपश्चिता ॥

யதாத்மனஸ்ததான்யேஷாம் தாரா ரக்ஷ்யா விபஶ்சிதா ॥ 8

பரதாராபிமர்ஶநாத் - 'பிறர் மனைவிகளை கற்பழிப்பதினின்று
நீசாம் மதிம் - அற்ப புத்தியை
நிவர்தய - திருப்பிக்கொள்.
அஸ்ய - இவனது
யத் - எந்த ஒரு காரியத்தை
பர: - பிறன்
விகர்ஹயேத் - இகழ்வானோ,
தத் - அதை
தீர: - தர்மத்தில் பற்றுடைய அவன்
ந ஸமாசரேத் - செய்யான்.
விமர்ஶதா - நன்மை தீமைகளைப் பகுத்தறிகின்றவனால்
ஆத்மன: - தன்னுடையது
யதா - போலவே
அன்யேஷாம் - பிறர்களுடைய
தாரா: ததா - மனைவிகளும்
ரக்ஷ்யா: - பாதுகாக்கப்பட வேண்டியவர்கள்.

अर्थं वा यदि वा कामं शिष्टाः शास्त्रेष्वनागतम् ।
व्यवस्यन्त्यनुराजानं धर्मं पौलस्त्यनन्दन ॥

தர்மம் வா யதி வா காமம் ஶாஸ்த்ரேஷ்வநாகதம் ।
வ்யவஸ்யந்தி அநு ராஜனம்: பௌலஸ்த்யநந்தன ॥ 9

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பௌலஸ்த்ய நந்தன- 'விச்ரவஸின் புதல்வ!
ஶிஷ்டா: - அறிந்தவர்கள்
அனுராஜாநம் - மன்னனுக்கு
ஶாஸ்த்ரேஷு - சாஸ்திரங்களில்
அநாகதம் - ஒப்புக்கொள்ளப்படாத
தர்மம் வா - தர்மத்தையும்
அர்தம் வா - அர்த்தத்தையும்
காமம் யதி - காமத்தையும்
வ்யவஸ்யந்தி - நன்கு எடுத்துக் காட்டுகின்றனர்.

राजा धर्मश्च कामश्च द्रव्याणां चोत्तमो निधिः ।
धर्मः शुभं वा पापं वा राजमूलं प्रवर्तते ॥

ராஜா தர்மஶ்ச காமஶ்ச த்ரவ்யாணாம் சோத்தமோ நிதி: ।
தர்ம: ஶுபம் வா பாபம் வா ராஜமூலம் ப்ரவர்ததே ॥ 10

ராஜா ச - 'மன்னன்
தர்ம: - தர்மமாகிறான்.
காம: ச - காமமுமாகிறான்.
த்ரவ்யாணாம் - அர்த்தங்களுக்கு
உத்தம: - உத்தமமான
நிதி: ச - நிதியாகவுமாகிறான்.
தர்ம: - தர்மமும்
ஶுபம் வா - புண்யமும்
பாபம் வா - பாபமும்
ராஜமூலம் - அரசனடியாக
ப்ரவர்ததே - ஒவ்வொன்றும் உலகில் நிகழ்கிறது.

पापस्वभावश्चपलः कथं त्वं रक्षसां वर ।
ऐश्वर्यमभिसंप्राप्तो विमानमिव दुष्कृती ॥

பரபஸ்வபாவஶ்சபல: கதம் த்வம் ரக்ஷஸாம் வர । 11
ஐஶ்வர்ய மபிஸம்ப்ராப்தோ விமாநமிவ துஷ்க்ருதீ ॥

ரக்ஷஸாம் வர - 'அரக்கர்களில் உத்தம!
சபல: - முன்பின் யோசியாது எதற்குந்துணியும்
பாபஸ்வபாவ: - துஷ்ட ஸ்வபாவமுடைய
த்வம் - நீ,
துஷ்க்ருதீ - பாபியொருவன்
விமாநம் - ஸ்வர்க்கத்தை அடைவிக்கும் விமானத்தை
இவ - அடைவதுபோல்
ஐஶ்வர்யம் - ஐச்வர்யத்தை
கதம் - எப்படி
அபிஸம்ப்ராப்த: - அடைந்தனை?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

कामं स्वभावो यो यस्य न शक्यः परिमार्जितुम् ।
न हि दुष्टात्मनामार्यमावसत्यालये चिरम् ॥

காமம் ஸ்வபாவோ யோ யஸ்ய ந ஶக்ய: பரிமார்ஜிதும் ।
ந ஹி துஷ்டாத்மநாமார்யமாவஸத்யாலயே சிரம் ॥ 12

யஸ்ய - 'எவனொருவனுக்கு
ய: ஸ்வபாவ: - எதொன்று பிறவிக்குணமோ அதை
பரிமார்ஜிதும் - சீர்திருத்த
காமம் - முயலுகிறவன் என்ன பாடுபட்டாலும்
ந ஶக்ய: - முடியாது.
ஹி - ஆகையால்தான்
துஷ்டாத்மநாம் - பாபிகளுடைய
ஆலயே - சேர்க்கையில்
ஆர்யம் - பாக்கியம்
சிரம் - நீடித்தகாலம்
ந ஆவஸதி - இருக்கிறதில்லை.

विषये वा पुरे वा ते यदा रामो महाबलः ।
नापराध्यति धर्मात्मा कथं तस्यापराध्यसि ॥

விஷயே வா புரே வா தே யதா ராமோ மஹாபல: ।
நாபராத்யதி தர்மாத்மா கதம் தஸ்யாபராத்யஸி ॥ 13

மஹாபல: - 'மகா பலவானும்
தர்மாத்மா - தர்மாத்மாவுமாகிய
ராம: - ஸ்ரீராமர்
தே - உனது
விஷயே வா - நடவடிக்கையிலோ (அதிகார பூமியிலோ)
புரே வா - நகரிலோ
ந அபராத்யதி - குற்றம் செய்யவில்லை.
யதி - அப்படியிருக்கையில்
கதம் - என்ன காரணத்தைக்கொண்டு
தஸ்ய - அவருக்கு
அபராத்யஸி - தீமை செய்கின்றாய்?

यदि शूर्पणखाहेतोर्जनस्थानगतः खरः ।
अतिवृत्तो हतः पूर्वं रामेणाक्लिष्टकर्मणा ॥

யதி ஶூர்பணகாஹேதோர் ஜனஸ்தாந கத: கர: ।
அதிவ்ருத்தோ ஹத: பூர்வம் ராமேணாக்லிஷ்டகர்மணா ॥ 14

ஶூர்பணகாஹேதோ: - 'சூர்ப்பணகையின் பொருட்டு
ஜனஸ்தாந கத: - ஜனஸ்தானத்திலிருந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கர: - கரன்
பூர்வம் - முதலில்
அதிவ்ருத்த: யதி - நியாயம் மீறியவனாய் போருக்கு வந்ததால்
அக்லிஷ்டகர்மணா - குற்றமற எதையும் செய்யும்
ராமேண - ஸ்ரீராமரால்
ஹத: - கொல்லப்பட்டான்.

अत्र ब्रूहि यथातत्त्वं को रामस्य व्यतिक्रमः ।
यस्य त्वं लोकनाथस्य भार्यां हृत्वा गमिष्यसि ॥

அத்ர ப்ரூஹி யதாதத்வம் கோ ராமஸ்ய வ்யதிக்ரம: ।
யஸ்ய த்வம் லோகநாதஸ்ய பார்யாம் ஹ்ருத்வா கமிஷ்யஸி ॥ 15

அத்ர - 'இவ்விஷயத்தில்
யதாதத்வம் - நடந்தபடி உண்மையை
ப்ரூஹி - நீயே சொல்.
யஸ்ய - எந்த
லோகநாதஸ்ய - லோகநாதருடைய
பார்யாம் - மனைவியை
த்வம் ஹ்ருத்வா - நீ திருடி,
கமிஷ்யஸி - செல்லுகின்றனையோ (அந்த)
ராமஸ்ய - ஸ்ரீராமருடைய
வ்யதிக்ரம: - குற்றம்
க: - என்ன?

क्षिप्रं विसृज वैदेहीं मा त्वा घोरेण चक्षुषा ।
दहेद्दहनकल्पेन वृत्रमिन्द्राशनिर्यथा ॥

க்ஷிப்ரம் விஸ்ருஜ வைதேஹீம் மா த்வா கோரேண சக்ஷுஷா ।
தஹேத் தஹன கல்பேன வ்ருத்ரமிந்த்ராஶநிர் யதா ॥ 16

வைதேஹீம் - 'சீதாதேவியை
க்ஷிப்ரம் விஸ்ருஜ - உடனே விட்டுவிடு.
வ்ருத்ரம் - விருத்திராசுரனை
இந்த்ரஶநி: - இந்திரனது வஜ்ராயுதம்
யதா - எப்படியோ அப்படியே
தஹன கல்பேன - அக்னியை நிகர்த்த
கோரேண - தீக்ஷ்ணமான
சக்ஷுஷா - பார்வையால்
த்வா - உன்னை
மா தஹேத் - அவர் எரிக்காதிருக்கட்டும்.

सर्पमाशीविषं बध्वा वस्त्रान्ते नावबुध्यसे ।
ग्रीवायां प्रतिसुक्तं च कालपाशं न पश्यसि ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸர்பமாஶீவிஷம் பத்த்வா வஸ்த்ராந்தே நாவபுத்யஸே ।
க்ரீவாயாம் ப்ரதிமுக்தம் ச காலபாஶம் ந பஶ்யஸி ॥ 17

ஆஶீவிஷம் - 'கொடிய விஷமுள்ள
ஸர்பம் - பாம்பை
வஸ்த்ராந்தே - வஸ்திரத்தில்
பத்த்வா - முடிந்துகொண்டு
நாவபுத்யஸே - உள்ளபடி அறியாதிருக்கின்றனை.
காலபாஶம் - யமனது பாசத்தை
க்ரீவாயாம் - கழுத்தில்
ப்ரதி ஸக்தம் ச - மாட்டிக்கொண்டதாகவும்
ந பஶ்யஸி - அறியாதிருக்கின்றாய்.

स भारः सौम्य भर्तव्यो यो नरं नावसादयेत् ।
तदन्नमपि भोक्तव्यं जीर्यते यदनामयम् ॥

ஸ பார: ஸௌம்ய பர்தவ்யோ யோ நரம் நாவஸாதயேத் ।
ததந்நமபி போக்தவ்யம் ஜீர்யதே யதநாமயம் ॥ 18

ஸௌம்ய - 'குணத்தைக்கொள்ளும் குணவானே!
யோ பார: - எந்த ஒரு சுமை
நரம் - ஓர் மனிதனை
ந அவஸாதயேத் - அமுக்கிவிடாதோ!
ஸ: பர்தவ்ய: - அதுதான் சுமக்கக்கூடும்.
யத் அந்நம் - எந்த உணவு
அநாமயம் - நோய்க்கிடமின்றி
ஜீர்யதே - ஜீர்ணமாகுமோ
தத் அபி - அதுதான்
போக்தவ்யம் - புசிக்கத் தகுந்தது.

यत् कृत्वा न भवेद्धर्मो न कीर्तिर्न यशो भुवि ।
शरीरस्य भवेत् खेदः कस्तत् कर्म समाचरेत् ॥

யத் க்ருத்வா ந பவேத் தர்மோ ந கீர்திர் ந யஶோ புவி ।
ஶரீரஸ்ய பவேத்கேத: கஸ்தத்கர்ம ஸமாசரேத் ॥ 19

புவி - 'உலகில்
யத் க்ருத்வா - எதொன்றை செய்து,
தர்ம: - தர்மம்
ந பவேத் - உண்டாகாதோ,
கீர்தி: ந - புகழ் உண்டாகாதோ,
யஶ: ந - பெருமை உண்டாகாதோ,
ஶரீரஸ்ய - சரீரத்திற்கு
கேத: - சிரமம்தான்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பவேத் - உண்டாகுமோ,
தத் கர்ம - அந்தக் காரியத்தை
க: ஸமாசரேத் - எவன் செய்வான்?

षष्टिर्वर्षसहस्राणि मम जातस्य रावण ।
पितृपैतामहं राज्यं यथावदनुतिष्ठतः ॥

ஷஷ்டிர்வர்ஷ ஸஹஸ்ராணி மம ஜாதஸ்ய ராவண।
பித்ருபைதாமஹம் ராஜ்யம் யதாவதநுதிஷ்டத: ॥ 20

ராவண - 'ராவணா!
பித்ரு பைதாமஹம் - பரம்பரையாய் வந்த
ராஜ்யம் - ராஜ்யத்தை
யதாவத் - முறைப்படி
அநுதிஷ்டத: - பரிபாலித்துவரும்
மம ஜாதஸ்ய - நான் பிறந்து
ஷஷ்டி: வர்ஷ ஸஹஸ்ராணி - அறுபதினாயிரம் வருஷங்களாகின்றன.

वृद्धोऽहं त्वं युवा धन्वी सरथः कवची शरी ।
तथाप्यादाय वैदेहीं कुशली न गमिष्यसि ॥

வ்ருத்தோऽஹம் த்வம் யுவா தன்வீ ஸரத: கவசீ ரதீ।
ததாப்யாதாய வைதேஹீம் குஶலீ ந கமிஷ்யஸி ॥ 21

அஹம் வ்ருத்த: - 'நான் கிழவன்;
த்வம் யுவா - நீயோ பலவான்;
தன்வீ - விற்பிடித்தவன்;
ஸரத: - ரதத்திலிருப்பவன்;
கவசீ - கவசம் பூண்டவன்;
ஶரீ - பாணமுடையவன்.
ததா அபி - அப்படியிருந்தும்
வைதேஹீம் - சீதாதேவியை
ஆதாய - தூக்கிக்கொண்டு,
குஶலீ - க்ஷேமமாய்
ந கமிஷ்யஸி - செல்லமாட்டாய்.

न शक्तस्त्वं बलाद्धर्तुं वैदेहीं मम पश्यतः ।
हेतुभिर्न्यायसंयुक्तैर्ध्रुवां वेदश्रुतीमिव ॥

ந ஶக்தஸ்த்வம் பலாத் ஹர்தும் வைதேஹீம் மம பஶ்யத:। 22
ஹேதுபிர் ந்யாய ஸம்யுக்தைர் த்ருவாம் வேதஶ்ருதீமிவ ॥

த்வம் - 'நீ,
மம - நான்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பஶ்யத: - பார்த்துக்கொண்டிருக்கையில்
நியாய ஸம்யுக்தை: - யுக்தியுக்தமான
ஹேதுபி: - காரணங்களால்
த்ருவாம் - ஒரே பொருளுடைய
வேதஶ்ருதீம் - வேதார்த்தத்தை
இவ - எப்படி மாற்றமுடியாதோ அப்படியே
வைதேஹீம் - சீதாதேவியை
பலாத் - பலாத்காரமாக
ஹர்தும் ந ஶக்த: - திருட முடியாது.

युध्यस्व यदि शूरोऽसि मुहूर्तं तिष्ठ रावण ।
शयिष्यसे हतो भूमौ यथा पूर्वं खरस्तथा ॥

யுத்யஸ்வ யதி ஶூரோऽஸி முஹூர்தம் திஷ்ட ராவண ।
ஶயிஷ்யஸே ஹதோ பூமௌ யதா பூர்வம் கரஸ்ததா ॥ 23

ராவண - 'ராவணா!
ஶூர: - சூரனாக
யதி அஸி - நீ இருக்கின்றாயென்றால்
யுத்யஸ்வ - போர்புரி;
முஹூர்தம் - சற்று
திஷ்ட - நில்லு.
பூர்வம் - இதற்கு முன்
கர: - கரன்
யதாததா - எப்படியோ அப்படியே
ஹத: - கொல்லப்பட்டு
பூமௌ - பூமியில்
ஶயிஷ்யஸே - நீண்ட துயில் கொள்வாய்.

असकृत् संयुगे येन निहता दैत्यदानवाः ।
नचिराच्चीरवासास्त्वां रामो युधि वधिष्यति ॥

அஸக்ருத் ஸம்யுகே யேந நிஹதா தைத்ய தாநவா: ।
ந சிராச் சீரவாஸாஸ்த்வாம் ராமோ யுதி வதிஷ்யதி ॥ 24

யேந - 'எவரால்
தைத்யதானவா: - தைத்யர்களும் தானவர்களும்
ஸம்யுகே - போரில்
அஸக்ருத் - பலமுறையில்,
நிஹதா: - கொல்லப்பட்டார்களோ, அந்த
சீரவாஸா: - மரவுரியுடுத்திய
ராம: - ஸ்ரீராமர்
யுதி - போரில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

த்வாம் - உன்னை
ந சிராத் - சீக்கிரத்திலேயே
வதிஷ்யதி - கொல்வார்.

किं नु शक्यं मया कर्तुं गतौ दूरं नृपात्मजौ ।
क्षिप्रं त्वं नश्यसे नीच तयोर्भीतो न संशयः ।।

கிம் நு ஶக்யம் மயா கர்தும் கதௌ தூரம் ந்ருபாத்மஜௌ ।
க்ஷிப்ரம் த்வம் நஶ்யஸே நீச தயோர் பீதோ ந ஸம்ஶய: ॥ 25

தூரம் கதௌ - 'வெகுதூரத்திலிருக்கும்
ந்ருபாத்மஜௌ - சக்ரவர்த்தி குமாரர் இருவர்கள், ஸ்ரீராமலக்ஷ்மணர்களுக்கு
கர்தும் - தகவல் கொடுப்பதற்கு
மயா - என்னால்
கிம்நு ஶக்யம் - எப்படி முடியும்?
நீச - அல்ப!
தயோ: - அவ்விருவர்களுக்கு
பீத: - பயந்தோடுகிற
த்வம் - நீ
க்ஷிப்ரம் நஶ்யஸே - இதோ அழிகிறாய்.
ந ஸம்ஶய: - இதற்கையமில்லை.

न हि मे जीवमानस्य नयिष्यसि शुभामिमाम् ।
सीतां कमलपत्राक्षीं रामस्य महिषीं प्रियाम् ।।

ந ஹி மே ஜீவமானஸ்ய நயிஷ்யஸி ஶுபாமிமாம் ।
ஸீதாம் கமலபத்ராக்ஷீம் ராமஸ்ய மஹிஷீம் ப்ரியாம் ॥ 26

மே - 'நான்
ஜீவமானஸ்ய - உயிருடனிருக்கும் வரையில்
கமல பத்ராக்ஷீம் - தாமரையிதழ் போன்ற கண்களையுடையவளும்,
ஶுபாம் - புண்யவதியுமான
இமாம் - இந்த
ராமஸ்ய - ஸ்ரீராமருக்கு
ப்ரியாம் - அருமையான
மஹிஷீம் - பட்டமகிஷியாகிய
ஸீதாம் - சீதாதேவியை
ந நயிஷ்யஸி ஹி - நீ எடுத்துப்போகவே முடியாது.

अवश्यं तु मया कार्यं प्रियं तस्य महात्मनः ।
जीवितेनापि रामस्य तथा दशरथस्य च ।।

அவஶ்யம் து மயா கார்யம் ப்ரியம் தஸ்ய மஹாத்மன: । 27
ஜீவிதேநாபி ராமஸ்ய ததா தஶரதஸ்ய ச ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தஸ்ய மஹாத்மன: - 'அந்த மகாத்மாவான
ராமஸ்ய - ஸ்ரீராமருக்கும்
ததா - அப்படியே
தஶரதஸ்ய ச - தசரதருக்கும்
ப்ரியம் - இஷ்டமானது
மயா - என்னால்
ஜீவிதேந அபி - உயிரைக் கொடுத்தாவது
அவஶ்யம் - அவசியம்
கார்யம் து - செய்யத்தக்கதே.

तिष्ठ तिष्ठ दशग्रीव मुहूर्तं पश्य रावण ।
युद्धातिथ्यं प्रदास्यामि यथाप्राणं निशाचर ॥

திஷ்ட திஷ்ட தஶக்ரீவ முஹூர்தம் பஶ்ய ராவண ।
யுத்தாதித்யம் ப்ரதாஸ்யாமி யதாப்ராணம் நிஶாசர ॥

தஶக்ரீவ - 'தசக்ரீவ!
திஷ்ட திஷ்ட - ஓடாது நில், நில்.
நிஶாசர - அரக்கா!
யதாப்ராணம் - நீ உயிருடனிருக்கும் வரையில்
யுத்தாதித்யம் - யுத்த விருந்தை
ப்ரதாஸ்யாமி - நான், அளிப்பேன்.
ராவண - ராவணா!
முஹூர்தம் - சற்று
பஶ்ய - நேரில் அனுபவி.

वृन्तादिव फलं त्वां तु पातयेयं रथोत्तमात् ॥

வ்ருந்தாதிவ பலம் த்வாம் து பாதயேயம் ரதோத்தமாத் ॥ 28

வ்ருந்தாத் - 'காம்பிலிருந்து
பலம் - பழத்தை
இவ - எப்படியோ அப்படியே
த்வாம் - உன்னை
ரதோத்தமாத் - சிறந்த தேரிலிருந்து
து - இப்பொழுதே
பாதயேயம் - வீழ்த்துவேன்.'

இத்யார்ஷே ஸ்ரீமத் ராமாயணே வால்மீகீயே ஆதிகாவ்யே சதுர்விம்ஶதி ஸஹஸ்ரிகாயாம் ஸம்ஹிதாயாம் ஆரண்ய காண்டே ஜடாயுரபியோகோ நாம பஞ்சாஶ: ஸர்க: ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

इत्युक्तस्य यथान्यायं रावणस्य जटायुषा ।
क्रुद्धस्याग्निनिभाः सर्वा रेजुर्विंशतिदृष्टयः ॥

இத்யுக்தஸ்ய யதாந்யாயம் ராவணஸ்ய ஜடாயுஷா।
க்ருத்தஸ்யாக்நிநிபா: ஸர்வா ரேஜுர்விம்ஶதி த்ருஷ்டய: ॥ 1

இதி - இவ்வாறு
ஜடாயுஷா - ஜடாயுவால்
யதாந்யாயம் - நியாயமாய்
உக்தஸ்ய - சொல்லப்பட்டவனாய்
க்ருத்தஸ்ய - சினங்கொண்ட
ராவணஸ்ய - ராவணனது
விம்ஶதி த்ருஷ்டய: - இருபது கண்கள்
ஸர்வா: - எல்லாமும்
அக்நிநிபா: - அக்னியை நிகர்த்து
ரேஜு: - ஜ்வலித்தன.

संरक्तनयनः कोपात् तप्तकाञ्चनकुण्डलः ।
राक्षसेन्द्रोऽभिदुद्राव पतगेन्द्रममर्षणः ॥

ஸம்ரக்தநயந: கோபாத் தப்த காஞ்சன குண்டல:।
ராக்ஷஸேந்த்ரோऽபி துத்ராவ பதகேந்த்ரமமர்ஷண: ॥ 2

தப்த காஞ்சன குண்டல: - நல்ல பொன்குண்டலங்களணிந்த
ராக்ஷஸேந்த்ர: - ராக்ஷஸமன்னன்
அமர்ஷண: - சகிக்காதவனாய்
க்ரோதாத் - கோபத்தால்
ஸ்ம்ரக்த நயந: - கண்கள் சிவந்தவனாய்
பதகேந்த்ரம் - பக்ஷிராஜனை (ஜடாயுவை)
அபி துத்ராவ - விரைந்தெதிர்த்தான்.

स संप्रहारस्तुमुलस्तयोस्तस्मिन् महावने ।
बभूव वातोद्धतयोर्मेघयोर्गगने यथा ॥

ஸ ஸம்ப்ரஹாரஸ்துமுலஸ்தயோஸ் தஸ்மின் மஹாவனே।
பபூவ வாதோத்தத தயோர் மேகயோர் ககனே யதா ॥ 3

தஸ்மின் - அந்த
மஹாவனே - பெருங்கானகத்தில்
தயோ: - அவ்விருவர்களுக்கும்
துமுல: - கடுமையான

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ: ஸம்ப்ரஹாரः - அந்த யுத்தமானது
ககனே - ஆகாயத்தில்
வாதோத்தத தயோ: - பெருங்காற்றால் மோதுண்ட
மேகயோ: - இரு மேகங்களுக்குள்
யதா - எப்படியோ அப்படியே
பபூவ - உண்டானது.

1 तद्बभूवाद्भुतं युद्धं गृध्रराक्षसयोस्तदा ।
सपक्षयोर्माल्यवतोर्महापर्वतयोरिव ॥

தத்பபூவாத்புதம் யுத்தம் க்ருத்ர ராக்ஷஸயோஸ் ததா ।
ஸபக்ஷயோர் மால்யவதோர் மஹா பர்வதயோரிவ ॥ 4

ததா - அப்பொழுது
க்ருத்ர ராக்ஷஸயோ: - கழுகுக்கும் அரக்கனுக்கும்
அத்புதம் - ஆச்சரியமான
தத் யுத்தம் - அந்த போர்
ஸபக்ஷயோ: - சிறகுகளையுடைய
மால்யவதோ: - மால்யவானென்கிற
மஹா பர்வதயோ: - இரு மகா பர்வதங்களுக்கும்
இவ - எப்படியோ அப்படியே
பபூவ - நிகழ்ந்தது.

2 ततो नालीकनाराचैस्तीक्ष्णाग्रैश्च विकर्णिभिः ।
अभ्यवर्षन्महाघोरैर्गृध्रराजं महाबलः ॥

ததோ நாளீகநாராசைஸ் தீக்ஷணாக்ரைஶ்ச விகர்ணிபி: ।
அப்யவர்ஷன் மஹா கோரைர் க்ருத்ரராஜம் மஹாபல: ॥ 5

மஹாபல: - மகா பலவானாகுமவன்
தத: - அப்பொழுது
மஹாகோரை: - மிகக் கொடிய
தீக்ஷணாக்ரை: - கூரிய முனைகளுடைய
நாளீக நாராசை: - 'நாளீகம், நாராசம்' என்னும் பாணங்களாலும்
விகர்ணிபி: ச - 'விகர்ணி'யெனும் பாணங்களாலும்
க்ருத்ர ராஜம் - கழுகு அரசன்மீது
அப்யவர்ஷத் - பொழிந்தான்.

3 स तानि शरजालानि गृध्रः पत्ररथेश्वरः ।
जटायुः प्रतिजग्राह रावणास्त्राणि संयुगे ॥

ஸ தானி ஶரஜாலாநி க்ருத்ர: பத்ர ரதேஶ்வர: ।
ஜடாயு: ப்ரதிஜக்ராஹ ராவணாஸ்த்ராணி ஸம்யுகே ॥ 6

ஸ: - அந்த
பத்ர ரதேஶ்வர: - பக்ஷிராஜனாகிய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஜடாயு: - ஜடாயுவென்ற
க்ருத்ர: - கழுகு
ஸம்யுகே - போரில்
ராவணாஸ்த்ராணி - ராவணனால் விடுக்கப்பட்ட
தானி - அந்த
ஶரஜாலாநி - பாணவர்ஷங்களை
ப்ரதிஜக்ராஹ - ஸ்வீகரித்தார்.

तस्य तीक्ष्णनखाभ्यां तु चरणाभ्यां महाबलः ।
चकार बहुधा गात्रे व्रणान् पतगसत्तमः ॥

தஸ்ய தீக்ஷ்ண நகாப்யாம் து சரணாப்யாம் மஹாபல: ।
சகார பஹுதா காத்ரே வ்ரணான் பதக ஸத்தம: ॥ 7

மஹாபல: - மகா பலவானாகிய
பதக ஸத்தம: - பறவைகளிலுத்தமராகுமவர்
தஸ்ய காத்ரே - அவனது உடம்பில்
தீக்ஷ்ண நகாப்யாம் - கூரிய நகங்களுள்ள
சரணாப்யாம் து - இரு கால்களைக் கொண்டே
பஹுதா - பலவிடங்களில்
வ்ரணான் சகார - காயம் பண்ணினார்.

अथ क्रोधाद्दशग्रीवो जग्राह दश मार्गणान् ।
मृत्युदण्डनिभान् घोराञ्छत्रुमर्दनकाङ्क्षया ॥

அத க்ரோதாத் தஶக்ரீவோ ஜக்ராஹ தஶ மார்கணான் ।
ம்ருத்யு தண்ட நிபான் கோரான் ஶத்ரு மர்தன காங்க்ஷயா ॥ 8

அத - அப்பொழுது
தஶக்ரீவ: - தசக்ரீவன்
க்ரோதாத் - கோபத்தால்
ஶத்ரு மர்தன காங்க்ஷயா - சத்ருவையொழிப்பதில் ஊக்கத்தால்
தஶ - பத்து
ம்ருத்யு தண்ட நிபான் - காலதண்டத்திற்கீடான
கோரான் - பயங்கரமாயுள்ள
மார்கணான் - பாணங்களை
ஜக்ராஹ - எடுத்தான்.

स तैर्बाणैर्महावीर्यः पूर्णमुक्तैरजिह्मगैः ।
बिभेद निशितैस्तीक्ष्णैर्गृध्रं घोरैः शिलीमुखैः ॥

ஸ தைர் பாணைர் மஹாவீர்ய: பூர்ண முக்தைரஜிஹ்மகை: । 9
பிபேத நிஶிதைஸ் தீக்ஷ்ணைர் க்ருத்ரம் கோரை: ஶிலீமுகை: ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மஹாவீர்ய: - மகா வீர்யவானானும்
ஸ: - அவன்
பூர்ண முக்தை: - பலங்கொண்டு இழுத்துவிடப்பட்டவைகளும்,
அஜிஹ்மகை: - நேராகச் செல்பவைகளும்,
நிமிதை: - கூரியவைகளும்,
தீக்ஷ்ணை: - விஷம் பூசப்பெற்றவைகளும்,
கோரை: - கொடியவைகளும்,
ஶிலீமுகை: - நுனியில் முள்ளுள்ளவைகளுமான
தை: பாணை: - அந்த பாணங்களால்
க்ருத்ரம் - கழுகை
பிபேத - எய்தான்.

स राक्षसरथे पश्यञ्जानकीं बाष्पलोचनाम् ।
अचिन्तयित्वा तान् बाणान् राक्षसं समभिद्रवत् ॥

ஸ ராக்ஷஸரதே பஶ்யஞ்ஜாநகீம் பாஷ்ப லோசநாம் ।
அசிந்தயித்வா தான் பாணாந் ராக்ஷஸம் ஸமபித்ரவத் ॥ 10

ஸ: - அவர்
ஜாநகீம் - ஜானகியை
ராவணரதே - ராவண ரதத்தில்
பாஷ்ப லோசநாம் - கண்களில் நீர் ததும்பியவளாய்
பஶ்யன் - கவனித்துக்கொண்டே
தான் பாணாந் - அந்த பாணங்களை
அசிந்தயித்வா - பொருட்படுத்தாது
ராக்ஷஸம் - அரக்கனை
ஸமபித்ரவத் - விரைந்தெதிர்த்தார்.

ततोऽस्य सशरं चापं मुक्तामणिविभूषितम् ।
चरणाभ्यां महातेजा बभञ्ज पतगेश्वरः ॥

ததோऽஸ்ய ஸஶரம் சாபம் முக்தாமணி விபூஷிதம் ।
சரணாப்யாம் மஹாதேஜா பபஞ்ஜ பதகேஶ்வர: ॥ 11

மஹாதேஜா: - மிக வலுவுடைய
பதகேஶ்வர: - பக்ஷிராஜன்
தத: - அப்பொழுது
அஸ்ய - இவனது
முக்தாமணி விபூஷிதம் - முத்தும் மாணிக்கமுமிழைக்கப்பெற்ற
சாபம் - வில்லை
ஸஶரம் - பாணங்களோடுகூட
சரணாப்யாம் - இரு கால்களாலும்
பபஞ்ஜ - முறித்தெறிந்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ततोऽन्यद्धनुरादाय रावणः क्रोधमूर्छितः ।
ववर्ष शरवर्षाणि शतशोऽथ सहस्रशः ॥

ததோऽன்யத் தநுராதாய ராவண: க்ரோத மூர்ச்சித: ।
வவர்ஷ ஶரவர்ஷாணி ஶதஶோऽத ஸஹஸ்ரஶ: ॥ 12

தத:	- அதனால்
ராவண:	- ராவணன்
க்ரோத மூர்ச்சித:	- கோபாவேசங்கொண்டவனாகி
அன்யத்	- வேறொரு
தநு:	- வில்லை
ஆதாய	- எடுத்துக்கொண்டு,
அத	- அப்பொழுது
ஶரவர்ஷாணி	- பாணவர்ஷங்களை
ஶதஶ:	- நூற்றுக்கணக்காகவும்
ஸஹஸ்ரஶ:	- ஆயிரக்கணக்காகவும்
வவர்ஷ	- பொழிந்தான்.

शरैरावारितस्तस्य संयुगे पतगेश्वरः ।
कुलायमुपसंप्राप्तः पक्षीव प्रबभौ तदा ॥

ஶரைராவாரிதஸ்தஸ்ய ஸம்யுகே பதகேஶ்வர: ।
குலாய முபஸம்ப்ராப்த: பக்ஷீவ ப்ரபபௌ ததா ॥ 13

ஸம்யுகே	- போரில்
தஸ்ய	- அவனுடைய
ஶரை:	- பாணங்களால்
ஆவாரித:	- மூடுண்ட
ஸ: பதகேஶ்வர:	- அந்த பக்ஷிராஜர்
குலாயம்	- கூட்டில்
உபஸம்ப்ராப்த:	- பதுங்கிய
பக்ஷி இவ	- பக்ஷிபோல்
ததா	- அப்பொழுது
பபௌ	- விளங்கினார்.

स तानि शरवर्षाणि पक्षाभ्यां च विधूय च ।
चरणाभ्यां महातेजा बभञ्जास्य महद्धनुः ॥

ஸ தாநி ஶரவர்ஷாணி பக்ஷாப்யாம் ச விதூய ச । 14
சரணாப்யாம் மஹாதேஜா பபஞ்ஜாஸ்ய மஹத்தநு: ॥

மஹாதேஜா:	- மிக வலுவுற்ற
ஸ:	- அவர்
தாநி	- அந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஶரஜாலானி - பாணவர்ஷங்களை
பக்ஷாப்யாம் - இரு சிறகுகளாலும்
விதூய - உதறித் தள்ளிவிட்டு,
அஸ்ய - இவனது
மஹத்தநு: ச - பெரும் தனுசையும்
சரணாப்யாம் து - இரு கால்களினாலேயே
பபஞ்ஜ - முறித்தெறிந்தார்.

तच्चाग्निसदृशं दीप्तं रावणस्य शरावरम् ।
पक्षाभ्यां स महावीर्यो व्याधुनोत् पतगेश्वरः ॥

தச்சாக்நி ஸத்ருஶம் தீப்தம் ராவணஸ்ய ஶராவரம் ।
பக்ஷாப்யாம் ச மஹா வீர்யோ வ்யாதுநோத் பதகேஶ்வர: ॥ 15

ஸ: - அந்த
மஹாவீர்ய: - மகா பலமுற்ற
பதகேஶ்வர: - பக்ஷி அரசன்
ராவணஸ்ய - ராவணனது
அக்நி ஸத்ருஶம் - அக்னியை நிகர்த்து
தீப்தம் - ஜ்வலிக்கும்
தத் - அந்த
ஶராவரம் ச - கவசத்தையும்
பக்ஷாப்யாம் - இரு சிறகுகளால்
வ்யாதுநோத் - துகளாக்கினார்.

काञ्चनोरश्छदान् दिव्यान् पिशाचवदनान् खरान् ।
तांश्चास्य जवसंपन्नाञ्जघान समरे बली ॥

காஞ்சநோரஶ்சதான் திவ்யான் பிஶாசவதநாந் கரான் ।
தாம்ஶ்சாஸ்ய ஜவஸம்பந்நாஞ்ஜகான ஸமரே பலீ ॥ 16

பலீ - பலவானாகும் அவர்
ஸமரே - போரில்
அஸ்ய - இவனது
தான் - அந்த
காஞ்சநோரஶ்சதான் - பொன்மயமான கவசங்களையுடையனவும்,
திவ்யான் - சிறந்தனவும்,
பிஶாசவதநாத் - பேய்முகங்களுற்றனவும்,
ஜவஸம்பந்நாந் - மிக வேகம் பெற்றனவுமான
கரான் ச - கோவேறுகழுதைகளையும்
ஜகான - கொன்று வீழ்த்தினார்.

वरं त्रिवेणुसंपन्नं कामगं पावकार्चिषम् ।
मणिहेमविचित्राङ्गं बभञ्ज च महारथम् ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வரம் த்ரிவேணுஸம்பந்நம் காமகம் பாவகார்சிஷம் ।
மணி ஹேம விசித்ராங்கம் பபஞ்ஜ ச மஹாரதம் ॥ 17

வரம் - சிறந்ததும்,
த்ரிவேணு ஸம்பந்நம் - ஏர்க்காலுகளையுடையதும்,
காமகம் - நினைத்தபடி செல்லவல்லதும்,
பாவகார்சிஷம் - தீயெனஜ்வலிக்கிறதும்,
மணிஹேம விசித்ராங்கம் - ரத்னங்களிழைத்து பொன்னால் செய்யப்பட்டு அழகுவாய்ந்த சக்கிரங்களையுடையதுமான
மஹாரதம் ச - பெரிய ரதத்தையும்
பபஞ்ஜ - முறித்தெறிந்தார்.

पूर्णचन्द्रप्रतीकाशं छत्रं च व्यजनैः सह ।
पातयामास वेगेन ग्राहिभी राक्षसैः सह ॥

பூர்ணசந்த்ர ப்ரதீகாஶம் சத்ரம் ச வ்யஜனை: ஸஹ ।
பாதயாமாஸ வேகேந க்ராஹிபீ ராக்ஷஸை: ஸஹ ॥ 18

பூர்ண சந்த்ர ப்ரதீகாஶம் - பூர்ணசந்திரனையொத்த
சத்ரம் ச - குடையையும்
வ்யஜனை: ஸஹ - சாமரங்களோடுகூடவும்
க்ராஹிபி: - அவைகளைப் பிடித்துக்கொண்டிருந்த
ராக்ஷஸை: ஸஹ - அரக்கர்களோடுகூடவே
வேகேந - வேகமாய்
பாதயாமாஸ - வீழ்த்தித் தள்ளினார்.

सारथेश्चास्य वेगेन तुण्डेनैव महच्छिरः ।
पुनर्व्यपाहरच्छ्रीमान् पक्षिराजो महाबलः ॥

ஸாரதேஶ்சாஸ்ய வேகேந துண்டேநைவ மஹச் சிர: ।
புனர்வ்யபாஹரத் ஶ்ரீமான் பக்ஷிராஜோ மஹாபல: ॥ 19

மஹாபல: - மகா வலிவுற்றவரும்
ஶ்ரீமான் - ஶ்ரீமானுமாகிய
பக்ஷிராஜ: - பக்ஷி அரசு
அஸ்ய - இவனது
ஸாரதே: - சாரதியினுடைய
மஹத் சிர: ச - பெரும் தலையையும்
துண்டேந ஏவ - மூக்கினாலேயே
வேகேந - வேகமாய்
புன: - விட்டு விட்டு
வ்யபாஹரத் - கொத்தி எறிந்தார்.

स भग्नधन्वा विरथो हताश्वो हतसारथिः ।
अङ्केनादाय वैदेहीं पपात भुवि रावणः ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ பக்நதன்வா விரதோ ஹதாஶ்வோ ஹதஸாரதி: ।
அங்கேநாதய வைதேஹீம் பபாத புவி ராவண: ॥ 20

ஸ: ராவண: - அந்த ராவணன்
பக்ந தன்வா - வில் முறிந்தவனாய்
விரத: - ரதமொழிந்தவனாய்
ஹதாஶ்வ: - குதிரைகளிழந்தவனாய்
ஹத ஸாரதி: - சாரதியிறந்தவனாய்
வைதேஹீம் - வைதேகிதேவியை
அங்கேந - மடியில்
ஆதாய - வைத்துக்கொண்டு,
புவி - பூமியில்
பபாத - வந்துநின்றான்.

दृष्ट्वा निपतितं भूमौ रावणं भग्नवाहनम् ।
साधु साध्विति भूतानि गृध्रराजमपूजयन् ॥

த்ருஷ்ட்வா நிபதிதம் பூமௌ ராவணம் பக்நவாஹனம் ।
ஸாது ஸாத்விதி பூதாநி க்ருத்ர ராஜ மபூஜயன் ॥ 21

பூதாநி - பிராணிகள்
ராவணம் - ராவணனை
பக்நவாஹனம் - வாகனமிழந்தவனாய்
பூமௌ - தரையில்
நிபதிதம் - நிற்கின்றவனாய்
த்ருஷ்ட்வா - கண்டு,
ஸாது ஸாது இதி - 'நன்று நன்று' என்று
க்ருத்ர ராஜம் - கழுகு அரசனை
அபூஜயன் - வாழ்த்தினார்கள்.

परिश्रान्तं तु तं दृष्ट्वा जरया पक्षियूथपम् ।
उत्पपात पुनर्हृष्टो मैथिलीं गृह्य रावणः ॥

பரிஶ்ராந்தம் து தம் த்ருஷ்ட்வா ஜரயா பக்ஷியூதபம் ।
உத்பபாத புனர்ஹ்ருஷ்டோ மைதிலீம் க்ருஹ்ய ராவண: ॥ 22

ராவண: - ராவணன்,
தம் - அந்த
பக்ஷியூதபம் - பக்ஷிராஜனை
ஜரயா - கிழத்தன்மையால்
பரிஶ்ராந்தம் - களைப்படைந்திருப்பவனாக
த்ருஷ்ட்வா - கண்டு,
து - அதனால்
ஹ்ருஷ்ட: - மனங்களித்தவனாய்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ைமதிலீம் - சீதாதேவியை
க்ருஹ்ய - எடுத்துக்கொண்டு,
புன: - மீளவும்
உத்பபாத - உயரக் கிளம்பினான்.

तं प्रहृष्टं निधायाङ्के गच्छन्तं जनकात्मजाम् ।
गृध्रराजः समुत्पत्य समभिद्रुत्य रावणम् ॥
समावार्य महातेजा जटायुरिदमब्रवीत् ॥

தம் ப்ரஹ்ருஷ்டம் நிதாயாங்கே கச்சந்தம் ஜனகாத்மஜாம் ।
க்ருத்ர ராஜ: ஸமுத்பத்ய ஸமபித்ருத்ய ராவணம் ।
ஸமாவார்ய மஹாதேஜா ஜடாயுரிதமப்ரவீத் ॥ 23

மஹாதேஜா: - மகா தேஜஸ்வியான
க்ருத்ர ராஜ: - கழுகரசராகும்
ஜடாயு: - ஜடாயு,
ஜனகாத்மஜாம் - ஜானகியை
அங்கே - மடியில்
நிதாய - எடுத்துக்கொண்டு,
ப்ரஹ்ருஷ்டம் - சந்தோஷமுற்றவனாய்
கச்சந்தம் - போகும்
தம் ராவணம் - அந்த ராவணனை
ஸமுத்பத்ய - உயரக் கிளம்பி,
ஸமபித்ருத்ய - எதிர்த்தோடி,
ஸமாவார்ய - மடக்கிக்கொண்டு,
இதம் - பின்வருமாறு
அப்ரவீத் - மொழிந்தார்.

वज्रसंस्पर्शबाणस्य भार्यां रामस्य रावण ।
अल्पबुद्धे हरस्येनां वधाय खलु रक्षसाम् ॥

வஜ்ர ஸம்ஸ்பர்ஶ பாணஸ்ய பார்யாம் ராமஸ்ய ராவண ।
அல்ப புத்தே ஹரஸ்யேநாம் வதாய கலு ரக்ஷஸாம் ॥ 24

அல்ப புத்தே - 'புல்லறிவாளனாகிய
ராவண - ராவணா!
வஜ்ர ஸம்ஸ்பர்ஶ பாணஸ்ய - வஜ்ராயுதத்தை நிகர்த்த பாணங்களுடைய
ராமஸ்ய - ஸ்ரீராமருடைய
பார்யாம் - தர்மபத்னியாகிய
ஏநாம் - இவளை
ரக்ஷஸாம் - அரக்கர்களுடைய
வதாய கலு - வதைக்காகவே
ஹரஸி - நீ திருடிக்கொண்டு போகின்றனை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

समित्रबन्धुः सामात्यः सबलः सपरिच्छदः ।
विषपानं पिबस्येतत् पिपासित इवोदकम् ॥

ஸமித்ரபந்து: ஸாமாத்ய: ஸபல: ஸபரிச்சத: ।
விஷபானம் பிபஸ்யேதத் பிபாஸித இவோதகம் ॥ 25

ஸமித்ர பந்து:	-	'மித்திரர்களோடு கூடவும் பந்துக்களோடு கூடவும்,
ஸாமாத்ய:	-	மந்திரிகளோடு கூடவும்,
ஸபல:	-	சைனியங்களோடு கூடவும்,
ஸபரிச்சத:	-	பரிவாரங்களோடு கூடவும்,
பிபாஸித:	-	தாகமெடுத்தவன்
உதகம்	-	ஜலத்தை
இவ	-	எப்படியோ அப்படியே
ஏதத்	-	இவ்விதமாகிய
விஷபானம்	-	விஷத்தை
பிபஸி	-	நீ குடிக்கின்றனை.

अनुबन्धमजानन्तः कर्मणामविचक्षणाः ।
शीघ्रमेव विनश्यन्ति यथा त्वं विनशिष्यसि ॥

அநுபந்த மஜாநந்த: கர்மணா மவிசக்ஷணா: ।
ஶீக்ர மேவ விநஶ்யந்தி யதா த்வம் விநஶிஷ்யஸி ॥ 26

அவிசக்ஷணா:	-	'புல்லறிவாளர்கள்
கர்மணாம்	-	அவர்களது செய்கைகளின்
அநுபந்தம்	-	பயனை
அஜாநந்த:	-	அறியாதவர்களாய்
ஶீக்ரம் ஏவ	-	சீக்கிரத்திலேயே
விநஶ்யந்தி	-	அழிவடைகின்றார்கள்.
யதா	-	அப்படியே
த்வம்	-	நீ
விநஶிஷ்யஸி	-	அழியப் போகின்றனை.

बद्धस्त्वं कालपाशेन क्व गतस्तस्य मोक्ष्यसे ।
वधाय बडिशं गृह्य सामिषं जलजो यथा ॥

பத்தஸ்த்வம் காலபாஶேந க்வ கதஸ்தஸ்ய மோக்ஷ்யஸே ।
வதாய படிஶம் க்ருஹ்ய ஸாமிஷம் ஜலஜோ யதா ॥ 27

ஸாமிஷம்	-	'மாமிசத்தோடு கூடிய
படிஶம்	-	தூண்டிமுள்ளை
வதாய	-	இறப்பதற்கு
க்ருஹ்ய	-	பற்றிய பின்னர்,
ஜலஜ: யதா	-	மீன்போல

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காலபாஶேந - யமனது பாசத்தால்
பத்த: - கட்டுண்ட
த்வம் - நீ
க்வ கத: - எங்குசென்று
தஸ்ய - அதிலிருந்து (மரணத்திலிருந்து)
மோக்ஷ்யஸே - தப்பப்போகின்றனை?

न हि जातु दुराधर्षौ काकुत्स्थौ तव रावण ।
धर्षणं चाश्रमस्यास्य क्षमिष्येते तु राघवौ ॥

ந ஹி ஜாது துராதர்ஷெள காகுத்ஸ்தெள தவ ராவண ।
தர்ஷணம் சாஶ்ரமஸ்யாஸ்ய க்ஷமிஷ்யேதே து ராகவெள ॥ 28

ராவண - 'ராவணா!
துராதர்ஷெள - எவராலும் வெல்ல முடியாதவர்களும்,
காகுத்ஸ்தெள - ககுஸ்தவம்சத்தவர்களுமான
ராகவெள து - ஶ்ரீராமலக்ஷ்மணர்களோ
தவ - உனது
அஸ்ய - இந்த
ஆஶ்ரமஸ்ய ச - ஆச்ரமத்தினுடைய
தர்ஷணம் - அவமதிப்பை
ஜாது ஹி - ஒருபொழுதுமே
ந க்ஷமிஷ்யேதே - மன்னிக்க மாட்டார்கள்.

यथा त्वया कृतं कर्म भीरुणा लोकगर्हितम् ।
तस्कराचरितो मार्गो नैष वीरनिषेवितः ॥

யதா த்வயா க்ருதம் கர்ம பீருணா லோககர்ஹிதம் ।
தஸ்கராசரிதோ மார்கோ நைஷ வீரநிஷேவித: ॥ 29

பீருணா த்வயா - 'பயந்த உன்னால்
லோககர்ஹிதம் - உலகத்தாரால் நிந்திக்கப்பட்ட
கர்ம - காரியம்
யதா க்ருதம் - எப்படிச் செய்யப்பட்டதோ,
ஏஷ: மார்க: - இந்த நடவடிக்கை
தஸ்கரா சரித: - திருடர்களால் கையாடப்பட்டது;
ந வீர நிஷேவித: - வீரர்களால் கையாடப்பட்டதன்று.

युद्धयस्व यदि शूरोऽसि मुहूर्तं तिष्ठ रावण ।
शयिष्यसे हतो भूमौ यथा भ्राता खरस्तथा ॥

யுத்த்யஸ்வ யதி ஶூரோऽஸி முஹூர்தம் திஷ்ட ராவண ।
ஶயிஷ்யஸே ஹதோ பூமௌ யதா ப்ராதா கரஸ்ததா ॥ 30

ராவண - 'ராவணா!
ஶூர: - சூரனாக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யதி அஸி - இருக்கின்றாயென்றால்
யுத்த்யஸ்வ - போர்புரி;
முஹூர்தம் - சற்று
திஷ்ட - நில்லு;
ப்ராதா - தம்பியாகிய
கர: - கரன்
யதாததா - எப்படியோ அப்படியே
ஹத: - கொல்லப்பட்டு
பூமௌ - பூமியில்
ஶயிஷ்யஸே - நீண்ட துயில் கொள்வாய்.

28 परेतकाले पुरुषो यत् कर्म प्रतिपद्यते ।
विनाशायात्मनोऽधर्म्यं प्रतिपन्नोऽसि कर्म तत् ॥

பரேத காலே புருஷோ யத் கர்ம ப்ரதிபத்யதே ।
விநாஶாயாத்மநோऽதர்ம்யம் ப்ரதி பந்நோऽஸி கர்ம தத் ॥ 31

பரேதகாலே - 'மரணம் கிட்டியிருக்கையில்
புருஷ: - ஓர் மனிதன்
ஆத்மந: - தனது
விநாஶாய - அழிவின்பொருட்டு
யத் - எந்த ஒரு
அதர்ம்யம் கர்ம - பாபகாரியத்தை
ப்ரதிபத்யதே - அனுஷ்டிப்பானோ,
தத் கர்ம - அந்தக் காரியத்தை
ப்ரதி பந்ந: - அனுஷ்டித்தவனாய்
அஸி - நீ ஆகின்றனை.

29 पापानुबन्धो वै यस्य कर्मणः कर्म को नु तत् ।
कुर्वीत लोकाधिपतिः स्वयंभूर्भगवानपि ॥

பாபாநுபந்தோ வை யஸ்ய கர்மண: கர்ம கோ நு தத் ।
குர்வீத லோகாதிபதி: ஸ்வயம்பூர் பகவாநபி ॥ 32

யஸ்ய கர்மண: - 'எந்தச் செயலுக்கு
பாபாநு பந்த: வை - பாபமே பலமோ,
தத் கர்ம - அந்தச் செயலை
லோகாதிபதி: - திரிலோகாதிபதியாகிய
ஸ்வயம்பூ: - பிரம்ம
பகவாந் அபி - தேவர் என்றாலும்
க: நு - எவன்தான்
குர்வீத - செய்வான்?

30 एवमुक्त्वा शुभं वाक्यं जटायुस्तस्य रक्षसः ।
निपपात भृशं पृष्ठे दशग्रीवस्य वीर्यवान् ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஏவமுக்த்வா ஶுபம் வாக்யம் ஜடாயுஸ்தஸ்ய ரக்ஷஸ:।
अप्रमादाच्च गन्तव्यं सर्वैरपि निशाचरैः ।
कर्तव्यश्च सदा यत्नो राघवस्य वधं प्रति ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அப்ரமாதாச்ச கந்தவ்யம் ஸர்வைரேவ நிஶாசரை: ।
கர்தவ்யஶ்ச ஸதா யத்நோ ராகவஸ்ய வதம் ப்ரதி ॥ 26

அப்ரமாதாத் ச - 'அஜாக்கிரதையின்றியே
கந்தவ்யம் - செல்லத்தக்கது.
நிஶாசரை: - அரக்கர்கள்
ஸர்வை: ஏவ - எல்லாராலுமே
ராகவஸ்ய - ராமனது
வதம் ப்ரதி - கொலையைப்பற்றி
யத்ந: - பிரயத்னம்
ஸதா ச - எப்பொழுதுமே
கர்தவ்ய: - செய்யத்தக்கது.

युष्माकं च बलज्ञोऽहं बहुशो रणमूर्धनि ।
अतश्चास्मिञ्जनस्थाने मया यूयं नियोजिताः ॥

யுஷ்மாகம் ச பலஜ்ஞோऽஹம் பஹுஶோ ரணமூர்தநி ।
அதஶ்ச அஸ்மின் ஜனஸ்தானே மயா யூயம் நியோஜிதா: ॥ 27

ரணமூர்தநி - 'போர்முகத்தில்
பஹுஶ: - பல தடவைகளில்
அஹம் - நான்
யுஷ்மாகம் - உங்களுடைய
பலஜ்ஞ: - வல்லமையையறிந்தவன்.
அத: ச - அதனாலேயே
அஸ்மின் - இந்த
ஜனஸ்தானே - ஜனஸ்தானத்தில்,
யூயம் ச - நீங்களே
மயா - என்னால்
நியோஜிதா: - நியமிக்கப்பட்டிருக்கிறீர்கள்.

ततः प्रियं वाक्यमुपेत्य राक्षसा महार्थमष्टावभिवाद्य रावणम् ।
विहाय लङ्कां सहिताः प्रतस्थिरे यतो जनस्थानमलक्ष्यदर्शनाः ॥

தத: ப்ரியம் வாக்ய முபேத்ய ராக்ஷஸா
மஹார்த மஷ்டா வபிவாத்ய ராவணம் ।
விஹாய லங்காம் ஸஹிதா: ப்ரதஸ்திரே
யதோ ஜனஸ்தாநமலக்ஷ்யதர்ஶநா: ॥ 28

தத: - அப்பொழுது
அஷ்டௌ ராக்ஷஸா: - எட்டு ராக்ஷஸர்கள்
வாக்யம் - ஆக்கினையை
ப்ரியம் - ஹிதமானதாயும்
மஹார்தம் - பெரும் பயனுற்றதாயும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உபேத்ய - எண்ணி,
ராவணம் - ராவணனை
அபிவாத்ய - நமஸ்கரித்து
ஸஹிதா: - ஒன்றுசேர்ந்து,
அலக்ஷ்ய தர்ஶநா: - ஒருவருக்கும் புலப்படாதவர்களாய்
லங்காம் விஹாய - இலங்கை நகரை விட்டு,
யத: - இருந்த இடத்திலிருந்தே
ஜனஸ்தாநம் - ஜனஸ்தானத்திற்கு
ப்ரதஸ்திரே - பிரயாணமானார்கள்.

ततस्तु सीतामुपलभ्य रावणः सुसंप्रहृष्टः परिगृह्य मैथिलीम् ।
प्रसज्य रामेण च वैरमुत्तमं बभूव मोहान्मुदितः स राक्षसः ॥

ததஸ்து ஸீதா முபலப்ய ராவண:
ஸுஸம்ப்ரஹ்ருஷ்ட: பரிக்ருஹ்ய மைதிலீம்।
ப்ரஸஜ்ய ராமேண ச வைரமுத்தமம்
பபூவ மோஹான் முதித: ஸ ராக்ஷஸ: ॥ 29

ராவண: - ராவணன்
மைதிலீம் - ஜனகர் திருமகளாகிய,
ஸீதாம் து - சீதாதேவியையே
உபலப்ய - அடைந்து,
தத: - அவ்விடத்தில்
பரிக்ருஹ்ய - சிறையிட்டு,
ஸுஸம்ப்ரஹ்ருஷ்ட: - அளவுகடந்த ஆனந்தம் கொண்டான்.
ஸ: - அந்த
ராவண: - ராவணன்
ராமேண ச - ஸ்ரீராமரோடேயே
உத்தமம் - பெரும்
வைரம் - த்வேஷத்தை
ப்ரஸஜ்ய - பெற்று,
மோஹாத் - மடமையால்
முதித: - மகிழ்ந்திருந்தவனாக
பபூவ - இருந்தனன்.

இத்யார்ஷே ஸ்ரீமத் ராமாயணே வால்மீகீயே ஆதிகாவ்யே சதுர்விம்ஶதி ஸஹஸ்ரிகாயாம் ஸம்ஹிதாயாம் ஆரண்ய காண்டே லங்காப்ராபணம் நாம சதுஷ்பஞ்சாஶ: ஸர்க: ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பஞ்ச் பஞ்சாஶ: ஸர்க: - 55

संदिश्य राक्षसान् घोरान् रावणोऽष्टौ महाबलान् ।
आत्मानं बुद्धिवैक्लव्यात् कृतकृत्यममन्यत ॥

ஸந்திஶ்ய ராக்ஷஸான் கோரான் ராவணோஷ்டௌ மஹாபலான் ।
ஆத்மானம் புத்திவைக்லவ்யாத் க்ருதக்ருத்யமமன்யத ॥ 1

ராவண: - ராவணன்
மஹாபலான் - மகா பலசாலிகளும்
கோரான் - கொடியவர்களுமான
அஷ்டௌ - எட்டு
ராக்ஷஸான் - அரக்கர்களை
ஸந்திஶ்ய - ஆக்ஞாபித்துவிட்டு
புத்தி வைக்லப்யாத்- விபரீத புத்தியால்
ஆத்மானம் - தன்னை
க்ருத க்ருத்யம் - கிருதகிருத்தியனாய்
அமன்யத - எண்ணிக்கொண்டான்.

स चिन्तयानो वैदेहीं कामबाणप्रपीडितः ।
प्रविवेश गृहं रम्यं सीतां द्रष्टुमभित्वरन् ॥

ஸ சிந்தயானோ வைதேஹீம் காமபாண ப்ரபீடித: ।
ப்ரவிவேஶ க்ருஹம் ரம்யம் ஸீதாம் த்ரஷ்டுமபித்வரன் ॥ 2

ஸ: - அவன்
காமபாண ப்ரபீடித: - காமபாணங்களுக்கீடுபட்டவனாய்
வைதேஹீம் - ஸீதாதேவியை
சிந்தயான: - இடைவிடாது நினைக்கின்றவனாய்
ஸீதாம் - சீதாதேவியை
த்ரஷ்டும் - பார்க்க
அபித்ரவன் - பரபரப்புற்றவனாய்
ரம்யம் - அழகிய
க்ருஹம் - அரண்மனைக்குள்
ப்ரவிவேஶ - புகுந்தான்.

स प्रविश्य तु तद्वेश्म रावणो राक्षसाधिपः ।
अपश्यद्राक्षसीमध्ये सीतां शोकपरायणाम् ॥

ஸ ப்ரவிஶ்ய து தத்வேஶ்ம ராவணோ ராக்ஷஸாதிப: ।
அபஶ்யத் ராக்ஷஸீமத்யே ஸீதாம் ஶோகபராயணாம் ॥ 3

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

अश्रुपूर्णमुखीं दीनां शोकभाराभिपीडिताम् ।
वायुवेगैरिवाक्रान्तां मज्जन्तीं नावमर्णवे ॥

அஶ்ருபூர்ணமுகீம் தீநாம் ஶோகபாராபிபீடிதாம் ।
வாயுவேகைரிவாக்ராந்தாம் மஜ்ஜந்தீம் நாவமர்ணவே ॥ 4

मृगयूथपरिभ्रष्टां मृगीं श्वभिरिवावृताम् ।
अधोमुखमुखीं सीतामभ्येत्य च निशाचरः ॥

ம்ருகயூத பரிப்ரஷ்டாம் ம்ருகீம் ஶ்வபிரிவாவ்ருதாம் ।
அதோமுகமுகீம் ஸீதாமப்யேத்ய ச நிஶாசர: ॥ 5

तां तु शोकपरां दीनामवशां राक्षसाधिपः ।
स बलाद्दर्शयामास गृहं देवगृहोपमम् ॥

தாம் து ஶோகபராம் தீநாமவஶாம் ராக்ஷஸாதிப: ।
ஸ பலாத் தர்ஶயாமாஸ க்ருஹம் தேவக்ருஹோபமம் ॥ 6

हर्म्यप्रासादसंबाधं स्त्रीसहस्रनिषेवितम् ।
नानापक्षिगणैर्जुष्टं नानारत्नसमन्वितम् ॥

ஹர்ம்ய ப்ரஸாத ஸம்பாதம் ஸ்த்ரீஸஹஸ்ர நிஷேவிதம் ।
நாநா பக்ஷிகணைர்ஜுஷ்டம் நாநா ரத்நஸமந்விதம் ॥ 7

काञ्चनैस्तापनीयैश्च स्फाटिकै राजतैरपि ।
वज्रवैडूर्यचित्रैश्च स्तंभैर्दृष्टिमनोहरैः ॥

காஞ்சனை ஸ்தாபநீயைஶ்ச ஸ்பாடிகை ராஜதைரபி ।
வஜ்ரவைடூர்ய சித்ரைஶ்ச ஸ்தம்பைர் த்ருஷ்டி மநோஹரை: ॥ 8

ஸ: ராக்ஷஸேஶ்வர: - அந்த அரக்கர் மன்னனாகிய
ராவண: - ராவணன்
தத் வேஶ்ம - அந்த அரண்மனைக்குள்
ப்ரவிஶ்ய - புகுந்து
ராக்ஷஸீ மத்யே - ராக்ஷசிகளின் நடுவில்
ஶோக பராயணாம் - சோகத்தில் மூழ்கிக்கிடப்பவளும்,
அஶ்ரு பூர்ணமுகீம் - கண்ணீர் நிறைந்த முகமுடையவளும்,
தீநாம் - திக்கற்று
ஶோக பாராபிபீடிதாம் - சோகாதிசயத்தால் துன்புற்றவளும்
அர்ணவே - கடலில்
வாயுவேகை: - புயர்க்காற்றுகளால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆக்ராந்தாம் - அடியுண்டு
மஜ்ஜந்தீம் - முழுகுகிற
நாவம் இவ - கப்பல் போலிருப்பவளும்,
ம்ருகயூத பரிப்ரஷ்டாம் - மான்கூட்டங்களிலிருந்து நழுவி
ஶ்வபி: - நாய்களால்
ஆவ்ருதாம் - சூழப்பட்ட
ம்ருகீம் இவ - பெண்மான் போன்றவளும்,
தீநாம் - கஷ்டதசையிலிருப்பவளாய்
அதோமுக முகீம் து - தரையை பார்த்தவண்ணமேயிருப்பவளுமான,
ஸீதாம் - ஸீதாதேவியை
அபஶ்யத் - கண்டான்.
ஸ: ராக்ஷஸாதிப: - அந்த ராக்ஷஸ மன்னனாகிய
நிஶாசர: - அரக்கன்
அவஶாம் - தானாய் ஒன்றும் செய்ய முடியாதவனாய்
தீநாம் - நிறம் குன்றி
ஶோகபராம் து - சோகத்தில் மூழ்கிக் கிடப்பவளுமான
தாம் அப்யேத்ய - அவளை அணுகி
ஸ: - அவன்
ஹர்ம்ய ப்ரஸாத ஸம்பாதம் - பெரிய வீடுகளாலும் அரண்மனைகளாலும் நிறைந்துள்ளதும்,
ஸ்த்ரீ ஸஹஸ்ர நிஷேவிதம் - பல ஸ்த்ரீகளால் வசிக்கப்பெற்றதும்,
நாநா பக்ஷிகணை: ஜுஷ்டம் - பலவகை பக்ஷிக்கூட்டங்களால் நிறையப்பெற்றதும்,
நாநா ரத்ந விபூஷிதம் - பலவகை ரத்னங்களாலிழைக்கப்பெற்றதும்
தாபநீயை: - சுத்த
காஞ்சனை: ச - பொன்னாலானவைகளும்,
ஸ்பாடிகை: - ஸ்படிகங்களாலானவைகளும்,
ராஜதை: அபி - வெள்ளியாலானவைகளும்
வஜ்ர வைடூர்ய சித்ரை: - வைரங்களாலும் வைடூர்யங்களாலும் இழைக்கப்பெற்றவைகளும்,
த்ருஷ்டிமநோஹரை: ச - கண்களைக் கவருகின்றவைகளுமான
ஸ்தம்பை: - தூண்களாலும்
தேவ க்ருஹோபமம் - தெய்வ மாளிகைகளுக்கு நிகராய் விளங்கும்
க்ருஹம் - அரண்மனையை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பலாத் - அவள் உள்ளத்தையாவது கண்களையாவது செலுத்தாதிருக்கையில்,
தர்ஶயாமாஸ - சுட்டிக்காட்டினான்.

दिव्यदुन्दुभिनिर्ह्रादं तप्तकाञ्चनतोरणम् ।
सोपानं काञ्चनं चित्रमारुरोह तया सह ॥

திவ்யதுந்துபிநிர்ஹ்ராதம் தப்தகாஞ்சனதோரணம் ।
ஸோபானம் காஞ்சனம் சித்ரமாருரோஹ தயா ஸஹ ॥ 9

திவ்ய துந்துபி நிர்ஹ்ராதம்-திவ்ய துந்துபிகோஷங்களால் விளங்குவதும்
தப்த காஞ்சன தோரணம்- நல்ல தங்கத்தால் செய்யப்பட்ட கதவை உடையதும்,
சித்ரம் - அழகாய்
காஞ்சனம் - பொன்னாற்ச் செய்ததுமான
ஸோபானம் - படியில்
தயா ஸஹ - அவளைத் தூக்கிக்கொண்டு (அவளோடு)
ஆருரோஹ - ஏறினான்.

दान्तका राजताश्चैव गवाक्षाः प्रियदर्शनाः ।
हेमजालावृताश्चासन् तत्र प्रासादपंक्तयः ॥

தாந்தகா ராஜதாஸ்சைவ கவாக்ஷா: ப்ரியதர்ஶநா: ।
ஹேம ஜாலாவ்ருதாஸ்ச ஆஸன் தத்ர ப்ராஸாத பங்க்தய: ॥ 10

தத்ர - அவ்விடத்தில்
தாந்தகா: - தந்தங்களினாலானவைகளும்,
ராஜதா: ச - வெள்ளியாலானவைகளும்,
ப்ரியதர்ஶநா: - அழகு வாய்ந்தவைகளுமான
கவாக்ஷா: ஏவ - ஜன்னல்களும்
ஹேம ஜாலா வ்ருதா:- பொன்மயமாய் மூடப்பெற்ற
ப்ராஸாத பங்க்தய: ச- மேடைகளின் அனேகங்களும்,
ஆஸன் - இருந்தன.

सुधामणिविचित्राणि भूमिभागानि सर्वशः ।
दशग्रीवः स्वभवने प्रादर्शयत मैथिलीम् ॥

ஸுதாமணி விசித்ராணி பூமிபாகாநி ஸர்வஶ: ।
தஶக்ரீவ: ஸ்வபவனே ப்ராதர்ஶயத மைதிலீம் ॥ 11

தஶக்ரீவ: - தசக்ரீவன்
ஸ்வபவனே - தன் அரண்மனையில்
ஸுதாமணி விசித்ராணி- வெண்முத்துக்களால் அழகுற்ற
பூமி பாகாநி - தரைகளை
ஸர்வஶ: - எங்கும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மைதிலீம் - ஸீதாதேவிக்கு
ப்ராதர்ஶயத் - காட்டினான்.

दीर्घिकाः पुष्करिण्यश्च नानावृक्षसमन्विताः ।
रावणो दर्शयामास सीतां शोकपरायणाम् ॥

தீர்கிகா: புஷ்கரிண்யஶ்ச நாநாவ்ருக்ஷஸமந்விதா: ।
ராவணோ தர்ஶயாமாஸ ஸீதாம் ஶோகபராயணாம் ॥ 12

ராவண: - ராவணன்,
ஶோக பராயணாம் - சோகத்தில் மூழ்கிக்கிடக்கும்
ஸீதாம் - ஸீதாதேவியிடம்
தீர்கிகா: - நடைவாபிகளையும்,
நாநா வ்ருக்ஷ ஸமந்விதா: - பலவகை மரங்கள் அடர்ந்த
புஷ்கரிண்ய: ச - புஷ்கரிணிகளையும்,
தர்ஶயாமாஸ - இருக்கின்றனவென்று சொன்னான்.

दर्शयित्वा तु वैदेह्याः कृत्स्नं तद्भवनोत्तमम् ।
उवाच वाक्यं पापात्मा रावणो जनकात्मजाम् ॥

தர்ஶயித்வா து வைதேஹ்யா: க்ருத்ஸ்நம் தத் பவநோத்தமம் ।
உவாச வாக்யம் பாபாத்மா ராவணோ ஜனகாத்மஜாம் ॥ 13

பாபாத்மா - கெட்ட நினைவுற்ற
ராவண: - ராவணன்
வைதேஹ்யா: - ஸீதாதேவிக்கு
தத் - அந்த
பவநோத்தமம் - சிறந்த மாளிகை
க்ருத்ஸ்நம் - முழுமையும்
தர்ஶயித்வா து - காட்டிவிட்டு,
ஜனகாத்மஜாம் - ஜானகியைப் பார்த்து
வாக்யம் - ஒரு சொல்லை
உவாச - பின்வருமாறு சொன்னான்.

दश राक्षसकोट्यश्च द्वाविंशतिरथापराः ।
तेषां प्रभुरहं सीते सर्वेषां भीमकर्मणाम् ॥

தஶ ராக்ஷஸ கோட்யஶ்ச த்வாவிம்ஶதி ரதாபரா: ।
தேஷாம் ப்ரபுரஹம் ஸீதே ஸர்வேஷாம் பீமகர்மணாம் ॥ 14

ஸீதே - 'ஸீதையே!
தஶ - பத்து
ராக்ஷஸ கோட்ய: - கோடி ராக்ஷஸர்களும்,
அத - அதோடுகூட

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அபரா: - வேறு சில
த்வா விம்ஶதி: ச - இருபத்திரண்டும்
பீம கர்மணாம் - அரிய செயல்களைப் புரியும்
தேஷாம் - அவர்கள்
ஸர்வேஷாம் - எல்லோருக்கும்
அஹம் - நான்
ப்ரபு: - ஈசன்.

वर्जयित्वा जरावृद्धान् बालांश्च रजनीचरान् ।
सहस्त्रमेकमेकस्य मम कार्यपुर:सरम् ॥

வர்ஜயித்வா ஜராவ்ருத்தான் பாலாம்ஶ்ச ரஜநீசரான் ।
ஸஹஸ்ரமேக மேகஸ்ய மம கார்யபுர:ஸரம் ॥ 15

ஜரா வ்ருத்தான் - 'கிழத்தனத்தால் முடியாதவர்களும்
பாலான் ச - சிறு குழந்தைகளுமான
ரஜநீ சரான் - அரக்கர்களை
வர்ஜயித்வா - நீக்கி
ஏகம் - ஓர்
ஸஹஸ்ரம் - ஆயிரம்
மம - என்
ஏகஸ்ய - ஒருவனுக்கு
கார்ய புர: ஸரம் - பணிவிடைப் பரிவாரம்.

यदिदं राजतन्त्रं मे त्वयि सर्वं प्रतिष्ठितम् ।
जीवितं च विशालाक्षि त्वं मे प्राणैर्गरीयसी ॥

யதிதம் ராஜதந்த்ரம் மே த்வயி ஸர்வம் ப்ரதிஷ்டிதம் ।
ஜீவிதம் ச விஶாலாக்ஷி த்வம் மே ப்ராணைர் கரீயஸீ ॥ 16

மே - 'எனது
ராஜ தந்த்ரம் - அரசாளுகை
யத் - எதுவோ
இதம் ஸர்வம் - இது எல்லாமும்
த்வயி - உன்னிடத்தில்
ப்ரதிஷ்டிதம் - வைக்கப்பட்டுவிட்டது.
ஜீவிதம் - உயிரும்
ச - அப்படியே வைக்கப்பட்டுவிட்டது.
விஶாலாக்ஷி - விசாலாக்ஷி!
த்வம் - நீ
ப்ராணை: - என் உயிரினும்
மே - எனக்கு
கரீயஸீ - அருமையானவள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

बहूनां स्त्रीसहस्राणां मम योऽसौ परिग्रहः ।
तासां त्वमीश्वरी सीते मम भार्या भव प्रिये ॥

பஹூநாம் ஸ்த்ரீ ஸஹஸ்ராணாம் மம யோऽஸௌ பரிக்ரஹ: ।
தாஸாம் த்வமீஶ்வரீ ஸீதே மம பார்யா பவ ப்ரியே ॥ 17

ப்ரியே	- 'அன்பார்ந்த
ஸீதே	- சீதையே!
ய:	- எந்த
அஸௌ	- இவன்
பஹூநாம்	- பல
ஸ்த்ரீஸஹஸ்ராணாம்	- ஆயிரம் ஸ்த்ரீகளுக்கு
பரிக்ரஹ:	- கணவனோ, அந்த
மம	- எனக்கும்
தாஸாம்	- அவர்களுக்கும்,
த்வம்	- நீ
மம	- எனக்கு
பார்யா	- பார்யையாய்,
ஈஶ்வரீ	- எஜமானியாய்
பவ	- ஆகு.

साधु किं तेऽन्यथा बुद्ध्या रोचयस्व वचो मम ।
भजस्व माभितप्तस्य प्रसादं कर्तुमर्हसि ॥

ஸாது கிம் தேऽன்யதா புத்த்யா ரோசயஸ்வ வசோ மம ।
பஜஸ்வ மா அபிதப்தஸ்ய ப்ரஸாதம் கர்துமர்ஹஸி ॥ 18

அன்யதா	- 'இதல்லாத வேறு
புத்த்யா	- யோஜனையால்
தே	- உனக்கு
கிம்	- என்ன பிரயோஜனம்?
மம	- எனது
ஸாது: வச:	- நியாயமான சொல்லை
ரோசயஸ்வ	- ஏற்றுக்கொள்.
மா பஜஸ்வ	- என்னை அங்கீகரி.
அபிதப்தஸ்ய	- உனக்காகத் தவிக்கும் எனக்கு
ப்ரஸாதம்	- அனுக்ரஹத்தை
கர்தும்	- செய்ய
அர்ஹஸி	- நீ இஷ்டப்பட வேண்டும்.

परिक्षिप्ता समुद्रेण लङ्केयं शतयोजना ।
नेयं धर्षयितुं शक्या सेन्द्रैरपि सुरासुरैः ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பரிக்ஷிப்தா ஸமுத்ரேண லங்கேயம் ஶதயோஜநா ।
நேயம் தர்ஷயிதும் ஶக்யா ஸேந்த்ரைரபி ஸுராஸுரை: ॥ 19

இயம் - 'இந்த
ஶத யோஜநா - நூறு யோஜனை தூரமுள்ள
லங்கா - இலங்கை
ஸமுத்ரேண - சமுத்திரத்தினால்
பரிக்ஷிப்தா - சூழப்பட்டிருக்கிறது.
இயம் - இது
ஸேந்த்ரை: - இந்திரனுள்ளிட்ட
ஸுராஸுரை: அபி - தேவர்களாலும் அசுரர்களாலும்கூட
தர்ஷயிதும் - எதிர்க்க
ந ஶக்யா - முடியாதது.

न देवेषु न यक्षेषु न गन्धर्वेषु नर्षिषु ।
अहं पश्यामि लोकेषु यो मे वीर्यसमो भवेत् ॥

ந தேவேஷு ந யக்ஷேஷு ந கந்தர்வேஷு நர்ஷிஷு ।
அஹம் பஶ்யாமி லோகேஷு யோ மே வீர்யஸமோ பவேத் ॥ 20

லோகேஷு - 'மூன்றுலகங்களிலும்
ய: - எவனொருவன்
மே - எனக்கு
வீர்யஸம: - ஒப்பான பராக்கிரமமுள்ளவனாக
பவேத் - ஆகுவானோ, அவனை
தேவேஷு - தேவர்களிலும்,
அஹம் - நான்
ந பஶ்யாமி - கண்டிலேன்.
யக்ஷேஷு - யக்ஷர்களிலும்
ந - கண்டிலேன்.
கந்தர்வேஷு - கந்தர்வர்களிலும்
பக்ஷிஷு - பறவைகளிலும்
ந - கண்டிலேன்.

राज्यभ्रष्टेन दीनेन तापसेन गतायुषा ।
किं करिष्यसि रामेण मानुषेणाल्पतेजसा ॥

ராஜ்ய ப்ரஷ்டேன தீநேந தாபஸேந கதாயுஷா । 21
கிம் கரிஷ்யஸி ராமேண மாநுஷேணால்பதேஜஸா ॥

அல்ப தேஜஸா - 'ஆண்மையின்றி
ராஜ்ய ப்ரஷ்டேன - ராஜ்யத்திலிருந்து துரத்தப்பட்டு
தீநேந - தீனனாகி
தாபஸேந - தபசு செய்துகொண்டிருக்கும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கதாயுஷா - அற்ப ஆயுளுடைய
மாநுஷேண - மானிடனாகிய
ராமேண - ராமனோடு
கிம் கரிஷ்யஸி - நீ என்ன செய்யப்போகின்றனை?

भजस्व सीते मामेव भर्ताहं सदृशस्तव ।
यौवनं ह्यध्रुवं भीरु रमस्वेह मया सह ॥

பஜஸ்வ ஸீதே மாமேவ பர்தா அஹம் ஸத்ருஶஸ்தவ ।
யௌவனம் ஹ்யத்ருவம் பீரு ரமஸ்வேஹ மயா ஸஹ ॥ 22

ஸீதே - 'சீதாய்!
மாம் ஏவ - என்னையே
பஜஸ்வ - ஏற்றுக்கொள்;
அஹம் - நான்
தவ - உனக்கு
ஸத்ருஶ: - ஏற்ற
பர்தா - கணவன்;
பீரு - பயந்தவளே!
யௌவனம் - இளமை
அத்ருவம் ஹி - நிலையற்றதன்றோ!
மயா - என்னோடு
இஹ - கூட
ஸஹ - இவ்விடத்தில்
ரமஸ்வ - காலம்கழி.

दर्शने मा कृथा बुद्धिं राघवस्य वरानने ।
कास्य शक्तिरिहागन्तुमपि सीते मनोरथैः ॥

தர்ஶனே மா க்ருதா புத்திம் ராகவஸ்ய வராநநே ।
கா அஸ்ய ஶக்திரிஹாகந்துமபி ஸீதே மநோரதை: ॥ 23

வராநநே - 'சுந்தரமுகியே!
ராகவஸ்ய - ராமனை
தர்ஶனே - பார்க்கும் விஷயத்தில்,
புத்திம் - எண்ணத்தை
மாக்ருதா: - நீ கொள்ளாதே.
ஸீதே - சீதாய்!
மநோரதை: அபி - மனவியாபாரங்களாலும்கூட
இஹ - இங்கு
ஆகந்தும் - வர
அஸ்ய - இவனுக்கு
கா ஶக்தி: - என்ன சக்தி இருக்கிறது?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

न शक्यो वायुराकाशे पाशैर्बन्द्धुं महाजवः ।
दीप्यमानस्य चाप्यग्नेर्ग्रहीतुं विमला शिखा ॥

ந ஶக்யோ வாயுராகாஶே பாஶைர்பந்த்தும் மஹாஜவ:।
தீப்யமானஸ்ய சாப்யக்நேர் க்ரஹீதும் விமலா ஶிகா॥

மஹாஜவ: - 'வெகு வேகமுற்ற 24
வாயு - காற்றானது
ஆகாஶே - ஆகாசத்தில்
பாஶை: - கயிறுகளால்
பந்த்தும் ந ஶக்ய: - கட்ட முடியாது.
தீப்யமானஸ்ய - கொழுந்து விட்டெரியும்
அக்நே: - அக்னியினது
விமலா ஶிகா - புகையற்ற ஜ்வாலை
க்ரஹீதும் - கையால் பிடிக்க
அபி வா - அதுபோலவே முடியாததே.

त्रयाणामपि लोकानां न तं पश्यामि शोभने ।
विक्रमेण नयेद्यस्त्वां मद्बाहुपरिपालिताम् ॥

த்ரயாணாமபி லோகாநாம் ந தம் பஶ்யாமி ஶோபனே।
விக்ரமேண நயேத் யஸ்த்வம் மத்பாஹு பரிபாலிதாம் ॥ 25

ஶோபனே - 'கட்டழகி
மத்பாஹு பரிபாலிதாம் - எனது பாகுபலத்தால் பரிபாலிக்கப்பட்ட
த்வாம் - உன்னை
ய: - எவனொருவன்
விக்ரமேண - வலிமையால்
நயேத் - எடுத்துப் போவானோ,
தம் - அவனை
த்ரயாணாம் - மூன்று
லோகாநாம் - உலகங்களுக்குள்
அபி - என்றாலும்
ந பஶ்யாமி - நான் கண்டிலேன்.

लङ्कायां सुमहद्राज्यमिदं त्वमनुपालय ।
त्वत्प्रेष्या मद्विधाश्चैव देवाश्चापि चराचराः ॥

லங்காயாம் ஸுமஹத்ராஜ்யமிதம் த்வமநுபாலய। 26
த்வத்ப்ரேஷ்யா மத்விதாஶ்சைவ தேவாஶ்சாபி சராசரா: ॥

த்வம் - 'நீ
லங்காயாம் - இலங்கையில்
இதம் - இந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸுமஹத் ராஜ்யம் - மிகப்பெரிய ராஜ்யத்தை
அநுபாலய - பரிபாலனம் பண்ணு.
மத்விதா: ச - என்போன்றவர்களும்
தேவா: ச - தேவர்களும்
சராசரா: ஏவ - சராசரங்களும்
த்வத் ப்ரேக்ஷ்யா: அபி- உன்னடிமைகளாவார்களே!

अभिषेकोदकक्लिन्ना तुष्टा च रमयस्व माम् ॥

அபிஷேகோதக க்லிந்நா துஷ்டா ச ரமயஸ்வ மாம் ॥ 27

துஷ்டா - 'சந்தோஷமுற்று
அபிஷேகோதக க்லிந்நா- அபிஷேக தீர்த்தங்களால் ஸ்நானம் செய்யப் பெற்றவளாய்
மாம் ச - என்னையும்
ரமயஸ்வ - நீ, சந்தோஷப்படுத்து.

दुष्कृतं यत्पुरा कर्म वनवासेन संगतम् ।
यश्च ते सुकृतो धर्मस्तस्येह फलमाप्नुहि ॥

துஷ்க்ருதம் யத் புரா கர்ம வனவாஸேந ஸம்கதம் ।
யஶ்ச தே ஸுக்ருதோ தர்மஸ்தஸ்யேஹ பலமாப்நுஹி ॥ 28

புரா - 'பூர்வஜன்மத்தில்
யத் - எது
துஷ்க்ருதம் - பாபத்தால் விளைந்த
கர்ம - பயனோ,
வனவாஸேந - வனவாசத்துடன்
தத் - அது
ஸம்கதம் - ஒழிந்துவிட்டது;
தே - உனக்கு
ஸுக்ருத: - புண்யத்தால் விளையும்
தர்ம: - தர்மமாகிறது
ய: ச - எதுவோ,
தஸ்ய பலம் - அதனது பயனை
இஹ - இப்பொழுது
ஆப்நுஹி - அனுபவி.

इह माल्यानि सर्वाणि दिव्यगन्धानि मैथिलि ।
भूषणानि च मुख्यानि सेवस्व च मया सह ॥

இஹ மால்யாநி ஸர்வாணி திவ்யகந்தாநி மைதிலி ।
பூஷணாநி ச முக்யாநி ஸேவஸ்வ ச மயா ஸஹ ॥ 29

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மைதிலி	-	'மைதிலி!
இஹ	-	இங்கு
திவ்ய கந்தானி	-	பரிமளவாசனையுள்ள
மால்யாநி ச	-	மாலைகளையும்
முக்யாநி	-	சிறந்த
பூஷணாநி ச	-	ஆபரணங்களையும்,
ஸர்வாணி ச	-	மற்றுமெல்லாவற்றையும்
மயா ஸஹ	-	என்னோடுகூட
ஸேவஸ்வ	-	நீ, அனுபவி.

पुष्पकं नाम सुश्रोणि भ्रातुर्वैश्रवणस्य मे ।
विमानं सूर्यसंकाशं तरसा निर्जितं मया ॥

புஷ்பகம் நாம ஸுஶ்ரோணி ப்ராதுர் வைஶ்ரவணஸ்ய மே ।
விமானம் ஸூர்யஸங்காஶம் தரஸா நிர்ஜிதம் மயா ॥ 30

ஸுஶ்ரோணி	-	'மெல்லிடையாளே!
மே	-	எனது
ப்ராது:	-	தமயனாகிய
வைஶ்ரவணஸ்ய	-	குபேரனது
புஷ்பகம் நாம	-	புஷ்பகம் என்ற
ஸூர்ய ஸங்காஶம்	-	சூர்ய ஒளிகொண்ட
விமானம்	-	விமானமானது
மயா	-	என்னால்
தரஸா	-	ஆண்மையால்
நிர்ஜிதம்	-	பறித்துக்கொண்டு வரப்பட்டிருக்கிறது.

विशालं रमणीयं च तद्विमानं मनोजवम् ।
तत्र सीते मया सार्धं विहरस्व यथासुखम् ॥

விஶாலம் ரமணீயம் ச தத்விமானம் மனோஜவம் ।
தத்ர ஸீதே மயா ஸார்தம் விஹரஸ்வ யதாஸுகம் ॥ 31

தத்	-	'அந்த
விமானம்	-	விமானமோ,
மனோஜ்வம்	-	மனம்போல் வேகமுடையது.
விஶாலம்	-	விசாலமானது.
ரமணீயம் ச	-	மிக அழகானது.
ஸீதே	-	சீதாய்!
தத்ர	-	அதில்
யதாஸுகம்	-	உன் இஷ்டம்போல்
மயா ஸார்தம்	-	என்னோடுகூட
விஹரஸ்வ	-	இன்பமாய் காலங்கழி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

वदनं पद्मसंकाशं विमलं चारुदर्शनम् ।
शोकार्तं तु वरारोहे न भ्राजति वरानने ॥

வதனம் பத்மஸங்காஶம் விமலம் சாருதர்ஶனம் ।
ஶோகார்தம் து வராரோஹே ந ப்ராஜதி வராநநே ॥ 32

வராநநே - சுந்தரியான
வராரோஹே - ஸ்திரீரத்னமே!
பத்மஸங்காஶம் - தாமரைப் பூவை நிகர்த்ததும்
விமலம் - மாசற்றதும்
சாருதர்ஶனம் - அழகானதுமான
வதனம் து - முகமும்
ஶோகார்தம் - சோகத்தால் பீடிக்கப்பட்டதாய்
ந ப்ராஜதி - ஒளிகுன்றியிருக்கிறது.'

एवं वदति तस्मिन्सा वस्त्रान्तेन वराङ्गना ।
पिधायेन्दुनिभं सीता मुखमश्रूण्यवर्तयत् ॥

ஏவம் வததி தஸ்மின் ஸா வஸ்த்ராந்தேன வராங்கநா ।
பிதாயேந்துநிபம் ஸீதா முகமஶ்ரூண்யவர்தயத் ॥ 33

ஏவம் - மேற்கண்டவாறு
தஸ்மின் - அவன்
வததி - பேசுகையில்
வராங்கநா - ஸ்திரீரத்னமாகிய
ஸா ஸீதா - அந்த சீதாதேவி
இந்துநிபம் - சந்திரனை நிகர்த்த
முகம் - முகத்தை
வஸ்த்ராந்தேன - ஆடையின் முந்தானையால்,
பிதாய - மூடிக்கொண்டு
அஶ்ரூணி - கண்ணீரை
அவர்தயத் - பெருக்கினாள்.

ध्यायन्तीं तामिवास्वस्थां दीनां चिन्ताहतप्रभाम् ।
उवाच वचनं पापो रावणो राक्षसेश्वरः ॥

த்யாயந்தீம் தாமிவாஸ்வஸ்தாம் தீநாம் சிந்தாஹதப்ரபாம் ।
உவாச வசனம் பாபோ ராவணோ ராக்ஷஸேஶ்வர: ॥ 34

அஸ்வஸ்தாம் - 'வேறெதிலும் மனம் செலுத்த முடியாதவளாய்,
த்யாயந்தீம் - பரமாத்மாவையே த்யானிப்பவளாய்,
தீநாம் - கஷ்டத்திலிருப்பவளாய்,
சிந்தாஹத ப்ரபாம் - கவலையால் ஒளிகுன்றியவளாயிருக்கும்
தாம் இவ - அவளையே பார்த்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாப:	- பாபியும்
ராக்ஷஸேஶ்வர:	- ராக்ஷஸ மன்னனுமாகிய
ராவண:	- ராவணன்
வசனம்	- இன்னொரு சொல்லை
உவாச	- பின்வருமாறு கூறினான்.

अलं व्रीडेन वैदेहि धर्मलोपकृतेन ते ।
आर्षोऽयं दैवनिष्यन्दो यस्त्वामभिगमिष्यति ॥

அலம் வ்ரீடேந வைதேஹி தர்மலோபக்ருதே ந தே ।
ஆர் ஷோऽயம் தைவ நிஷ்யந்தோ யஸ்த்வா மபிகமிஷ்யதி ॥ 35

வைதேஹி	- 'வைதேகி!
தர்மலோபக்ருதேந	- ஸ்திரீகளின் மரியாதைக்கு குறைவு என்பால் வியந்த
வ்ரீடேந	- நாணத்தால்
தே	- உனக்கு
அலம்	- இதுவரையிலும் போதும்
ய:	- எது
த்வாம்	- உன்னை
அபிகமிஷ்யதி	- அடையப்போகிறதோ
அயம்	- இது
ஆர்ஷ:	- மானிடர்களுக்கு கிட்டாது,
தைவ நிஷ்யந்த:	- பாக்கியத்தின் பயன்.

एतौ पादौ मया स्निग्धौ शिरोभिः परिपीडितौ ।
प्रसादं कुरु मे क्षिप्रं वश्यो दासोऽहमस्मि ते ॥

ஏதௌ பாதௌ மயா ஸ்நிக்தௌ ஶிரோபி: பரிபீடிதௌ ।
ப்ரஸாதம் குரு மே க்ஷிப்ரம் வஶ்யோ தாஸோऽஹமஸ்மிதே ॥ 36

மஹா ஸ்நிக்தௌ	- 'முற்றிலும் கண்களைப் பறிக்கும்
ஏதௌ	- உன்னிரண்டு
பாதௌ	- தாள்கள்
ஶிரோபி:	- என் தலைகளால்
பரிபீடிதௌ	- தரிக்கப்படுகின்றன.
மே	- எனக்கு
ப்ரஸாதம்	- அனுக்கிரகத்தை
க்ஷிப்ரம்	- காலதாமதமின்றி
குரு	- செய்.
தே	- உனது
வஶ்ய:	- மனம்கோணாது நடக்கும்
தாஸ:	- அடிமையாய்
அஹம்	- நான்
அஸ்மி	- இருக்கிறேன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

इमाः शून्या मया वाचः शुष्यमाणेन भाषिताः ।
न चापि रावणः कांचिन्मूर्ध्ना स्त्रीं प्रणमेत ह ॥

இமா: ஶூன்யா மயா வாச: ஶுஷ்யமாணேந பாஷிதா: ।
ந சாபி ராவண: காஞ்சின்மூர்த்நா ஸ்த்ரீம் ப்ரணமேத ஹ ॥ 37

ஶுஷ்யமாணேந - 'உனக்காகத் தவிக்கும்
மயா - என்னால்
இமா: - இந்த
வாச: - வாக்குதத்தங்கள்
ஶூன்யா: - கபடமற்றவைகளாய்,
பாஷிதா: - மொழியப்பட்டன.
ராவண: - ராவணன்
காஞ்சித் - ஒரு
ஸ்த்ரீம் ச - பெண்ணையும்
மூர்த்நா - தலையால்
ப்ரணமேத அபி நஹ - வணங்கவே மாட்டானன்றோ.

एवमुक्त्वा दशग्रीवो मैथिलीं जनकात्मजाम् ।
कृतान्तवशमापन्नो ममेयमिति मन्यते ॥

ஏவமுக்த்வா தஶக்ரீவோ மைதிலீம் ஜனகாத்மஜாம் ॥
க்ருதாந்த வஶமாபந்நோ மமேயமிதி மன்யதே ॥ 38

தஶக்ரீவ: - தசக்ரீவன்
ஜனகாத்மஜாம் - ஜனகர் திருமகளான
மைதிலீம் - மைதிலீதேவியை பார்த்து,
ஏவம் - மேற்கண்டவாறு
உக்த்வா - சொல்லிவிட்டு,
க்ருதாந்த வஶம் - எமன்வசத்தில்
ஆபந்ந: - சிக்கிக்கொண்டவனாய்
இயம் - 'இவள்
மம - எனக்கு'
இதி - என்றே
மன்யதே - எண்ணிக் கொள்ளுகிறான்.

இத்யார்ஷே ஶ்ரீமத் ராமாயணே வால்மீகீயே ஆதிகாவ்யே சதுர்விம்ஶதி ஸஹஸ்ரிகாயாம் ஸம்ஹிதாயாம் ஆரண்ய காண்டே ஸீதா விலாபநோத்யமோ நாம பஞ்சபஞ்சாஶ: ஸர்க: ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஷட் பஞ்சாஶ: ஸர்க: - 56

सा तथोक्ता तु वैदेही निर्भया शोककर्शिता ।
तृणमन्तरतः कृत्वा रावणं प्रत्यभाषत ॥

ஸா ததோக்தா து வைதேஹீ நிர்பயா ஶோககர்ஶிதா ।
த்ருணமந்தரத: க்ருத்வா ராவணம் ப்ரத்யபாஷத ॥ 1

ததா	-	மேற்கண்டவாறு
உக்தா	-	சொல்லப்பட்ட
ஸா	-	அந்த
வைதேஹீ	-	ஜானகியார்
நிர்பயா	-	உள்ளம் எள்ளளவும் சலியாதவளாய்
ஶோககர்ஶிதா	-	துயரத்தால் தபித்துக் கொண்டிருப்பவளாய்
த்ருணம்	-	ஓர் துரும்பை
அந்தரத:	-	இடையில்
க்ருத்வா	-	போட்டு
து	-	அதன் பின்னர்
ராவணம்	-	ராவணனைப் பார்த்து
ப்ரத்யபாஷத	-	பின்வருமாறு பதிலுரைத்தாள்.

राजा दशरथो नाम धर्मसेतुरिवाचलः ।
सत्यसन्धः परिज्ञातो यस्य पुत्रः स राघवः ॥

ராஜா தஶரதோ நாம தர்மஸேதுரிவாசல: ।
ஸத்யஸந்த: பரிக்ஞாதோ யஸ்ய புத்ர: ஸ ராகவ: ॥ 2

தஶரத: நாம	-	'தசரதரென்ற
ராஜா	-	சக்கிரவர்த்தியார்
அசல:	-	வழுவாத
தர்மஸேது:	-	தர்மத்தின் எல்லைக்கல்
இவ	-	போன்ற
ஸத்யஸந்த:	-	சத்யசந்தர்.
பரிக்ஞாத:	-	த்ரிலோகப் பிரசித்தி பெற்றவர்.
யஸ்ய	-	எவரோ அவருடைய
புத்ர:	-	திருக்குமாரன்
ஸ:	-	அந்த
ராகவ:	-	ஶ்ரீராமர்.

रामो नाम स धर्मात्मा त्रिषु लोकेषु विश्रुतः ।
दीर्घबाहुर्विशालाक्षो दैवतं स पतिर्मम ॥

ராமோ நாம ஸ தர்மாத்மா த்ரிஷு லோகேஷு விஶ்ருத: । 3
தீர்கபாஹுர்விஶாலாக்ஷோ தைவதம் ஹி பதிர்மம ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மம - 'எனது
பதி: - கணவரான
ராம: நாம - ஸ்ரீராமரென்ற
ஸ: ஹி - அவரே
தைவதம் - பிரத்தியக்ஷ தைவம்.
தர்மாத்மா - தர்மமே உருவெடுத்து வந்தவர்.
த்ரிஷு - மூன்று
லோகேஷு - உலகங்களிலும்
விஶ்ருத: - பிரசித்தி பெற்றவர்.
தீர்கபாஹு: - நீண்ட கைகளுற்றவர்,
விஶாலாக்ஷ: - அகன்ற கண்களுற்றவர்.

इक्ष्वाकूणां कुले जातः सिंहस्कन्धो महाद्युतिः ।
लक्ष्मणेन सह भ्रात्रा यस्ते प्राणान् हरिष्यति ॥

இக்ஷ்வாகூணாம் குலே ஜாத: ஸிம்ஹஸ்கந்தோ மஹாத்யுதி: ।
லக்ஷ்மணேன ஸஹ ப்ராத்ரா யஸ்தே ப்ராணான் ஹரிஷ்யதி ॥ 4

ப்ராத்ரா - 'தம்பியாகிய
லக்ஷ்மணேன ஸஹ - லக்ஷ்மணரோடுகூட
தே - உனது
ப்ராணான் - உயிரை
ய: - எவரொருவர்
ஹரிஷ்யதி - வாங்கப் போகிறாரோ, அவர்
இக்ஷ்வாகூணாம் - இக்ஷ்வாகுக்களுடைய
குலே - குலத்தில்
ஜாத: - அவதரித்திருக்கிறார்.
ஸிம்ஹஸ்கந்த: - சிம்மத்திற்குச் சமானமாகிய உடலுற்றவர்.
மஹாத்யுதி: - அளவுகடந்த பெருமை வாய்ந்தவர்.

प्रत्यक्षं यद्यहं तस्य त्वया स्यां धर्षिता बलात् ।
शयिता त्वं हतः संख्ये जनस्थाने यथा खरः ॥

ப்ரத்யக்ஷம் யத்யஹம் தஸ்ய த்வயா ஸ்யாம் தர்ஷிதா பலாத் ।
ஶயிதா த்வம் ஹத: ஸங்க்யே ஜனஸ்தானே யதா கர: ॥ 5

அஹம் - 'நான்
தஸ்ய - அவரது
ப்ரத்யக்ஷம் - கண்முன்
த்வயா - உன்னால்
பலாத் - செருக்கால்
தர்ஷிதா - தொடப்பட்டவளாக
யதி ஸ்யாம் - ஆவேனாகில்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

த்வம்	- நீ
ஜனஸ்தானே	- ஜனஸ்தானத்தில்
ஸங்க்யே	- போரில்
கர: யதா	- கரன்போலவே
ஹத:	- மாண்டவனாக
ஶயிதா	- வாடும்துயில் கொண்டிருப்பாய். (வீழ்ந்திருப்பாய்)

य एते राक्षसाः प्रोक्ता घोररूपा महाबलाः ।
राघवे निर्विषाः सर्वे सुपर्णे पन्नगा यथा ॥

ய ஏதே ராக்ஷஸா: ப்ரோக்தா கோரரூபா மஹாபலா: ।
ராகவே நிர்விஷா: ஸர்வே ஸுபர்ணே பன்னகா யதா ॥ 6

யே	- 'எந்த
ராக்ஷஸா:	- அரக்கர்கள்
கோரரூபா:	- பயங்கரமான ரூபமுடையவர்களென்றும்
மஹாபலா:	- மகாபலிஷ்டர்களென்றும்
ப்ரோக்தா:	- சொல்லப்பட்டார்களோ,
ஏதே	- இந்த
ஸர்வே	- எல்லோரும்
ஸுபர்ணே	- கருடனிடத்தில்
பன்னகா:	- சர்பங்கள்
யதா	- எவ்வண்ணமோ அவ்வண்ணமே
ராகவே	- ஸ்ரீராகவனிடத்தில்
நிர்விஷா:	- செயலற்றவர்கள்.

तस्य ज्याविप्रमुक्तास्ते शराः काञ्चनभूषणाः ।
शरीरं विधमिष्यन्ति गङ्गाकूलमिवोर्मयः ॥

தஸ்ய ஜ்யாவிப்ரமுக்தாஸ்தே ஶரா: காஞ்சனபூஷணா: ।
ஶரீரம் விதமிஷ்யந்தி கங்காகூல மிவோர்மய: ॥ 7

தஸ்ய	- 'அவரது
காஞ்சனபூஷணா:	- பொன்புனைந்தவைகளும்
ஜ்யாவிப்ரமுக்தா:	- நாணிலிருந்து விடப்பட்டவைகளுமான
ஶரா:	- பாணங்கள்
தே	- உனது
ஶரீரம்	- உடலை
ஊர்மய:	- பிரவாஹங்கள்
கங்காகூலம்	- கங்கைக் கரையை
இவ	- எப்படியோ அப்படியே
விதமிஷ்யந்தி	- அறுக்கப்போகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

असुरैर्वा सुरैर्वा त्वं यद्यवध्योऽसि रावण ।
उत्पाद्य सुमहद्वैरं जीवंस्तस्य न मोक्ष्यसे ॥

அஸுரைர் வா ஸுரைர் வா த்வம் யத்யவத்யோऽஸி ராவண ।
உத்பாத்ய ஸுமஹத்வைரம் ஜீவன் தஸ்ய ந மோக்ஷ்யஸே ॥ 8

ராவண - 'ராவணா!
அஸுரை: வா - அசுரர்களாலும்
ஸுரை: வா - தேவர்களாலும்
த்வம் - நீ
அவத்ய: - கொல்ல முடியாதவனாய்,
அஸி யதி - இருக்கிறாயென்றாலும்,
தஸ்ய - அவரது
ஸுமஹத் - மிக அசஹ்யமான
வைரம் - த்வேஷத்தை
உத்பாத்ய - ஸம்பாதித்து,
ஜீவன் - உயிருடன்
ந மோக்ஷ்யஸே - தப்பமாட்டாய்.

स ते जीवितशेषस्य राघवोऽन्तकरो बली ।
पशोर्यूपगतस्येव जीवितं तव दुर्लभम् ॥

ஸ தே ஜீவித ஶேஷஸ்ய ராகவோऽந்தகரோ பலீ ।
பஶோர் யூபகதஸ்யேவ ஜீவிதம் தவ துர்லபம் ॥ 9

ஜீவித ஶேஷஸ்ய - 'வாழ்நாளின் முடிவைக்கண்ட
தே - உனக்கு
பலீ - பலசாலியாகிய
ஸ: - அந்த
ராகவ: - ஸ்ரீராமர்
அந்தகர: - மரணத்தை விளைவிப்பவராவார்.
யூபகதஸ்ய - யாகக் கம்பத்தையடைந்த
பஶோ: - பசுவிற்கு
இவ - எப்படியோ அப்படியே
தவ - உனக்கு
ஜீவிதம் - உயிரிருப்பது
துர்லபம் - அசாத்தியம்.

यदि पश्येत् स रामस्त्वां रोषदीप्तेन चक्षुषा ।
रक्षस्त्वमद्य निर्दग्धो गच्छेः सद्यः पराभवम् ॥

யதி பஶ்யேத் ஸ ராமஸ்த்வாம் ரோஷதீப்தேந சக்ஷுஷா ।
ரக்ஷஸ்த்வமத்ய நிர்தக்தோ கச்சே: ஸத்ய: பராபவம் ॥ 10

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ: ராம: - 'அந்த ஸ்ரீராமர்
ரோஷதீப்தேந - கோபத்தால் சிவந்த
சக்ஷுஷா - கண்ணால்
த்வாம் - உன்னை
அத்ய - இப்பொழுது
பஶ்யேத் யதி - பார்க்கிறார் என்றால்
ஸத்ய: - உடனே
ரக்ஷ: - அரக்கனாகிய
த்வம் - நீ
நிர்தக்த: - தஹிக்கப்பட்டவனாய்
பராபவம் - நாசத்தை
கச்சே: - அடைவாய்.

यश्चन्द्रं नभसो भूमौ पातयेन्नाशयेत वा ।
सागरं शोषयेद्वापि स सीतां मोचयेदिह ॥

யஶ்சந்த்ரம் நபஸோ பூமௌ பாதயேந் நாஶயேத வா ।
ஸாகரம் ஶோஷயேத்வாபி ஸ ஸீதாம் மோசயேதிஹ ॥ 11

ய: - 'எவர்
நபஸ: - ஆகாயத்திலிருந்து
சந்த்ரம் வா - சந்திரனையும்கூட
பூமௌ - தரையில்
பாதயேத் - தள்ளவல்லரோ,
நாஶயேத வா - வேண்டுமென்றால் அழிக்கவும் வல்லரோ,
ஸாகரம் அபி - சமுத்திரத்தையும்
ஶோஷயேத் - வற்ற வடிக்கவும் வல்லரோ,
ஸ: - அவர்
ஸீதாம் - லாங்கலபத்ததியிலுண்டான என்னை
இஹ - இப்பொழுது
மோசயேத் - விடுவிப்பார்.

गतायुस्त्वं गतश्रीको गतसत्त्वो गतेन्द्रियः ।
लङ्का वैधव्यसंयुक्ता त्वत्कृते न भविष्यति ॥

கதாயுஸ்த்வம் கத ஸ்ரீகோ கதஸத்வோ கதேந்த்ரிய: ।
லங்கா வைதவ்ய ஸம்யுக்தா த்வத்க்ருதே ந பவிஷ்யதி ॥ 12

த்வம் - 'நீ
கதாயு: - ஆயுள் முடிந்தவன்.
கத ஸ்ரீக: - லக்ஷ்மியால் கைவிடப்பட்டவன்.
கத ஸத்வ: - பாக்யமொழிந்தவன்.
கதேந்த்ரிய: - கொழுப்பொழிந்தவன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

த்வத்க்ருதேந - உன்நிமித்தம்
லங்கா - இலங்கை நகர்
வைதவ்ய ஸம்யுக்தா- கைமைத்தன்மையுற்றதாய்
பவிஷ்யதி - ஆகப்போகிறது.

न ते पापमिदं कर्म सुखोदर्कं भविष्यति ।
याहं नीता विनाभावं पतिपार्श्वात्त्वया वने ॥

நதே பாபமிதம் கர்ம ஸுகோதர்கம் பவிஷ்யதி ।
யாஸ்ஹம் நீதா விநாபாவம் பதிபார்ஶ்வாத் த்வயா வனே ॥ 13

யா - 'எவள்
வனே - காட்டில்
பதி பார்ஶ்வாத் - கணவனது பக்கலிலிருந்து
விநாபாவம் - பிரிந்திருப்பதை
த்வயா - உன்னால்
நீதா - அடைவிக்கப்பட்டாளோ, அவள்
அஹம் - நான்
இதம் - இந்த
பாபம் - தீய
கர்ம - தொழில்
தே - உனக்கு
ஸுகோதர்கம் - நலந்தருவதாய்
ந பவிஷ்யதி - ஆகாது.

स हि देवरसंयुक्तो मम भर्ता महाद्युतिः ।
निर्भयो वीर्यमाश्रित्य शून्ये वसति दण्डके ॥

ஸ ஹி தேவரஸம்யுக்தோ மம பர்தா மஹாத்யுதி: ।
நிர்பயோ வீர்யமாஶ்ரித்ய ஶூன்யே வஸதி தண்டகே ॥ 14

மம - 'எனது
பர்தா - கணவர்
மஹாத்யுதி: - அளவுகடந்த மகிமை வாய்ந்தவர்.
ஸ: - அவர்
தேவர ஸம்யுக்த: - கொழுந்தனாரோடு இருக்கிறவராய்
வீர்யம் - வீர்யத்தை
ஆஶ்ரித்ய - கொண்டு,
ஶூன்யே - ஜனசஞ்சாரமற்ற
தண்டகே - தண்டகாவனத்தில்
நிர்பய: ஹி - பயமற்றவராகவே,
வஸதி - வஸிக்கின்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

स ते दर्पं बलं वीर्यमुत्सेकं च तथाविधम् ।
अपनेष्यति गात्रेभ्यः शरवर्षेण संयुगे ॥

ஸ தே தர்பம் பலம் வீர்ய முத்ஸேகம் த ததாவிதம் ।
அபநேஷ்யதி காத்ரேப்ய: ஶரவர்ஷேண ஸம்யுகே ॥

தே - 'உனது 15
தர்பம் - செருக்கையும்,
பலம் - ஆற்றலையும்,
வீர்யம் - வீரத்தையும்,
ததாவிதம் - அப்படிப்பட்டதாயிருக்கிற
உத்ஸேகம் ச - வரம்பு மீறி நடக்குமதிகப்பிரசங்கித் தனத்தையும்
ஸம்யுகே - போரில்
ஶரவர்ஷேண - பாணமாரியால்
காத்ரேப்ய: - உன் அவயவங்களிலிருந்து
ஸ: - அவர்
அபநேஷ்யதி - அழித்துவிடப் போகிறார்.

यदा विनाशो भूतानां दृश्यते कालचोदितः ।
तदा कार्ये प्रमाद्यन्ति नराः कालवशं गताः ॥

யதா விநாஶோ பூதாநாம் த்ருஶ்யதே காலசோதித: ।
ததா கார்யே ப்ரமாத்யந்தி நரா: காலவஶம் கதா: ॥ 16

பூதாநாம் - 'பிராணிகளுக்கு
காலசோதித: - யமனால் விதிக்கப்பட்ட
விநாஶ: - மரணம்
யதா - எப்பொழுது
த்ருஶ்யதே - நேருகிறதோ,
ததா - அப்பொழுது
கால வஶம் கதா: - யமனுக்காள்பட்ட
நரா: - மானிடர்கள்
கார்யே - நடவடிக்கையில்
ப்ரமாத்யந்தி - தடுமாறுகின்றார்கள்.

मां प्रधृष्य स ते कालः प्राप्तोऽयं राक्षसाधम ।
आत्मनो राक्षसानां च वधायान्तःपुरस्य च ॥

மாம் ப்ரத்ருஷ்ய ஸ தே கால: ப்ராப்தோऽயம் ராக்ஷஸாதம । 17
ஆத்மநோ ராக்ஷஸாநாம் ச வதாயாந்த:புரஸ்ய ச ॥

ராக்ஷஸாதம - 'ராக்ஷஸப்பதரே!
மாம் - என்னை
ப்ரத்ருஷ்ய ச - தொட்டமையால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆத்மன: - உனக்கும்,
ராக்ஷஸாநாம் - அரக்கர்களுக்கும்,
தே - உனது
அந்த:புரஸ்ய ச - அந்தப்புர ஸ்திரீமூகத்திற்கும்
வதாய - நாசத்தின் பொருட்டு
ஸ: கால: - அந்த அழிவுகாலம்
அயம் - இதோ
ப்ராப்த: - வந்துவிட்டது.

इदमन्तःपुरं रम्यं रत्नस्थापितमीदृशम् ।
रामबाणानलः सर्वं दग्धं तव करिष्यति ॥

இதம் அந்த:புரம் ரம்யம் ரத்ந ஸ்தாபிதம் ஈத்ருஶம் ।
ராமபாணாநல: ஸர்வம் தக்தம் தவ கரிஷ்யதி ॥ 18

தவ - 'உனது
ஈத்ருஶம் - இப்படி
ரத்னஸ்தாபிதம் - ரத்னங்களாலிழைக்கப்பெற்று
ரம்யம் - அழகுவாய்ந்த
இதம் - இந்த
அந்த:புரம் - அந்தப்புரம்
ஸர்வம் - எல்லாவற்றையும்
ராம பாணாநல: - ராமபாணமாகிற தீயானது,
தக்தம் - உருக்குலைந்ததாக
கரிஷ்யதி - செய்யப்போகிறது.

न शक्या यज्ञमध्यस्था वेदिः स्रुग्भाण्डमण्डिता ।
द्विजातिमन्त्रसंपूता चण्डालेनावमर्दितुम् ॥

ந ஶக்யா யஞ மத்யஸ்தா வேதி: ஸ்ருக்பாண்ட மண்டிதா ।
த்விஜாதிமந்த்ரஸம்பூதா சண்டாலேநாவமர்திதும் ॥ 19

யஞ மத்யஸ்தா - 'யாகசாலையின் மத்தியில் ஸ்தாபிக்கப்பட்டதும்
ஸ்ருக்பாண்ட மண்டிதா - யாகபாத்ரங்கள் நிறைந்ததும்
த்விஜாதி மந்த்ரபூதா ச - அந்தணர்களால் வேத மந்திரங்களால் புனிதமாக்கப்பட்டதுமான
வேதி: - வேதியானது
சண்டாலேந - தீண்டாதவன் ஒருவனால்
அவமர்திதும் - தீண்ட
ந ஶக்யா - முடியாது.

तथाहं धर्मनित्यस्य धर्मपत्नी पतिव्रता ।
त्वया स्प्रष्टुं न शक्यास्मि राक्षसाधम पापिना ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ததாஹம் தர்மநித்யஸ்ய தர்மபத்நீ பதிவ்ரதா ।
த்வயா ஸ்ப்ரஷ்டும் ந ஶக்யாஸ்மி ராக்ஷஸாதம பாபிநா ॥ 20

ராக்ஷஸாதம - 'இராக்கதப்பதரே!
ததா - அவ்வண்ணமே
தர்ம நித்யஸ்ய - தர்மத்தினின்று நழுவாதவருடைய
தர்மபத்நீ - தர்மபத்னியும்
பதிவ்ரதா - கணவனையே சர்வமுமாய்க் கொண்டவளுமான,
அஹம் - நான் —
பாபிநா - பாவியாகிய
த்வயா - உன்னால்
ஸ்ப்ரஷ்டும் - தீண்ட
ந ஶக்யா - முடியாதவளாக
அஸ்மி - இருக்கிறேன்.

क्रीडन्ती राजहंसेन पद्मषण्डेषु नित्यदा ।
हंसी सा तृणषण्डस्थं कथं द्रक्ष्येत मद्गुकम् ॥

க்ரீடந்தீ ராஜஹம்ஸேந பத்மஷண்டேஷு நித்யதா ।
ஹம்ஸீ ஸா த்ருண ஷண்டஸ்தம் கதம் த்ரக்ஷ்யேத மத்குகம் ॥ 21

நித்யதா - 'எப்பொழுதும்
பத்ம ஷண்டேஷு - தாமரை புஷ்பங்களால் நிறைந்த ஓடைகளில்
ராஜ ஹம்ஸேந - அரச அன்னத்தோடு
க்ரீடந்தீ - விளையாடும்
ஸா - அந்த
ஹம்ஸீ - பெண்ணன்னம்
த்ருண ஷண்டஸ்தம் - புல் நிரம்பிய சேற்றிலிருக்கும்
மத்குகம் - நீர்க்காக்கையை
கதம் பஶ்யேத - கண்ணெடுத்துப் பார்க்குமா? பாராது.

इदं शरीरं निःसंज्ञं बन्ध वा खादयस्व वा ।
नेदं शरीरं रक्षिष्य जीवितं चाऽपि राक्षस ॥

இதம் ஶரீரம் நிஸ்ஸம்ஜ்ஞம் பந்த வா காதயஸ்வ வா ।
நேதம் ஶரீரம் ரக்ஷிஷ்யே ஜீவிதம் சாऽபி ராக்ஷஸ ॥ 22

ராக்ஷஸ - 'இராக்ஷஸா!
நிஸ்ஸம்ஜ்ஞம் - அறிவு அவருக்கு அர்ப்பணமாகி அதனால் ஜடமாயிருக்கிற
இதம் ஶரீரம் - இந்த சரீரத்தை
பந்த வா - கைதியாகத் தான் அடைத்துவை?
காதயஸ்வ வா - தின்னவாவது தின்றுவிடு;
ஜீவிதம் - உயிரை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ந ரக்ஷிஷ்யே - வைத்திரேன்.
இதம் - இந்த
ஶரீரம் - சரீரத்தைப் பற்றி
அபி ச - எனக்காவதென்ன?

न तु शक्ष्याम्युपक्रोशं पृथिव्यां दातुमात्मनः ॥

ந து ஶக்ஷ்யாம்யுபக்ரோஶம் ப்ருதிவ்யாம் தாதுமாத்மன: ॥ 23

ப்ருதிவ்யாம் - 'உலகில்
ஆத்மன: து - என்னைப்பற்றி
உபக்ரோஶம் தாதும் - இகழ்ந்து பேசுவதற்கு
ந ஶக்ஷ்யாமி - நான் இடம் கொடுக்க மாட்டேன்.'

एवमुक्त्वा तु वैदेही क्रोधात् सुपरुषं वचः ।
रावणं मैथिली तत्र पुनर्नोवाच किञ्चन ॥

ஏவமுக்த்வா து வைதேஹீ க்ரோதாத் ஸுபருஷம் வச: ।
ராவணம் மைதிலீ தத்ர புனர்நோவாச கிஞ்சன ॥ 24

மைதிலீ - மிதிலைக்கோன் திருமகளாகும்
வைதேஹீ - ஜானகியார்
ராவணம் - ராவணனைப் பார்த்து
து - இது விஷயத்தில்
க்ரோதாத் - ரோஷத்தால்
ஸுபருஷம் - மிகக்ரூரமான
வச: - சொல்லை.
தத்ர - அப்பொழுது
ஏவம் - மேற்கண்டவாறு
உக்த்வா - சொல்லிவிட்டு,
புன: - அதன்மேல் இப்பொழுது
கிஞ்சன - வேறெதொன்றையும்
உவாச ந - பேசாதிருந்தாள்.

सीताया वचनं श्रुत्वा परुषं रोमहर्षणम् ।
प्रत्युवाच ततः सीतां भयसंदर्शनं वचः ॥

ஸீதாயா வசனம் ஶ்ருத்வா பருஷம் ரோமஹர்ஷணம் ।
ப்ரத்யுவாச தத: ஸீதாம் பயஸந்தர்ஶனம் வச: ॥ 25

ஸீதாயா: - சீதாதேவியினது
ரோம ஹர்ஷணம் - மயிற்கூச்செறியும்படியான
பருஷம் - வன்
வசனம் - மொழியை
ஶ்ருத்வா - கேட்டு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தத: - அதன்மேல்
ஸீதாம் - சீதாதேவியைப் பார்த்து
பய ஸந்தர்ஶனம் - பயத்தை விளைவிக்கிற
வச: - பின்வரும் சொல்லை
ப்ரத்யுவாச - பதிலாயுரைத்தான்.

शृणु मैथिलि मद्वाक्यं मासान् द्वादश भामिनि ।
कालेनानेन नाभ्येषि यदि मां चारुहासिनि ॥
ततस्त्वां प्रातराशार्थं सूदाश्छेत्स्यन्ति लेशशः ॥

ஶ்ருணு மைதிலீ மத்வாக்யம் மாஸாந் த்வாதஶ பாமினி ।
காலேநாநேந நாப்யேஷி யதி மாம் சாருஹாஸிநி ॥
ததஸ்த்வாம் ப்ராதராஶார்தம் ஸூதாஶ் சேத்ஸ்யந்தி லேஶஶ: ॥ 26

மைதிலீ - 'மைதிலி!
மத் வாக்யம் - எனது சொல்லை
த்வாதஶ - பன்னிரண்டு
மாஸாந் - மாதங்களுக்குள்
ஶ்ருணு - பெருமைப்படுத்தி அதன்படி நட.
பாமினி - கட்டழகியே!
அநேந காலேந - இதற்குள்ளாக
மாம் - என்னை
ந அப்யேஷி யதி - நீ அங்கீகரிக்காதபக்ஷத்தில்
சாருஹாஸிநி - மனங்களைக் கொள்ளை கொள்ளும் புன்சிரிப்புற்றவளே!
தத: - அதன்மேல்
த்வாம் - உன்னை
ப்ராதராஶார்தம் - காலை போஜனத்திற்காக
ஸூதா: - சமையற்காரர்கள்
லேஶஶ: - துண்டந்துண்டமாய்
சேத்ஸ்யந்தி - வெட்டுவார்கள்.'

इत्युक्त्वा परुषं वाक्यं रावणः शत्रुरावणः ।
राक्षसीश्च ततः क्रुद्ध इदं वचनमब्रवीत् ॥

இத்யுக்த்வா பருஷம் வாக்யம் ராவண: ஶத்ருராவண: । 27
ராக்ஷஸீஶ்ச தத: க்ருத்த இதம் வசனமப்ரவீத் ॥

ஶத்ருராவண: - சத்ருக்களைக் கதற அடிக்கும்
ராவண: - ராவணன்
க்ருத்த: - கோபம் தலைக்கேறியவனாகி
பருஷம் - பருஷமான
வாக்யம் - சொல்லை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதி - மேற்கண்டவாறு
உக்த்வா - சொல்லிவிட்டு
தத: - அதன்மேல்
ராக்ஷஸீ: - ராக்ஷஸிகளைப் பார்த்து
இதம் - பின்வரும்
வசனம் ச - மொழியையும்
அப்ரவீத் - கூறினான்.

शीघ्रमेव हि राक्षस्यो विकृता घोरदर्शना: ।
दर्पमस्या विनेष्यध्वं मांसशोणितभोजना: ॥

ஶீக்ரமேவ ஹி ராக்ஷஸ்யோ விக்ருதா கோரதர்ஶநா: ।
தர்பமஸ்யா விநேஷ்யத்வம் மாம்ஸ ஶோணித போஜநா: ॥ 28

மாம்ஸ ஶோணித போஜநா: - 'மாமிசத்தையும் ரத்தத்தையும் உணவாகக் கொண்டு
கோரதர்ஶநா: - பயங்கரமான தோற்றமுள்ள
விக்ருதா: - அறிமுகமில்லாதவர்களாகிய
ராக்ஷஸ்ய: - அரக்கிகளே!
ஶீக்ரம் ஏவ - சீக்கிரத்திலேயே
அஸ்யா: ஹி - இவளுடையவும்
தர்பம் - செருக்கை
விநேஷ்யத்வம் - நீங்கள் அடக்கவேண்டும்.'

वचनादेव तास्तस्य सुघोरा राक्षसीगणा: ।
कृतप्राञ्जलयो भूत्वा मैथिलीं पर्यवारयन् ॥

வசநாதேவ தாஸ்தஸ்ய ஸுகோரா ராக்ஷஸீகணா: ।
க்ருத ப்ராஞ்ஜலயோ பூத்வா மைதிலீம் பர்யவாரயன் ॥ 29

ஸுகோரா: - மிக்க கொடிய
தா: - அந்த
ராக்ஷஸீகணா: - ராக்ஷஸீகணங்கள்
க்ருத ப்ராஞ்ஜலய: - அஞ்சலிஹஸ்தர்களாய்
பூத்வா - ஆகி,
தஸ்ய - அவனது
வசநாத் ஏவ - ஆக்கினையாலேயே
மைதிலீம் - மைதிலியாரை
பர்யவாரயன் - சூழ்ந்து நின்றுகொண்டார்கள்.

स ता: प्रोवाच राजा तु रावणो घोरदर्शन: ।
प्रचाल्य चरणोत्कर्षैर्दारयन्निव मेदिनीम् ॥

ஸ தா: ப்ரோவாச ராஜாது ராவணோ கோரதர்ஶந: ।
ப்ரசால்ய சரணோத்கர்ஷைர் தாரயந்நிவ மேதிநீம் ॥ 30

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ: கோர தர்ஶன: - அந்த பயங்கரமான தோற்றமுடைய
ராஜா - மன்னனாகும்
ராவண: - ராவணன்
ப்ரசால்ய - எழுந்து நின்று,
சரணோத்கர்ஷை: - கால்களை உயரத் தூக்கித் தூக்கி வைக்குமடிகளால்
மேதிநீம் - பூமியை
தாரயந் இவ - பிளக்கிறவன் போலாகி
தா: - அவர்களைப் பார்த்து
து - இன்னுமிப்படியும்
ப்ரோவாச - ஆக்ஞாபித்தான்.

अशोकवनिकामध्ये मैथिली नीयतामियम् ।
तत्रेयं रक्ष्यतां गूढं युष्माभिः परिवारिता ॥

அஶோக வநிகாமத்யே மைதிலீ நீயதாமியம் ।
தத்ரேயம் ரக்ஷ்யதாம் கூடம் யுஷ்மாபி: பரிவாரிதா ॥ 31

இயம் மைதிலீ - 'இந்த சீதை
அஶோக வநிகா மத்யே - அசோகவனப் பிரதேசத்தில்
நீயதாம் - உங்களால் கொண்டுபோய் சேர்க்கப்படட்டும்.
இயம் - இவள்
தத்ர - அவ்விடத்தில்
யுஷ்மாபி: - உங்களால்
பரிவாரிதா - சூழப்பட்டவளாய்
கூடம் - ரகஸ்யமாய்
ரக்ஷ்யதாம் - காப்பாற்றப்படட்டும்.

तत्रैनां तर्जनैर्घोरैः पुनः सान्त्वैश्च मैथिलीम् ।
आनयध्वं वशं सर्वा वन्यां गजवधूमिव ॥

தத்ரைநாம் தர்ஜனைர் கோரை: புன: ஸாந்த்வைஶ்ச மைதிலீம் । 32
ஆனயத்வம் வஶம் ஸர்வா வன்யாம் கஜவதூமிவ ॥

வன்யாம் - 'காட்டு
கஜவதூம் - பெண் யானையை
இவ - எவ்வண்ணமோ அவ்வண்ணமே
தத்ர - அவ்விடத்தில்
புன: - இனிமேலும்
கோரை: - கொடிய
தர்ஜனை: - பயம் விளைவிக்கும் சொற்களாலும்
ஸாந்த்வை: ச - இன்சொற்களாலும்
ஏநாம் மைதிலீம் - இந்த சீதையை
ஸர்வா: - நீங்கள் எல்லோருமாய்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வஶம் - வழிக்கு
ஆனயத்வம் - கொண்டு வாருங்கள்.'

इति प्रतिसमादिष्टा राक्षस्यो रावणेन ताः ।
अशोकवनिकां जग्मुर्मैथिलीं प्रतिगृह्य तु ॥

இதி ப்ரதிஸமாதிஷ்டா ராக்ஷஸ்யோ ராவணேன தா: ।
அஶோகவனிகாம் ஜக்முர் மைதிலீம் ப்ரதிக்ருஹ்ய து ॥ 33

सर्वकामफलैर्वृक्षैर्नानापुष्पफलैर्वृताम् ।
सर्वकालमदैश्चापि द्विजैः समुपसेविताम् ॥

ஸர்வகாம பலைர் வ்ருக்ஷைர் நாநா புஷ்பபலைர் வ்ருதாம் ।
ஸர்வகால மதைஶ்சாபி த்விஜை: ஸமுபஸேவிதாம் ॥ 34

ஸர்வ காம பலை: - விரும்பிய எல்லாக் கனிகளையுடையவைகளும்
நாநா புஷ்ப பலை: - பலவித புஷ்பங்களையும் கனிகளையும் உடையவைகளுமான
வ்ருக்ஷை: - விருக்ஷங்களால்
வ்ருதாம் ச - நிறைந்துள்ளதும்
ஸர்வ கால மதை: - எக்காலத்திலும் கொழுத்த
த்விஜை: - பறவைகளால்
ஸமுபஸேவிதாம் அபி - நெருங்கி விளங்கிக் கொண்டிருக்கிறதுமான
அஶோக வனிகாம் - அசோக வனத்திற்கு
ராவணேன - ராவணனால்
இதி - மேற்கண்டவாறு
ப்ரதிஸமாதிஷ்டா: - ஆக்ஞாபிக்கப்பட்டவர்களான
தா: - அந்த
ராக்ஷஸ்ய: - அரக்கிகள்
மைதிலீம் - ஸீதாதேவியை
ப்ரதிக்ருஹ்ய து - கையில் எடுத்துக்கொண்டே
ஜக்மு: - சென்றார்கள்.

सा तु शोकपरीताङ्गी मैथिली जनकात्मजा ।
राक्षसीवशमापन्ना व्याघ्रीणां हरिणी यथा ॥

ஸா து ஶோக பரீதாங்கீ மைதிலீ ஜனகாத்மஜா ।
ராக்ஷஸீவஶமாபந்நா வ்யாக்ரீணாம் ஹரிணீ யதா ॥ 35

வ்யாக்ரீணாம் - புலிகளிடையில்
ஹரிணீ யதா - பெண்மான்போல
ஸா - அந்த
ஜனகாத்மஜா - ஜனகர் திருமகளாகும்
மைதிலீ து - மைதிலியாரும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஶோக பரீதாங்கீ	-	சோகத்தால் மனமிழந்தவளாகி
ராக்ஷஸீ வஶம்	-	ராக்ஷஸிகளுடைய வசத்தில்
ஆபந்நா	-	சிக்கிக் கொண்டாள்.

शोकेन महता ग्रस्ता मैथिली जनकात्मजा ।
न शर्म लभते भीरुः पाशबद्धा मृगी यथा ॥

ஶோகேந மஹதா க்ரஸ்தா மைதிலீ ஜனகாத்மஜா ।
ந ஶர்ம லபதே பீரு: பாஶபத்தா ம்ருகீ யதா ॥

ஜனகாத்மஜா	-	ஜனகர் திருமகளாகும்	36
மைதிலீ	-	மைதிலியார்	
பாஶபத்தா	-	வலையில் சிக்கிக்கொண்ட	
ம்ருகீ யதா	-	பெண்மான்போல,	
மஹதா	-	இத்தன்மையதென்று சொல்ல முடியாத	
ஶோகேந	-	மனவேதனையால்	
க்ரஸ்தா	-	பிடுங்குண்டவளாய்,	
பீரு:	-	உள்ளம் நடுங்கி	
ஶர்ம	-	ஆபத்தினின்று தப்பும் வழியை	
ந லபதே	-	காணவில்லை.	

न विन्दते तत्र तु शर्म मैथिली विरूपनेत्राभिरतीव तर्जिता ।
पतिं स्मरन्ती दयितं सलक्ष्मणं विचेतनाभूद्भयशोकपीडिता ॥

ந விந்ததே தத்ர து ஶர்ம மைதிலீ விருபநேத்ராபிரதீவ தர்ஜிதா ।
பதிம் ஸ்மரந்தீ தயிதம் ச லக்ஷ்மணம் விசேதநாபூத் பயஶோக பீடிதா ॥ 37

தத்ர	-	அப்பொழுது
மைதிலீ	-	மைதிலியார்
விருப நேத்ராபி:	-	பயங்கரமான கண்களையுடைய அவர்களால்
அதீவ	-	மிகவும்
தர்ஜிதா	-	மிரட்டப்பட்டவளாய்
ஶர்ம து	-	நல்வார்த்தை ஒன்றைக்கூட (மன அமைதியை)
ந விந்ததே	-	அடையவில்லை.
பயஶோக பீடிதா	-	சோகத்தில் மூழ்கிக்கிடக்குமவள்,
ஸ லக்ஷ்மணம்	-	லக்ஷ்மணருடனிருக்கும்
தயிதம்	-	அன்பார்ந்த
பதிம்	-	கணவரை
ஸ்மரந்தீ	-	த்யானிப்பவளாய்
விசேதநா	-	மற்றெதிலுமறிவிழந்தவளாய்
அபூத்	-	இருந்தாள்.

*இத்யார்ஷே ஸ்ரீமத் ராமாயணே வால்மீகீயே ஆதிகாவ்யே
சதுர்விம்ஶதி ஸஹஸ்ரிகாயாம் ஸம்ஹிதாயாம் ஆரண்ய காண்டே
வத்ஸராவதிகரணம் நாம ஷட்பஞ்சாஶ: ஸர்க: ॥*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸப்த பஞ்சாஶ: ஸர்க: - 57

राक्षसं मृगरूपेण चरन्तं कामरूपिणम् ।
निहत्य रामो मारीचं तूर्णं पथि निवर्तते ॥

ராக்ஷஸம் ம்ருகரூபேண சரந்தம் காமரூபிணம் ।
நிஹத்ய ராமோ மாரீசம் தூர்ணம் பதி நிவர்ததே ॥ 1

ராம: - ஸ்ரீராமர்
காமரூபிணம் - வேண்டியவுருவமெடுக்க வல்லனும்
ம்ருகரூபேண - மானுருவம் கொண்டு
சரந்தம் - திரியும்
ராக்ஷஸம் - அரக்கனுமாகிய
மாரீசம் - மாரீசனை
நிஹத்ய - கொன்றுவிட்டு
தூர்ணம் - சீக்கிரத்திலேயே
பதி - வழியில்
நிவர்ததே - திரும்பிவந்து கொண்டிருந்தார்.

तस्य संत्वरमाणस्य द्रष्टुकामस्य मैथिलीम् ।
क्रूरस्वनोऽथ गोमायुर्विननादास्य पृष्ठतः ॥

தஸ்ய ஸந்த்வரமாணஸ்ய த்ரஷ்டுகாமஸ்ய மைதிலீம் ।
க்ரூரஸ்வநோऽத கோமாயுர் விநநாதாஸ்ய ப்ருஷ்டத: ॥ 2

மைதிலீம் - மைதிலியை
த்ரஷ்டுகாமஸ்ய - பார்க்க நினைத்த
தஸ்ய - அவர்
ஸந்த்வர மாணஸ்ய - சீக்கிரம் வந்துகொண்டிருக்கையில்
அஸ்ய - இவரது
ப்ருஷ்டத: - பின்னால்
அத - அப்பொழுது
கோமாயு: - ஓர் நரி
க்ரூரஸ்வர: - அபசகுனமாய் ஊளையிடுகிறதாய்
விநநாத - ஊளையிட்டது.

स तस्य स्वरमाज्ञाय दारुणं रोमहर्षणम् ।
चिन्तयामास गोमायोः स्वरेण परिशङ्कितः ॥

ஸ தஸ்ய ஸ்வரமாஞாய தாருணம் ரோமஹர்ஷணம் ।
சிந்தயாமாஸ கோமாயோ: ஸ்வரேண பரிஶங்கித: ॥ 3

ஸ: - அவர்
தஸ்ய - அந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கோமாயோ:	-	நரியினது
ரோம ஹர்ஷணம்	-	மயிர்க்கூச்செறியும்படி
தாருணம்	-	கர்ணகடோரமான
ஸ்வரம்	-	ஊளையை
ஆஞாய	-	கவனித்து,
ஸ்வரேண	-	ஊளையால்
பரிஶங்கித:	-	உள்ளம் நடுங்கியவராகி
சிந்தயாமாஸ	-	கவலையுற்றார்.

अशुभं बत मन्येऽहं गोमायुर्वाशते यथा ।
स्वस्ति स्यादथ वैदेह्या राक्षसैर्भक्षणं विना ॥

அஶுபம் பத மன்யேऽஹம் கோமாயுர் வாச்யதே யதா ।
ஸ்வஸ்தி ஸ்யாதத வைதேஹ்யா ராக்ஷஸைர் பக்ஷணம் விநா ॥ 4

கோமாயு: பத	-	'நரி ஏனோ இப்படி
வாச்யதே	-	ஊளையிடுகிறது!
யதா	-	ஆனபடியால்
அஶுபம்	-	ஆபத்தை
அஹம்	-	நான்
மன்யே	-	எதிர்பார்க்கின்றேன்.
அத	-	இப்பொழுது
வைதேஹ்யா:	-	வைதேகிக்கு
ராக்ஷஸை:	-	அரக்கர்களால்
பக்ஷணம் விநா	-	விழுங்கப்படாதபடி
ஸ்வஸ்தி	-	க்ஷேமம்
ஸ்யாத்	-	உண்டாக வேண்டும்.

मारीचेन तु विज्ञाय स्वरमालक्ष्य मामकम् ।
विक्रुष्टं मृगरूपेण लक्ष्मण: शृणुयाद्यदि ॥

மாரீசேந து விஞாய ஸ்வரமாலக்ஷ்ய மாமகம் ।
விக்ருஷ்டம் ம்ருகரூபேண லக்ஷ்மண: ஶ்ருணுயாத்யதி ॥ 5

லக்ஷ்மண:	-	லக்ஷ்மணன்
ம்ருகரூபேண	-	மானுருவம் கொண்ட
மாரீசேந	-	மாரீசனால்
மாமகம் ஸ்வரம்	-	எனது குரலை
ஆலக்ஷ்ய	-	கண்டு,
விஞாய	-	தெரிந்துகொண்டு
விக்ருஷ்டம் து	-	ஆபத்திலிருப்பதாய் உதவியை கோருகிறதாய் கூவப்பட்டதையும்
யதி	-	ஒருக்கால்
ஶ்ருணுயாத்	-	கேட்டுவிட்டானோ என்னமோ!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

स सौमित्रिः स्वरं श्रुत्वा तां च हित्वा तु मैथिलीम् ।
तयैव प्रहितः क्षिप्रं मत्सकाशमिहैष्यति ॥

ஸ ஸௌமித்ரி: ஸ்வரம் ஶ்ருத்வா தாம் ச ஹித்வா து மைதிலீம் ।
தயைவ ப்ரஹித: க்ஷிப்ரம் மத்ஸகாஶ மிஹைஷ்யதி ॥ 6

ஸ: - அந்த
ஸௌமித்ரி: - லக்ஷ்மணன்
ஸ்வரம் - கூவியதை
ஶ்ருத்வா - கேட்டு,
தாம் - அந்த
மைதிலீம் - மைதிலியை
ஹித்வா து - தனியாய் விட்டுவிட்டும்
தயா ஏவ - அவளாலேயும்
ப்ரஹித: - அனுப்பப்பட்டவனாய்
இஹ - இப்பொழுது
க்ஷிப்ரம் - சீக்கிரத்திலேயே
மத்ஸகாஶம் - என்னிடம்
ஏஷ்யதி ச - வந்துவிடப் போகின்றானோ!

राक्षसैः सहितैर्नूनं सीताया ईप्सितो वधः ।
काञ्चनश्च मृगो भूत्वा व्यपनीयाश्रमात्तु माम् ॥

ராக்ஷஸை: ஸஹிதைர் நூநம் ஸீதாயா ஈப்ஸிதோ வத: ।
காஞ்சனஶ்ச ம்ருகோ பூத்வா வ்யபநீயாஶ்ரமாத்து மாம் ॥ 7

दूरं नीत्वा तु मारीचो राक्षसोऽभूच्छराहतः ।
हा लक्ष्मण हतोऽस्मीति यद्वाक्यं व्याजहार ह ॥

தூரம் நீத்வா து மாரீசோ ராக்ஷஸோऽபூச்சராஹத: ।
ஹா லக்ஷ்மண ஹதோऽஸ்மீதி யத்வாக்யம் வ்யாஜஹார ஹ ॥ 8

ராக்ஷஸ: - அரக்கனான
மாரீச: - மாரீசன்
காஞ்சன: - பொன்மயமான
ம்ருக: - மானாக
பூத்வா - ஆகி
மாம் - என்னை
ஆஶ்ரமாத்து - ஆச்ரமத்தினின்று
வ்யபநீய - அப்புறப்படுத்தி
தூரம் ச - வெகுதூரமும்
நீத்வா - இழுத்துச் சென்று
சராஹத: - சரங்களால் மாண்டவனாக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அபூத்	-	ஆயினன்;
து	-	அச்சமயத்தில்
ஹா லக்ஷ்மண	-	'அப்பா லக்ஷ்மணா!
ஹத: அஸ்மி	-	நான் மாண்டேன்'
இதி	-	என்ற
யத்	-	எந்த ஒரு
வாக்யம்	-	சொல்லை
வ்யாஜஹார ஹ	-	உரத்த குரலில் கூவினானோ!
து	-	அதனால்
ராக்ஷஸை:	-	அரக்கர்கள்
ஸஹிதை:	-	எல்லோர்களாலும்
ஸீதாயா:	-	ஸீதையினுடைய
வத:	-	வதை
ஈப்ஸித:	-	கோரப்பட்டிருக்கிறது.
நூநம்	-	இது நிச்சயம்.

लक्ष्मणस्तद्वचः श्रुत्वा मत्सकाशमिहैष्यति ।
अपि स्वस्ति भवेद्द्वाभ्यां रहिताभ्यां मया वने ॥
जनस्थाननिमित्तं हि कृतवैरोऽस्मि राक्षसैः ॥

லக்ஷ்மணஸ் தத்வச: ஶ்ருத்வா மத்ஸகாஶமிஹைஷ்யதி।
அபி ஸ்வஸ்தி பவேத்த்வாப்யாம் ரஹிதாப்யாம் மயா வனே।
ஜனஸ்தாந நிமித்தம் ஹி க்ருதவைரோऽஸ்மி ராக்ஷஸை: ॥ 9

லக்ஷ்மண:	-	லக்ஷ்மணன்
தத்	-	அந்த
வச:	-	கூச்சலை
ஶ்ருத்வா	-	கேட்டு,
மத்ஸகாஶம்	-	என்னிடத்திற்கு
இஹ	-	இப்பொழுது
ஏஷ்யதி	-	வருவான்.
வனே	-	வனத்தில்
மயா ரஹிதாப்யாம்	-	என்னைவிட்டுப் பிரிந்திருக்கும்
தாப்யாம்	-	அவ்விருவர்களுக்கும்
ஸ்வஸ்தி	-	ஆபத்தின்மை
அபி பவேத்	-	எப்படியாவது ஏற்பட வேண்டும்!
அஸ்மி	-	நானோ
ஜனஸ்தாந நிமித்தம்	-	ஜனஸ்தான நிமித்தமாக
ராக்ஷஸை:	-	அரக்கர்களால்
க்ருதவைர:	-	த்வேஷிக்கப்பட்டவனாயிருக்கிறேன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

निमित्तानि च घोराणि दृश्यन्तेऽद्य बहूनि च ।
इत्येवं चिन्तयन् रामः श्रुत्वा गोमायुनिःस्वनम् ॥

நிமித்தானி ச கோராணி த்ருஶ்யந்தேऽத்ய பஹூநி ச ।
இத்யேவம் சிந்தயன் ராம: ஶ்ருத்வா கோமாயுநிஸ்ஸ்வனம் ॥ 10

आत्मनश्चापनयनान्मृगरूपेण रक्षसा ।
आजगाम जनस्थानं राघवः परिशङ्कितः ॥

ஆத்மநஶ்சாபநயநான் ம்ருகரூபேண ரக்ஷஸா ।
ஆஜகாம ஜனஸ்தானம் ராகவ: பரிஶங்கித: ॥ 11

ராகவ: - ரகுகுலத்திலகராகிய
ராம: - ஸ்ரீராமர்,
கோமாயு நிஸ்ஸ்வனம்-நரியின் ஊளையை
ஶ்ருத்வா - கேட்டு,
ச - அதனாலும்,
அத்ர - இப்பொழுது
பஹூநி - இன்னும் பல
கோராணி - அப
நிமித்தானி - சகுனங்கள்
த்ருஶ்யந்தே - காணப்படுகின்றன.
ச - அதனாலும்
ம்ருகரூபேண - மானுருவங்கொண்ட
ரக்ஷஸா - அரக்கனால்
ஆத்மன: - தன்னை
அபநயநம் ச - இழுத்துவிடப்பட்டதையும்
சிந்தயன் - நினைக்கின்றவராய்
இதி ஏவ் - மேற்கண்டவாறு
பரிஶங்கித: - உள்ளம் நடுங்கியவராய்
ஜனஸ்தானம் - ஜனஸ்தானத்தை நோக்கி
ஆஜகாம - திரும்பி வந்தார்.

तं दीनमानसं दीनमासेदुर्मृगपक्षिणः ।
सव्यं कृत्वा महात्मानं घोरांश्च ससृजुः स्वरान् ॥

தம் தீனமாநஸம் தீனமாஸேதுர் ம்ருக பக்ஷிண:।
ஸவ்யம் க்ருத்வா மஹாத்மாநம் கோராம்ஶ்ச ஸஸ்ருஜு: ஸ்வரான் ॥ 12

தீனமாநஸ: - வேதனைப்படும்
ம்ருக பக்ஷிண: - மிருகங்களும் பக்ஷிகளும்
தீனம் - மனவேதனையுற்ற
தம் - அந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மஹாத்மாநம் - மகாத்மாவை
ஆஸேது: - கிட்டின.
ஸவ்யம் - இடதுபுறமாய்
க்ருத்வா - வந்து
கோரான் ச - அபசகுனங்களை சூசிப்பிக்கும்
ஸ்வரான் - கூச்சல்களை
ஸஸ்ருஜு: - இட்டன.

तानि दृष्ट्वा निमित्तानि महाघोराणि राघवः ।
न्यवर्तताथ त्वरितो जवेनाश्रममात्मनः ॥

தானி த்ருஷ்ட்வா நிமித்தாநி மஹாகோராணி ராகவ: ।
ந்யவர்ததாத த்வரிதோ ஜவேநாஶ்ரம மாத்மன: ॥ 13

ராகவ: - ஸ்ரீராமர்
தானி - அந்த
மஹாகோராணி - மிகக் கடுமையான
நிமித்தாநி - அபசகுனங்களை
த்ருஷ்ட்வா - கவனித்து,
ஜவேந - அவசரத்தால்
த்வரித: - வேகமாய் நடக்கின்றவராகி
ஆத்மன: - தனது
ஆஶ்ரமம் - ஆச்ரமத்திற்கு
அத - அப்பொழுது
ந்யவர்தத - வந்துகொண்டிருந்தார்.

स तु सीतां वरारोहां लक्ष्मणं च महाबलम् ।
आजगाम जनस्थानं चिन्तयन्नेव राघवः ॥

ஸ து ஸீதாம் வராரோஹாம் லக்ஷ்மணம் ச மஹாபலம் ।
ஆஜகாம ஜனஸ்தானம் சிந்தயன் ஏவ ராகவ: ॥ 14

ஸ: - அந்த
ராகவ: - ஸ்ரீராமர்
வராரோஹாம் - ஸ்திரீரத்னமாகும்
ஸீதாம் து - ஸீதாப்பிராட்டியாரையும்
மஹாபலம் - மகாபலவானான
லக்ஷ்மணம் ச - லக்ஷ்மணரையும்
சிந்தயன் ஏவ - நினைத்துக்கொண்டே
ஜனஸ்தானம் - ஜனஸ்தானத்தை நோக்கி
ஆஜகாம - திரும்பி நடந்து கொண்டிருந்தார்.

ततो लक्ष्मणमायान्तं ददर्श विगतप्रभम् ।।।

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ததோ லக்ஷ்மணமாயாந்தம் ததர்ஶ விகதப்ரபம் ॥ 15

தத: - அப்பொழுது
லக்ஷ்மணம் - லக்ஷ்மணரை
விகதப்ரபம் - ஒளிகுன்றி
ஆயாந்தம் - வருபவராக
ததர்ஶ - பார்த்தார்.

ततोऽविदूरे रामेण समीयाय स लक्ष्मण: ।
विषण्ण: सुविषण्णेन दु:खितो दु:खभागिना ॥

ததோऽவிதூரே ராமேண ஸமீயாய ஸ லக்ஷ்மண: ।
விஷண்ண: ஸுவிஷண்ணேந துக்கிதோ துக்கபாகிநா ॥ 16

தத: - அப்பொழுது
அவிதூரே - சமீபத்திலேயே,
ஸ: - அந்த
துக்கித: - துக்கப்பட்டு
விஷண்ண: - முகம் வாடிக்கிடந்த
லக்ஷ்மண: - லக்ஷ்மணர்
துக்கபாகிநா - கவலையால் உள்ளம் உருகி
ஸுவிஷண்ணேந - அதிகமாய் முகம் வாடிக்கிடந்த
ராமேண - ஸ்ரீராமரோடு
ஸமீயாய - சேர்ந்தார்.

संजगर्हेऽथ तं भ्राता दृष्ट्वा लक्ष्मणमागतम् ।
विहाय सीतां विजने वने राक्षससेविते ॥

ஸஞ்ஜகர்ஹேऽத தம் ப்ராதா த்ருஷ்ட்வா லக்ஷ்மணமாகதம் ।
விஹாய ஸீதாம் விஜனே வனே ராக்ஷஸ ஸேவிதே ॥ 17

ராக்ஷஸ ஸேவிதே - ராக்ஷஸர்களடர்ந்ததும்
விஜனே - மானிடர்களில்லாததுமான
வனே - காட்டில்
ஸீதாம் - சீதாப்பிராட்டியாரை
விஹாய - தனித்துவிட்டு,
ஆகதம் - வந்திருக்கும்
தம் - அந்த
லக்ஷ்மணம் - லக்ஷ்மணரை
ப்ராதா - தமயனாகுமவர்
த்ருஷ்ட்வா - பார்த்து
அத - அப்பொழுது
ஸம்ஜகர்ஹே - முன்னிலுமதிகமாய் மனம்நொந்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

गृहीत्वा च करं सव्यं लक्ष्मणं रघुनन्दनः ।
उवाच मधुरोदर्कमिदं वचनमार्तवत् ॥

க்ருஹீத்வா ச கரம் ஸவ்யம் லக்ஷ்மணம் ரகுநந்தன: ।
உவாச மதுரோதர்கமிதம் வசனமார்தவத் ॥ 18

ரகுநந்தன: - ஸ்ரீராமர்
லக்ஷ்மணம் - லக்ஷ்மணரை
ஸவ்யம் கரம் - இடது கையில்
க்ருஹீத்வா - பிடித்துக்கொண்டு,
இதம் - பின்வரும்
வசனம் - வார்த்தையை
அர்தவத் ச - மனம் நொந்து கிடக்கையிலும்
மதுரோதர்கம் - தேனினுமினியதாய்
உவாச - மொழிந்தார்.

अहो लक्ष्मण गर्ह्यं ते कृतं यस्त्वं विहाय ताम् ।
सीतामिहागतः सौम्य कच्चित् स्वस्ति भवेदिह ॥

அஹோ லக்ஷ்மண கர்ஹ்யம் தே க்ருதம் யஸ்த்வம் விஹாய தாம் ।
ஸீதா மிஹாகதஸ் ஸௌம்ய கச்சித் ஸ்வஸ்தி பவேதிஹ ॥ 19

ஸௌம்ய - 'அன்பார்ந்த
லக்ஷ்மண - லக்ஷ்மணா!
த்வம் - நீ
தாம் - அந்த
ஸீதாம் - சீதையை
விஹாய - தனிமையில் விட்டுவிட்டு
இஹ - இவ்விடத்திற்கு
ஆகத: - வந்துவிட்டனை.
தே - உனது
க்ருதம் - காரியமாகிறது
யத் - எதுவோ அது
கர்ஹ்யம் - தவறு.
அஹோ - ஐயோ நான் உன்னை இங்கு எதிர்பார்க்கவில்லையே;
இஹ - இப்பொழுது
ஸ்வஸ்தி - க்ஷேமமாய்
பவேத் கச்சித் - அவள் இருக்கிறாளோ என்னமோ?

न मेऽस्ति संशयो वीर सर्वथा जनकात्मजा ।
विनष्टा भक्षिता वापि राक्षसैर्वनचारिभिः ॥
अशुभान्येव भूयिष्ठं यथा प्रादुर्भवन्ति मे ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ந மேऽஸ்தி ஸம்ஶயோ வீர ஸர்வதா ஜனகாத்மஜா।
விநஷ்டா பக்ஷிதா வாபி ராக்ஷஸைர் வனசாரிபி: ॥
அஶுபான்யேவ பூயிஷ்டம் யதா ப்ராதுர் பவந்தி மே ॥ 21

மே - 'எனக்கு
பூயிஷ்டம் - கடுமையாய்
அஶுபானி ஏவ - அபசகுனங்களே
ப்ராதுர் பவந்தி - உண்டாகின்றன.
யதா - என்கிறபடியால்
வனசாரிபி: - வனவாசிகளாகிய
ராக்ஷஸை: - அரக்கர்களால்
ஜனகாத்மஜா - ஜானகீ
விநஷ்டா வா - திருடிக்கொண்டு போகப்பட்டாளோ; அல்லது
பக்ஷிதா அபி - தின்றுவிடப்பட்டுவிட்டாளோ;
வீர - சூரனே!
ஸர்வதா - எப்படியும்,
மே - எனக்கு
ஸம்ஶய: - இதில் சந்தேகம்
ந அஸ்தி - இல்லை.

अपि लक्ष्मण सीतायाः सामग्र्यं प्राप्नुयावहे ।
जीवन्त्याः पुरुषव्याघ्र सुताया जनकस्य वै ॥

அபி லக்ஷ்மண ஸீதாயா: ஸாமக்ர்யம் ப்ராப்நுயாவஹே।
ஜீவந்த்யா: புருஷவ்யாக்ர ஸுதாயா ஜனகஸ்ய வை ॥ 22

புருஷவ்யாக்ர - 'புருஷோத்தம!
லக்ஷ்மண - லக்ஷ்மணா!
ஜனகஸ்ய - ஜனகராஜரது
ஸுதாயா: - திருமகளாகிய
ஸீதாயா: - சீதையினுடைய
ஜீவந்த்யா: - உயிருடனிருப்பவளாய்
ஸாமர்க்யம் வை - க்ஷேமத்தை
ப்ராப்நுயாவஹே அபி- நாம் காணப்பெருவோமா?

यथा वै मृगसङ्घाश्च गोमायुश्चैव भैरवम् ।
वाशन्ते शकुनाश्चापि प्रदीप्तामभितो दिशम् ॥
अपि स्वस्ति भवेत्तस्या राजपुत्र्या महाबल ॥

யதா வை ம்ருகஸங்காஶ்ச கோமாயுஶ்சைவ பைரவம்।
வாஶந்தே ஶகுநாஶ்சாபி ப்ரதீப்தாமபிதோ திஶம் ॥
அபி ஸ்வஸ்தி பவேத் தஸ்யா ராஜபுத்ர்யா மஹாபல ॥ 23

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ம்ருக ஸங்கா: ச	- 'மான்கூட்டங்களும்
கோமாயு: ச	- ஓர் நரியும் (பல நரிகள் கத்தினால் அபசகுனமல்ல, ஓர் நரி கத்தினால் அபசகுனம்.)
ஶகுநா: ச	- பறவைகளும்
ப்ரதீப்தாம்	- சூரியனிருக்கும்
திஶம்	- திக்குக்கு
அபித: அபி	- அருகிலேயே
பைரவம் ஏவ	- மிகப் பரிதாபமாகவே,
வாஶந்தே வை	- ஊளையிடுகின்றன,
யதா	- என்கிறபடியால்
மஹாபல	- பேராற்றலுடையானே!
ராஜபுத்ர்யா:	- மன்னர் மகளாகிய
தஸ்யா:	- அவளுக்கு
ஸ்வஸ்தி	- தீங்கின்மை
பவேத் அபி	- ஏற்படுமோ என்னமோ!

इदं हि रक्षो मृगसंनिकाशं प्रलोभ्य मां दूरमनुप्रयातम् ।
हतं कथंचिन्महता श्रमेण स राक्षसोऽभून्म्रियमाण एव ॥

இதம் ஹி ரக்ஷோ ம்ருகஸந்நிகாஶம்
ப்ரலோப்ய மாம் தூர மநுப்ரயாதம் ।
ஹதம் கதஞ்சின் மஹதா ஶ்ரமேண
ஸ ராக்ஷஸோऽபூன்ம்ரியமாண ஏவ ॥ 24

இதம்	- 'இந்த
ம்ருகஸந்நிகாஶம்	- மானாய் தோற்றிய
ரக்ஷ:	- அரக்கன்
மாம் ஹி	- என்னையும்
தூரம்	- வெகுதூரம்
அநுப்ரயாந்தம்	- துரத்தி வருகிறவனாய்
ப்ரலோப்ய	- மோசம்செய்து,
கதஞ்சித்	- வெகு கஷ்டப்பட்டு
மஹதா	- அதிக
ஶ்ரமேண	- பிரயாசையோடு
ஹதம்	- கொல்லப்பட்டான்.
ஸ:	- அவன்
ம்ரியமாண: ஏவ	- சாகும்பொழுது
ராக்ஷஸ:	- அரக்கனாக
அபூத்	- ஆயினான்.

मनश्च मे दीनमिहाप्रहृष्टं चक्षुश्च सव्यं कुरुते विकारम् ।
असंशयं लक्ष्मण नास्ति सीता हृता मृता वा पथि वर्तते वा ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மனஶ்ச மே தீநமிஹாப்ரஹ்ருஷ்டம்
சக்ஷுஶ்ச ஸவ்யம் குருதே விகாரம் ।
அஸம்ஶயம் லக்ஷ்மண நாஸ்தி ஸீதா
ஹ்ருதா ம்ருதா வா பதி வர்ததே வா ॥ 25

இஹ	-	'இப்பொழுது
மே	-	எனது
மன: ச	-	மனமும்
தீநம்	-	துடிக்கின்றதாய்
அப்ரஹ்ருஷ்டம்	-	சாந்தமற்றிருக்கின்றது.
ஸவ்யம்	-	இடது
சக்ஷு: ச	-	கண்ணும்
விகாரம்	-	அபசகுனமாய்
குருதே	-	துடிக்கின்றது.
லக்ஷ்மண	-	லக்ஷ்மணா!
ஸீதா	-	சீதை
அஸ்தி ந	-	இருக்கமாட்டாள்
அஸம்ஶயம்	-	இதற்கையமில்லை
ம்ருதா வா	-	மாண்டவளாகவோ அல்லது
ஹ்ருதா	-	திருடிக்கொண்டு போகப்பட்டவளாய்
பதி	-	அசஹ்யமான கஷ்டத்தில்
வர்ததே வா	-	உயிரோடிருக்கிறாளோ என்னமோ?'

*இத்யார்ஷே ஶ்ரீமத் ராமாயணே வால்மீகீயே ஆதிகாவ்யே
சதுர்விம்ஶதி ஸஹஸ்ரிகாயாம் ஸம்ஹிதாயாம் ஆரண்ய காண்டே
ராமப்ரத்யாகமனம் நாம ஸப்த பஞ்சாஶ: ஸர்க: ॥*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அஷ்ட: பஞ்சாஶ: ஸர்க: - 58

स दृष्ट्वा लक्ष्मणं दीनं शून्यं दशरथात्मजः ।
पर्यपृच्छत धर्मात्मा वैदेहीमागतं विना ॥

ஸ த்ருஷ்ட்வா லக்ஷ்மணம் தீனம் ஶூன்யம் தஶரதாத்மஜ: ।
பர்யப்ருச்சத தர்மாத்மா வைதேஹீமாகதம் விநா ॥ 1

தர்மாத்மா	-	தர்மாத்மாவாகும்
ஸ:	-	அந்த
தஶரதாத்மஜ:	-	தாசரதி
ஶூன்யே	-	ஒருவருமில்லாத இடத்தில்,
வைதேஹீம்	-	வைதேகியை
விநா	-	தனியில் விட்டு
தீனம்	-	மனம் நொந்து முகம் வாடி
ஆகதம்	-	இவ்விடம் வந்திருக்கும்
லக்ஷ்மணம்	-	லக்ஷ்மணரை
த்ருஷ்ட்வா	-	பார்த்து,
பர்யப்ருச்சத	-	பின்வருமாறு வினவினார்.

प्रस्थितं दण्डकारण्यं या मामनुजगाम ह ।
क्व सा लक्ष्मण वैदेही यां हित्वा त्वमिहागतः ॥

ப்ரஸ்திதம் தண்டகாரண்யம் யா மாமநுஜகாம ஹ ।
க்வ ஸா லக்ஷ்மண வைதேஹீ யாம் ஹித்வா த்வமிஹாகத: ॥ 2

லக்ஷ்மண	-	'லக்ஷ்மணா!
தண்டகாரண்யம்	-	தண்டகாவனத்திற்கு
ப்ரஸ்திதம்	-	புறப்பட்ட
மாம்	-	என்னை
யா	-	எவளொருவள்
அநுஜகாம ஹ	-	துடர்ந்து வந்தனளோ
யாம்	-	எவளொருவளை
த்வம்	-	நீ
ஹித்வா	-	தனியில் விட்டு,
இஹ	-	இங்கு
ஆகத:	-	வந்திருக்கின்றனையோ
ஸா	-	அந்த
வைதேஹீ	-	ஜானகீ
க்வ	-	எங்கே?

राज्यभ्रष्टस्य दीनस्य दण्डकान् परिधावतः ।
அபவித்தஶ்ச பக்நஶ்ச கஸ்ய ஸாங்க்ராமிகோ ரத: ॥ 48

தீப்த பாவக ஸங்காஶ: - கொழுந்துவிட்டெரியும் அக்னியை நிகர்த்து
த்யுதிமான் - ஒளிகொண்டு விளங்குகிறதும்,
ஸமரத்வஜ: - போற்கொடியுற்றதும்
பக்ந: - உறுக்குலைந்து
அபவித்த: ச - தலைகீழாய் கிடக்கிறதுமான
ஸாங்க்ராமிக: - போர்
ரத: - ரதம்
கஸ்ய ச - யாருடையதோ?

रथाक्षमात्रा विशिखास्तपनीयविभूषणाः ।
कस्येमेऽभिहता बाणाः प्रकीर्णा घोरकर्मणः ॥

ரதாக்ஷமாத்ரா விஶிகாஸ்தபநீயா விபூஷணா: ।
கஸ்யேமேऽபிஹதா பாணா: ப்ரகீர்ணா கோரகர்மண: ॥ 49

அபிஹதா: - பிரயோகிக்கப்பெற்று
விஶிகா: - கூர்கள் ஒடிந்து
ரதாக்ஷ மாத்ரா: - தேரிருசு அளவுள்ளவைகளும்
தபநீய விபூஷணா: - தங்கத்தால் அலங்கரிக்கப்பட்டவைகளும்
ப்ரகீர்ணா: - எங்கும் சிதறிக் கிடக்கின்றவைகளுமான
இமே - இந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாணா: - பாணங்கள்
கஸ்ய - எந்த
கோர கர்மண: - துஷ்டனுடையவைகளோ?

शरावरौ शरैः पूर्णौ विध्वस्तौ पश्य लक्ष्मण ।
प्रतोदाभीषुहस्तोवै कस्यायं सारथिर्हतः ॥

ஶராவரௌ ஶரை: பூர்ணௌ வித்வஸ்தௌ பஶ்ய லக்ஷ்மண ।
ப்ரதோதாபீஷுஹஸ்தோவை கஸ்யாயம் ஸாரதிர் ஹத: ॥ 50

லக்ஷ்மண - 'லக்ஷ்மணா!
ஶரை: - பாணங்களால்
பூர்ணௌ - நிறைந்திருப்பவைகளும்,
வித்வஸ்தௌ - சிதைக்கப்பட்டிருக்கின்றவைகளுமான
ஶராவரௌ - அம்புராத்தூணிகளிரண்டையும்
பஶ்ய - பார்.
ப்ரதோதாபீஷு ஹஸ்த: - சவுக்கையும் கடிவாளங்களையும் கையில் பிடித்துக்கொண்டிருக்கும் வண்ணமே
ஹத: - மாண்டுகிடக்கும்
அயம் ஸாரதி: - இந்த சாரதி
கஸ்ய வை - யாரைச் சேர்ந்தவனோ?

कस्येमौ पुरुषव्याघ्र शयाते निहतौ युधि ।
चामरग्राहिणौ सौम्य सोष्णीषमणिकुण्डलौ ॥

கஸ்யேமௌ புருஷவ்யாக்ர ஶயாதே நிஹதௌ யுதி ।
சாமரக்ராஹிணௌ ஸௌம்ய ஸோஷ்ணீஷமணிகுண்டலௌ ॥ 51

ஸௌம்ய - 'அப்பா!
புருஷவ்யாக்ர - புருஷோத்தம!
சாமரக்ராஹிணௌ - சாமரங்களை கையில் பிடித்துக் கொண்டிருக்கிறவர்களும்
ஸோஷ்ணீஷ மணிகுண்டலௌ - தலைப்பாகைகளையும் மாணிக்ய குண்டலங்களையும் அணிந்தவர்களும்
யுதி - போரில்
நிஹதௌ - கொல்லப்பட்டவர்களாய்
ஶயாதே - இருவர் படுத்துக்கிடக்கின்றார்கள்.
இமௌ - இவர்கள்
கஸ்ய - யாரைச் சேர்ந்தவர்களோ?

पदवी पुरुषस्यैषा व्यक्तं कस्यापि रक्षसः ।
वैरं शतगुणं पश्य ममेदं जीवितान्तकम् ॥

பதவீ புருஷஸ்யைஷா வ்யக்தம் கஸ்யாபி ரக்ஷஸ: ।
வைரம் ஶதகுணம் பஶ்ய மமேதம் ஜீவிதாந்தகம் ॥ 52

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கஸ்ய அபி - யாரோ ஒரு
ரக்ஷஸ: புருஷஸ்ய - ராக்ஷஸனுடைய
பதவீ - வியாபாரம்
ஏஷா - இது.
வ்யக்தம் - இது திண்ணம்.
இதம் - இந்த
வைரம் - பழிக்குப்பழி வாங்குகிறதை
ஶதகுணம் - அளவுக்குமிஞ்சியதாய்
மம - எனக்கு
ஜீவிதாந்தகம் - உயிருக்கு முடிவாயிருக்கிறதாய்
பஶ்ய - கவனி.

सुघोरहृदयैः सौम्य राक्षसैः कामरूपिभिः ।
हृता मृता वा सीताऽपि भक्षिता वा तपस्विनी ॥

ஸுகோரஹ்ருதயை: ஸௌம்ய ராக்ஷஸை: காமரூபிபி: ।
ஹ்ருதா ம்ருதா வா ஸீதாऽபி பக்ஷிதா வா தபஸ்விநீ ॥ 53

ஸௌம்ய - 'குழந்தாய்!
ஸா தபஸ்விநீ - அந்த மகா பதிவிருதையாகிய
ஸீதா அபி - சீதையும்
காமரூபிபி: - நினைத்த உருவமெடுக்க வல்லவர்களும்
கோர ஹ்ருதயை: - கன்னெஞ்சர்களுமான,
ராக்ஷஸை: - அரக்கர்களால்
ஹ்ருதா - அபஹரித்துவிடப்பட்டாளோ?
ம்ருதா - கொன்றுவிடப்பட்டாளோ?
பக்ஷிதா வா - தின்றுவிடப்பட்டாளோ என்னமோ?

न धर्मस्त्रायते सीतां ह्रियमाणां महावने ॥

ந தர்மஸ்த்ராயதே ஸீதாம் ஹ்ரியமாணாம் மஹாவனே ॥ 54

மஹாவனே - பெருங்கானகத்தில்
ஹ்ரியமாணாம் - திருடிப்போகப்படும்
ஸீதாம் - சீதையை,
தர்ம: - பாதிவிருத்தியம்
த்ராயதே ந - உதவிபுரியாதிருக்கிறது.

भक्षितायां हि वैदेह्यां हृतायामपि लक्ष्मण ।
के हि लोकेऽप्रियं कर्तुं शक्ताः सौम्य ममेश्वराः ॥

பக்ஷிதாயாம் ஹி வைதேஹ்யாம் ஹ்ருதாயாமபி லக்ஷ்மண ।
கே ஹி லோகேऽப்ரியம் கர்தும் ஶக்தா: ஸௌம்ய மமேஶ்வரா: ॥ 55

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸௌம்ய - குழந்தாய்!
வைதேஹ்யாம் - ஜானகீ
பக்ஷிதாயாம் ஹி - தின்றுவிடப்பட்டாளென்றாலும்
ஹ்ருதாயாம் அபி - திருடிக்கொண்டு போகப்பட்டாளென்றாலும்
லக்ஷ்மண - லக்ஷ்மணா!
லோகே - உலகில்
மம ஹி - எனக்கும்
அப்ரியம் - அபசாரத்தை
கர்தும் - விளைவிக்க
ஶக்தா: - துணிவுகொண்ட
ஈஶ்வரா: - ஆற்றலுடையவர்கள்,
கே - யாரிருக்கிறார்கள்?

कर्तारमपि लोकानां शूरं करुणवेदिनम् ।
अज्ञानादवमन्येरन् सर्वभूतानि लक्ष्मण ॥

கர்தாரமபி லோகாநாம் ஶூரம் கருணவேதினம் ।
அஞானாதவமன்யேரன் ஸர்வபூதாநி லக்ஷ்மண ॥ 56

லக்ஷ்மண - 'லக்ஷ்மணா!
ஸர்வபூதாநி - பிராணிகளெல்லாமும்
ஶூரம் - எல்லாவல்லரும்
அபி - அப்படியிருந்தும்
கருணவேதினம் - தண்ணளியால் எதையும் பொருத்தருள்பவருமான,
லோகாநாம் கர்தாரம் - லோககர்த்தாவை
அஞானாத் - மடமையால்
அவமன்யேரன் - மதியாதிருக்கின்றனர்.

मृदुं लोकहिते युक्तं दान्तं करुणवेदिनम् ।
निर्वीर्य इति मन्यन्ते नूनं मां त्रिदशेश्वराः ॥

ம்ருதும் லோகஹிதே யுக்தம் தாந்தம் கருண வேதினம் ।
நிர்வீர்ய இதி மன்யந்தே நூநம் மாம் த்ரிதஶேஶ்வரா: ॥ 57

த்ரிதஶேஶ்வரா: - தேவோத்தமர்கள்
லோகஹிதே - உலகுக்கு நன்மை புரிவதில்
யுக்தம் - ஈடுபட்டு
தாந்தம் - காயக்லேச்சத்தைப் பொருட்படுத்தாது,
ம்ருதும் - இரக்கமுற்று
கருண வேதினம் - கருணையால் எதையும் பொறுக்கும்
மாம் - என்னை
நிர்வீர்ய: - 'கையாலாகாதவன்'
இதி - என்று
மன்யந்தே நூநம் - நினைத்து விடுகிறார்களோ என்னமோ?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

मां प्राप्य हि गुणो दोषः संवृत्तः पश्य लक्ष्मण ।
अद्यैव सर्वभूतानां रक्षसांमभवाय च ॥

மாம் ப்ராப்ய ஹி குணோ தோஷஸ் ஸம்வ்ருத்த: பஶ்ய லக்ஷ்மண।
அத்யைவ ஸர்வபூதாநாம் ரக்ஷஸா மபவாய ச ॥ 58

லக்ஷ்மண - 'லக்ஷ்மணா!
மாம் - என்னை
குண: - தண்ணளியாகிய குணம்,
ப்ராப்ய - அடைந்து
ஸர்வ பூதாநாம் - எல்லாப் பிராணிகளுடையவும்
ரக்ஷஸாம் - அரக்கர்களுடையவும்
அபவாய ச - நாசத்தின் பொருட்டே
அத்ய - இப்பொழுது
தோஷ: ஹி - அனிஷ்டத்தை விளைவிக்கும் தோஷமாய்
ஸம்வ்ருத்த: - ஆகிவிட்டிருக்கிறது.
பஶ்ய - பார்.

संहृत्यैव शशिज्योत्स्नां महान् सूर्य इवोदितः ।
संहृत्यैव गुणान् सर्वान् मम तेजः प्रकाशये ॥

ஸம்ஹ்ருத்யைவ ஶஶிஜ்யோத்ஸ்நாம்
மஹான் ஸூர்ய இவோதித:।
ஸம்ஹ்ருத்யைவ குணான் ஸர்வான்
மம தேஜ: ப்ரகாஶயே ॥ 59

ஶஶிஜ்யோத்ஸ்நாம் - நிலவை
ஸம்ஹ்ருத்ய - தொலைத்து,
மஹான் - ஒளிகொண்டு
உதித: ஸூர்ய: - உதித்த சூரியன்
இவ - எவ்வண்ணமோ அவ்வண்ணமே,
குணான் - கருணை முதலிய குணங்கள்
ஸர்வான் ஏவ - எல்லாவற்றையுமே
ஸம்ஹ்ருத்ய - விட்டொழித்து,
மம - என்னுடைய
தேஜ: ஏவ - அபசாரங்களை மன்னியாத குணமே
ப்ரகாஶதே - இதோ வெளிப்படப் போகிறது.

नैव यक्षा न गन्धर्वा न पिशाचा न राक्षसाः ।
किंनरा वा मनुष्या वा सुखं प्राप्स्यन्ति लक्ष्मण ॥

நைவ யக்ஷா ந கந்தர்வா ந பிஶாசா ந ராக்ஷஸா:। 60
கின்னரா வா மநுஷ்யா வா ஸுகம் ப்ராப்ஸ்யந்தி லக்ஷ்மண ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

லக்ஷ்மண: - 'லக்ஷ்மணா!
யக்ஷா: - யக்ஷர்கள்
ஸுகம் - குறையற்ற வாழ்வை
ப்ராப்ஸ்யந்தி ந - அடைய மாட்டார்கள்.
கந்தர்வா: - கந்தர்வர்களும்
ந - அடைய மாட்டார்கள்.
பிஶாசா: - பிசாசர்களும்
ந - அடைய மாட்டார்கள்.
ராக்ஷஸா வா - ராக்ஷஸர்களும்
கின்னரா: வா - கின்னரர்களும்
மநுஷ்யா: ஏவ - மானிடர்களும்
ந - அடைய மாட்டார்கள்.

ममास्त्रबाणसंपूर्णमाकाशं पश्य लक्ष्मण ।
नि:संपातं करिष्यामि ह्यद्य त्रैलोक्यचारिणाम् ॥

மமாஸ்த்ர பாணஸம்பூர்ணமாகாஶம் பஶ்ய லக்ஷ்மண ।
நிஸ் ஸம்பாதம் கரிஷ்யாமி ஹ்யத்ய த்ரைலோக்யசாரிணாம் ॥ 61

லக்ஷ்மண - 'லக்ஷ்மணா!
ஆகாஶம் - ஆகாசத்தை
மம - எனது
அஸ்த்ர பாண - அஸ்திரங்களாலும் பாணங்களாலும்
ஸம்பூர்ணம் நிறைந்துள்ளதாய்
பஶ்ய - நீயே பார்.
அத்ய ஹி - இப்பொழுதே
த்ரைலோக்ய சாரிணாம் - மூவுலகவாசிகளுக்கும்
நிஸ் ஸம்பாதம் - நடமாட்டமில்லாமையை,
கரிஷ்யாமி - விளைவிக்கப் போகிறேன்.

संनिरुद्धग्रहगणमावारितनिशाकरम् ।
विप्रनष्टानलमरुद्भास्करद्युतिसंवृतम् ॥

ஸந்நிருத்த க்ரஹகண மாவாரிதநிஶாகரம் ।
விப்ரநஷ்டாநலமருத்பாஸ்கர த்யுதி ஸம்வ்ருதம் ॥ 62

विनिर्मथितशैलाग्रं शुष्यमाणजलाशयम् ।
ध्वस्तद्रुमलतागुल्मं विप्रणाशितसागरम् ॥

விநிர்மதித ஶைலாக்ரம் ஶுஷ்யமாணஜலாஶயம் ।
த்வஸ்த த்ருமலதா குல்மம் விப்ரணாஶிதஸாகரம் ॥

त्रैलोक्यं तु करिष्यामि संयुक्तं कालधर्मणा ॥

த்ரைலோக்யம் து கரிஷ்யாமி ஸம்யுக்தம் காலதர்மணா ॥ 63

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

த்ரைலோக்யம் - மூவுலகங்களையும்
ஸந்நிருத்த க்ரஹகணம் - நவக்கிரககணத்தை அதது தொழிலைச் செய்யாது ஒழிந்ததாயும்,
ஆவாரித நிஶாகரம் - சந்திரன் தகைக்கப்பட்டவனாயும்,
விப்ர நஷ்டாநலமருத் - அக்னியும் காற்றும் நாசமடைந்தவர்களாயும்,
பாஸ்கர த்யுதி ஸம்வ்ருதம் - சூர்யனது ஒளி மறைக்கப்பட்டதாயும்,
விநிர்மதித ஶைலாக்ரம் - மலைசிகரங்களெல்லாம் பொடியாக்கப்பட்டதாயும்,
ஶுஷ்ய மாணஜலாஶயம் - நீர்நிலையெல்லாம் வற்றிக்கிடப்பதாயும்,
த்வஸ்த த்ரும லதா குல்மம் - மரங்கள், கொடிகள், புதர்கள் எல்லாம் அழிக்கப்பட்டதாகவும்,
விப்ரணாஶித ஸாகரம் - சமுத்திரமே இல்லாதபடி செய்யப்பட்டதாகவும்
கால கர்மணா - யமனது செயலைக்கொண்டு
ஸம்யுக்தம் - இப்படியெல்லாமானதாய்
கரிஷ்யாமி - செய்யப்போகிறேன்.

न तां कुशलिनीं सीतां प्रदास्यन्ति ममेश्वराः ।
अस्मिन् मुहूर्ते सौमित्रे मम द्रक्ष्यन्ति विक्रमम् ॥

ந தாம் குஶலினீம் ஸீதாம் ப்ரதாஸ்யந்தி மமேஶ்வரா: ।
அஸ்மின் முஹூர்தே ஸௌமித்ரே மம த்ரக்ஷ்யந்தி விக்ரமம் ॥ 64

ஈஶ்வரா: - தேவர்கள்
தாம் - அந்த
ஸீதாம் - சீதையை
குஶலனீம் - க்ஷேமமாக
மம - எனக்கு
ப்ரதாஸ்யந்தி ந - கொடுக்கமாட்டார்கள்.
ஸௌமித்ரே - லக்ஷ்மணா!
அஸ்மின் - இந்த
முஹூர்தே - முகூர்த்தத்திலேயே
மம - எனது
விக்ரமம் - சக்தியை
த்ரக்ஷ்யந்தி - கண்ணாரப் பார்க்கப் போகிறார்கள்.

नाकाशमुत्पतिष्यन्ति सर्वभूतानि लक्ष्मण ।
मम चापगुणोन्मुक्तैर्बाणजालैर्निरन्तरम् ॥

நாகாஶ முத்பதிஷ்யந்தி ஸர்வபூதாநி லக்ஷ்மண । 65
மம சாப குணோன்முக்தைர் பாணஜாலைர் நிரந்தரம் ॥

லக்ஷ்மண - 'லக்ஷ்மணா!
மம - எனது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சாபகுணோன்முக்தை:-நாண்கயிறுனின்று வெளிவந்த
பாணஜாலை: - பாணவர்ஷங்களால்,
நிரந்தரம் - இடைவெளியில்லாது செய்யப்பட்ட
ஆகாமம் - ஆகாசத்தில்
ஸர்வ பூதாநி - பிராணிகளிலெவைகளும்,
உத்பதிஷ்யந்தி ந - பறக்கப் போகிறதில்லை.

अर्दितं मम नाराचैर्ध्वस्तभ्रान्तमृगद्विजम् ।
समाकुलममर्यादं जगत् पश्याद्य लक्ष्मण ॥

அர்திதம் மம நாராசைர் த்வஸ்த ப்ராந்த ம்ருகத்விஜம் ।
ஸமாகுல மமர்யாதம் ஜகத் பம்யாத்ய லக்ஷமண ॥ 66

ஆர்ய - 'நற்குணம் படைத்த
லக்ஷ்மண - லக்ஷ்மணா!
ஜகத் - உலகை
மம நாராசை: - எனது நாராசமெனும் பாணங்களால்
அர்திதம் - புடைக்கப்பட்டதாய்,
த்வஸ்த ப்ராந்த ம்ருகத்விஜம் - மிருகங்களும் பக்ஷிகளும் மயங்கி மண்ணில் விழுந்தவைகளாகவும்
ஸமாகுலம் - நிலைகுலைந்து
அமர்யாதம் - தடுமாறிக் கிடப்பதாயும்,
பம்ய - நீயே பார்.

आकर्णपूर्णैरिषुभिर्जीवलोकं दुरावरैः ।
करिष्ये मैथिलीहेतोरपिशाचमराक्षसम् ॥

ஆகர்ண பூர்ணைரிஷுபிர் ஜீவலோகம் துராவரை: ।
கரிஷ்யே மைதிலீஹேதோரபிமாசமராக்ஷஸம் ॥ 67

மைதிலீஹேதோ: - 'ஜானகியின் நிமித்தம்
ஆகர்ண பூர்ணை: - கர்ணபரியந்தமிழுத்துவிடப்பட்டவைகளும்,
துராவரை: - எவராலும் தகையமுடியாதவைகளுமான
இஷுபி: - பாணங்களால்
ஜீவலோகம் - மானிட உலகை
அபிமாசம் - பிறர்களுக்குத் தீங்கு விளைவிப்பவர்களின் பூண்டற்றதாயும்,
அராக்ஷஸம் - ராக்ஷஸப் பூண்டற்றதாயும்
கரிஷ்யே - நான் செய்யப் போகிறேன்.

मम रोषप्रयुक्तानां सायकानां बलं सुराः ।
द्रक्ष्यन्त्यद्य विमुक्तानामति दूरातिगामिनाम् ॥

மம ரோஷ ப்ரயுக்தாநாம் ஸாயகாநாம் பலம் ஸுரா: ।
த்ரக்ஷ்யந்த்யத்ய விமுக்தாநாமமதி தூராதி காமிநாம் ॥ 68

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸுரா: - தேவர்கள்
அத்ய - இப்பொழுது
மம - எனது
ரோஷ ப்ரயுக்தாநாம் - சினம் மேலிட்டு
அதி தூராதி காமிநாம் - வெகுதூரமும் வெகுவேகமும் செல்ல வல்லவைகளாய்
விமுக்தாநாம் - போடப்பட்ட
ஸாயகாநாம் - பாணங்களின்
பலம் - சக்தியை
த்ரக்ஷ்யந்தி - பார்க்கப்போகிறார்கள்.

नैव देवा न दैतेया न पिशाचा न राक्षसाः ।
भविष्यन्ति मम क्रोधात् त्रैलोक्ये विप्रणाशिते ॥

நைவ தேவா ந தைதேயா ந பிஶாசா ந ராக்ஷஸா: ।
பவிஷ்யந்தி மம க்ரோதாத் த்ரைலோக்யே விப்ரணாஶிதே ॥ 69

மம - எனது
க்ரோதாத் - கோபத்தால்
த்ரைலோக்ய - மூவுலகமும்
விப்ரணாஶிதே - நாசமடையும்பொழுது
தேவா: - தேவர்கள்
ந பவிஷ்யந்தி - இருக்கமாட்டார்கள்.
தைதேயா: - அசுரர்களும்
ந - இருக்க மாட்டார்கள்.
பிஶாசா: - பிசாசர்களும்
ந - இருக்க மாட்டார்கள்.
ராக்ஷஸா: ஏவ - அரக்கர்களும்
ந - இருக்க மாட்டார்கள்.

देवदानवयक्षाणां लोका ये रक्षसामपि ।
बहुधा न भविष्यन्ति बाणौघैः शकलीकृताः ॥

தேவதாநவயக்ஷாணாம் லோகோ யே ரக்ஷஸாமபி ।
பஹுதா ந பவிஷ்யந்தி பாணௌகை: ஶகலீக்ருதா: ॥ 70

தேவ தாநவ - தேவர்களுடையவும், அசுரர்களுடையவும்,
யக்ஷாணாம் - யக்ஷர்களுடையவும்,
ரக்ஷஸாம் அபி - அரக்கர்களுடையவும்
லோகா: - உலகங்கள்
யே - எவைகளோ அவைகள்
பாணௌகை: - பாண வர்ஷங்களால்
பஹுதா - பல்படியாய்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஶகலீக்ருதா: - துகளாய் பிளப்புண்டவைகளாய்
ந பவிஷ்யந்தி - இருக்கப் போகிறதில்லை.

निर्मर्यादानिमाँल्लोकान् करिष्याम्यद्य सायकैः ।
हृतां मृतां वा सौमित्रे न दास्यन्ति ममेश्वराः ॥

நிர்மர்யாதாநிமான் லோகான் கரிஷ்யாம்யத்ய ஸாயகை: ।
ஹ்ருதாம் ம்ருதாம் வா ஸௌமித்ரே ந தாஸ்யந்தி மமேஶ்வரா: ॥ 71

ஸௌமித்ரே - 'லக்ஷ்மணா!
ஹ்ருதாம் - திருடிக்கொண்டு போகப்பட்டு விட்டாளென்பதையாவது
ம்ருதாம் வா - கொல்லப்பட்டு விட்டாளென்பதையாவது
மம - எனக்கு
ஈஶ்வரா: - தேவர்கள்
தாஸ்யந்தி ந - அறிவிக்கப் போகிறதில்லை.
அத்ய - இப்பொழுதே
ஸாயகை: - பாணங்களால்
இமான் - இந்த
லோகான் - உலகங்களை
நிர்மர்யாதாந் - நிலைகுலைந்தவைகளாய்
கரிஷ்யாமி - செய்யப்போகிறேன்.

तथारूपां हि वैदेहीं न दास्यन्ति यदि प्रियाम् ।
नाशयामि जगत् सर्वं त्रैलोक्यं सचराचरम् ॥

ததாரூபாம் ஹி வைதேஹீம் ந தாஸ்யந்தி யதி ப்ரியாம் ।
நாஶயாமி ஜகத் ஸர்வம் த்ரைலோக்யம் ஸசராசரம் ॥ 72

ப்ரியாம் - 'காதலியாகிய
வைதேஹீம் - ஜானகியை
ததாரூபாம் ஹி - எல்லாப் பிரகாரத்திலும் முன்போலிருக்கின்றவளாகவே,
ந தாஸ்யந்தி யதி - கொண்டுவந்து சேர்த்துவிடாமலிருக்கின்றார்கள் என்கிற பக்ஷத்தில்
ஸசராசரம் - அசைபொருள் அசையாப் பொருளடங்கிய,
ஜகத் சர்வம் - உலகங்களெல்லாமுமாகிய
த்ரைலோக்யம் - மூவுலகையும்
நாஶயாமி - இப்பவே அழிக்கின்றேன்.

इत्युक्त्वा रोषताम्राक्षो रामो निष्पीड्य कार्मुकम् ।
शरमादाय संदीप्तं घोरमाशीविषोपमम् ॥

இத்யுக்த்வா ரோஷதாம்ராக்ஷ: ராமோ நிஷ்பீட்ய கார்முகம் ।
ஶரமாதாய ஸந்தீப்தம் கோரமாஶீவிஷோபமம் ॥ 73

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

संदधे धनुषि श्रीमान् रामः परपुरंजयः ।
युगान्ताग्निरिव क्रुद्ध इदं वचनमब्रवीत् ॥

ஸந்ததே தநுஷி ஸ்ரீமான் ராம: பரபுரஞ்ஜய: ।
யுகாந்தாக்நிரிவ க்ருத்த இதம் வசனமப்ரவீத் ॥ 74

ஸ்ரீமான் - ஸ்ரீமானும்
பரபுரஞ்ஜய: - பிறர்கொட்டத்தையடக்குபவருமான
ராம: - ஸ்ரீராமர்
யுகாந்தாக்நி: - ஊழித்தீ
இவ - போல்
க்ருத்த: - சினங்கொண்டவராய்
ரோஷ தாம்ராக்ஷ: - கோபத்தால் சிவந்த கண்களுற்றவராகி
இதி - மேற்கண்டவாறு
உக்த்வா - சொல்லிவிட்டு,
கார்முகம் - வில்லை
நிஷ்பீட்ய - வளைத்து,
ஆஸீவிஷோபமம் - சர்பத்தை நிகர்த்து
கோரம் - பயங்கரமாய்
ஸந்தீப்தம் - ஜ்வலிக்கும்
ஶரம் - பாணத்தை
ஆதாய - எடுத்து,
தநுஷி - வில்லில்
ஸந்ததே - தொடுத்தார்.
ராம: - ஸ்ரீராமர்
இதம் - பின்வரும்
வசனம் - சொல்லையும்
அப்ரவீத் - சொன்னார்.

यथा जरा यथा मृत्युर्यथा कालो यथा विधिः ।
नित्यं न प्रतिहन्यन्ते सर्वभूतेषु लक्ष्मण ॥
तथाऽहं क्रोधसंयुक्तो न निवार्योऽस्मि सर्वथा ॥

யதா ஜரா யதா ம்ருத்யுர் யதா காலோ யதா விதி: ।
நித்யம் ந ப்ரதிஹந்யந்தே ஸர்வபூதேஷு லக்ஷ்மண ॥ 75
ததாऽஹம் க்ரோதஸம்யுக்தோ ந நிவார்யோऽஸ்மி ஸர்வதா ॥

லக்ஷ்மண - 'லக்ஷ்மணா!
ஸர்வபூதேஷு - எல்லாப் பிராணிகள் விஷயத்திலும்
யதா - எப்படி
ஜரா - மூப்பும்,
யதா - எப்படி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ம்ருத்யு: - மரணமும்,
யதா - எப்படி
கால: - பாபங்களின் பயனாய் விளையுமனிஷ்டமும்,
யதா - எப்படி
விதி: - தர்மத்தின் பயனாய் விளையும் பாக்யமும்,
நித்யம் - எப்பொழுதும்
ப்ரதி ஹந்யந்தே ந - தவிர்க்க முடியாதவைகளோ,
ததா - அவ்வண்ணமே
க்ரோத ஸம்யுக்த: - சினங்கொண்டிருக்கும்
அஹம் - நான்
ஸர்வதா - எப்படியும்
நிவார்ய: ந - யாவராலும் தடுக்கமுடியாதவனாக
அஸ்மி - இருக்கிறேன்.

पुरेव मे चारुदतीमनिन्दितां दिशन्ति सीतां यदि नाद्य मैथिलीम् ।
सदेवगन्धर्वमनुष्यपन्नगं जगत् सशैलं परिवर्तयाम्यहम् ॥

புரேவ மே சாருததீ மநிந்திதாம் திஶந்தி ஸீதாம் யதி நாத்ய மைதிலீம் ।
ஸதேவகந்தர்வமநுஷ்யபந்நகம் ஜகத் ஸஶைலம்பரிவர்தயாம்யஹம் ॥

அத்ய - இப்பொழுது
மைதிலீம் - ஜனகர்மகளாகிய
ஸீதாம் - சீதையை
புரா இவ - முன்போலவே
சாருததீம் - புன்னகையுடையவளாயும்
அநிந்திதாம் - தோஷரஹிதையாயும்
மே - என்னிடம்
ந திஶந்தி யதி - கொண்டுவந்து விடுகின்றார்களில்லையென்றால்
ஜகத் - உலகை
ஸதேவ கந்தர்வ - தேவர்கள், கந்தர்வர்கள், மானிடர்கள்,
மநுஷ்ய பந்நகம் - பன்னகர்கள் இவர்களோடும்
ஸஶைலம் - பர்வதங்களோடும்
அஹம் - நான்
பரிவர்தயாமி - தலைகீழாய்த் தடுமாற அடித்துவிடுவேன்.

இத்யார்ஷே ஸ்ரீமத் ராமாயணே வால்மீகீயே ஆதிகாவ்யே
சதுர்விம்ஶதி ஸஹஸ்ரிகாயாம் ஸம்ஹிதாயாம் ஆரண்ய காண்டே
ராமக்ரோதோ நாம சது: ஷஷ்டிதம: ஸர்க: ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பஞ்ச ஷஷ்டிதம: ஸர்க: - 65

तप्यमानं तथा रामं सीताहरणकर्शितम् ।
लोकानामभवे युक्तं संवर्तकमिवानलम् ॥
தப்யமாநம் ததா ராமம் ஸீதாஹரண கர்ஶிதம் ।
லோகாநமபவே யுக்தம் ஸம்வர்தகமிவாநலம் ॥

वीक्षमाणं धनुः सज्यं निःश्वसन्तं मुहुर्मुहुः । 1
हन्तुकामं पशुं रुद्रं क्रुद्धं दक्षक्रतौ यथा ॥
வீக்ஷமாணம் தநுஸ்ஸஜ்யம் நிஃஶ்வஸந் தம் முஹு: முஹு: ।
ஹந்து காமம் பஶும் ருத்ரம் க்ருத்தம் தக்ஷக்ரதௌ யதா ॥ 2

दग्धुकामं जगत् सर्वं युगान्ते तु यथा हरम् ॥
தக்துகாமம் ஜகத் ஸர்வம் யுகாந்தே து யதா ஹரம் ॥ 3

अदृष्टपूर्वं संक्रुद्धं दृष्ट्वा रामं तु लक्ष्मणः ।
अब्रवीत्प्राञ्जलिर्वाक्यं मुखेन परिशुष्यता ॥
அத்ருஷ்டபூர்வம் ஸங்க்ருத்தம் த்ருஷ்ட்வா ராமம் து லக்ஷ்மண: ।
அப்ரவீத் ப்ராஞ்ஜலிர் வாக்யம் முகேந பரிஶுஷ்யதா ॥ 4

ராமம் - ஸ்ரீராமரை
ஸீதாஹரண கர்ஶிதம் - சீதை காணாமற்போனதில் உள்ளங்கலங்கி
தப்யமாநம் - தபித்துக் கொண்டிருக்கிறவராகவும்,
ததா - அப்படியே
ஸம்வர்தகம் - ஊழி
அநலம் இவ - தீயைப்போலாகி
லோகாநாம் - உலகங்களை
அபவே - இல்லாதாக்குவதில்
யுக்தம் - தீர்மானித்து விட்டவராகவும்,
ஸஜ்யம் - நாணேற்றப்பட்ட
தநு: - தனுசை
வீக்ஷமாணம் - பார்த்து
முஹு: முஹு: - விட்டுவிட்டு
நிஶ்வஸந்தம் - பெருமூச்செறிந்து கொண்டிருக்கிறவராகவும்,
தக்ஷக்ரதௌ - தக்ஷப்பிரஜாபதியின் யாகத்தில்
பஶும் - யாகப்பசுவை
ஹந்துகாமம் - அழிக்கத் தீர்மானித்து
க்ருத்தம் - சினங்கொண்டிருந்த
ருத்ரம் - சிவபெருமானை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யதா - போலிருப்பவராகவும்,
யுகாந்தே - பிரளயகாலத்தில்
ஜகத் - உலகம்
ஸர்வம் - எல்லாவற்றையும்
தக்துகாமம் - தகிக்கத் தலைப்பட்ட
ஹரம் - மகாதேவரை
யதாது - போலிருப்பவரும்,
ராமம் து - லோகாபிராமராகும் அவரையே
ஸங்க்ருத்தம் - அளவுமிஞ்சி சினங்கொண்டவராய்
அத்ருஷ்ட பூர்வம் - இதுவரையில் இப்படி எப்பொழுதும் இருந்திராதவராகவும்
லக்ஷ்மண: - லக்ஷ்மணர்
த்ருஷ்ட்வா - அறிந்து,
பரிஶுஷ்யதா - வாட்டமுற்ற
முகேந - முகத்தோடு
ப்ராஞ்ஜலி: - அஞ்சலிஹஸ்தராகி
வாக்யம் - பின்வருஞ் சொல்லை
அப்ரவீத் - மொழிந்தார்.

पुरा भूत्वा मृदुर्दान्तः सर्वभूतहिते रतः ।
न क्रोधवशमापन्नः प्रकृतिं हातुमर्हसि ॥

புரா பூத்வா ம்ருதுர் தாந்த: ஸர்வபூத ஹிதே ரத: ।
நக்ரோதவஶமாபந்ந: ப்ரக்ருதிம் ஹாதுமர்ஹஸி ॥ 5

புரா - இதற்குமுன்
தாந்த: - ஜிதேந்திரியராய்
ம்ருது: - தண்ணளியுடையவராய்
ஸர்வபூத ஹிதே - சகலப்பிராணிகளுக்கும் நன்மை விளைவிப்பதில்
ரத: - ஊக்கமுடையவராகவும்.
பூத்வா - இருந்துவிட்டு,
க்ரோத வஶம் - கோபத்தில் ஈடுபட்டு
ஆபந்ந: - மெய்மறந்தவராய்
ப்ரக்ருதிம் - பிறவி நற்குணத்தை
ஹாதும் - துறக்க
அர்ஹஸி ந - தேவரீர் திருவுளம் பற்றலாகாது.

चन्द्रे लक्ष्मीः प्रभा सूर्ये गतिर्वायौ भुवि क्षमा ।
एतच्च नियतं सर्वं त्वयि चानुत्तमं यशः ॥

சந்த்ரே லக்ஷ்மீ: ப்ரபா ஸூர்யே கதிர்வாயௌ புவி க்ஷமா ।
ஏதச்ச நியதம் ஸர்வம் த்வயி சாநுத்தமம் யஶ: ॥ 6

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சந்த்ரே - சந்திரனிடத்தில்
லக்ஷ்மீ: - திருவும்,
ஸூர்யே - சூர்யனிடத்தில்
ப்ரபா - ஒளியும்,
வாயௌ - வாயுவினிடத்தில்
கதி: - எங்கும் வியாபித்திருத்தலும்,
புவி - பூமியில்
க்ஷமா - பொறுமையும்,
ஏதத் - மேற்கண்ட
ஸர்வம் ச - ஒவ்வொன்றும்
அநுத்தமம் - ஒப்புயர்வின்றி
யஶ: ச - யாவராலும் கொண்டாடப்படும் கீர்த்தியும்
த்வயி - தேவரீரிடத்தில்
நியதம் - குடிகொண்டிருக்கிறது.

एकस्य नापराधेन लोकान् हन्तुं त्वमर्हसि ।
अन्यद्ददामि राजेन्द्र निदानं सर्वसम्पदाम् ॥

ஏகஸ்ய நாபராதேந லோகான் ஹந்தும் த்வமர்ஹஸி ।
அன்யந் ததாமி ராஜேந்த்ர நிதானம் ஸர்வ ஸம்பதாம் ॥ 7

ஏகஸ்ய - ஒருவனுடைய
அபராதேந - அபசாரத்தால்
லோகான் - உலகங்களை
ஹந்தும் - அழிக்க
த்வம் - தேவரீர்
அர்ஹஸி ந - திருவுளம் பற்றக்கூடாது.
ராஜேந்த்ர - சக்கிரவர்த்தியாரே!
அன்யத் - இதன்றி
ஸர்வ ஸம்பதாம் - சகல காரிய சித்திகளுக்கும்
நிதானம் - எதற்கும் மேற்பட்டதை
வதாமி - விண்ணப்பம் செய்கிறேன்.

धर्मे जयति नाधर्मः कदाचिदपि चोभयोः ।
सीता पतिव्रता लक्ष्मीर्न नाशं वै गमिष्यति ॥

தர்மே ஜயதி நாதர்ம: கதாசித் அபி சோபயோ: । 8
ஸீதா பதிவ்ரதா லக்ஷ்மீ: ந நாஶம் வை கமிஷ்யதி ॥

உபயோ: ச - 'இருவர்களில்
தர்மே - தருமத்தில் நிலைபெற்றிருப்பவன் விஷயத்தில்
அதர்ம: - அதர்மமானது
கதாசித் அபி - ஒருபொழுதும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ந ஜயதி - தலைக்காட்டாது.
பதிவ்ரதா - கணவனையே தெய்வமாகக்கொண்ட
லக்ஷ்மீ: - லக்ஷ்மியாகும்
ஸீதா - சீதாப்பிராட்டியார்
நாஶம் - துன்பத்தை
கமிஷ்யதி ந வை - அடையவே மாட்டாள்.

ननु जानामि कस्यायं भग्नः सांग्रामिको रथः ।
केन वा कस्य वा हेतोः सायुधः सपरिच्छदः ॥

நநு ஜாநாமி கஸ்யாயம் பக்ந: ஸாங்க்ராமிகோ ரத: ।
கேந வா கஸ்ய வா ஹேதோ: ஸாயுத: ஸபரிச்சத : ॥ 9

அயம் - 'இந்த
ஸாயுத: - ஆயுதங்களோடு இருக்கிறதும்
ஸபரிச்சத: - பரிகரங்களோடுமிருக்கிறதுமான
ஸாங்க்ராமிக: - போர்
ரத: - ரதமானது
கஸ்ய து - யாருடையதென்றும்
கஸ்ய ஹேதோ: வா - எந்த உத்தேசத்தால்
கேந - எவனால்
பக்ந: வா - முறிக்கப்பட்டிருக்கிறதென்பதை
ந ஜாநாமி - நான் அறிகிலேன்.

खुरनेमिक्षतश्चायं सिक्तो रुधिरबिन्दुभिः ।
देशो निर्वृत्तसंग्रामः सुघोरः पार्थिवात्मज ॥

குர நேமிக்ஷதஶ்சாயம் ஸிக்தோ ருதிர பிந்துபி: ।
தேஶோ நிர்வ்ருத்த ஸங்க்ராம: ஸுகோர: பார்திவாத்மஜ ॥ 10

பார்திவாத்மஜ: - 'கோமகனே!
அயம் - இந்த
தேஶ: - பிரதேசமானது
குரநேமிக்ஷத: - குளம்புகளுடையவும், சக்கிரங்களுடையவும், அடிச்சுவடுடையதாயிருக்கிறது.
ருதிர பிந்து பி: - ரத்தத்துளிகளால்
ஸுகோர: - மிகப்பயங்கரமாய்
ஸிக்த: - நனைந்து கிடக்கிறது.
ச - அதனால்
நிர்வ்ருத்த ஸங்க்ராம:- போர் நடந்த இடமாகிறது.

एकस्य तु विमर्दोऽयं न द्वयोर्वदतां वर ।
न हि वृत्तं हि पश्यामि बलस्य महतः पदम् ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஏகஸ்ய து விமர்தோऽயம் ந த்வயோர் வததாம் வர ।
நஹி வ்ருத்தம் ஹி பஶ்யாமி பலஸ்ய மஹத: பதம் ॥ 11

வததாம் - 'விதிவிதிப்பவர்களில்
வர - உத்தமரே!
அயம் விமர்த: - இந்த அழிவானது
ஏகஸ்ய து - ஒருதரத்தானதே
த்வயோ: - இருதரத்தாருடையதாய்
ந - ஆகாது.
ஹி - ஏனெனில்
மஹத: - பெரும்
பலஸ்ய - சைன்யத்தினுடைய
பதம் - அடிச்சுவடை
வ்ருத்தம் ஹி - இதற்குமுன் இருந்ததாகவும்
ந பஶ்யாமி - நான் எண்ணவில்லை.

नैकस्य तु कृते लोकान् विनाशयितुमर्हसि ।

युक्तदण्डा हि मृदवः प्रशान्ता वसुधाधिपाः ॥

நைகஸ்ய து க்ருதே லோகான் விநாஶயிது மர்ஹஸி ।
யுக்த தண்டா ஹி ம்ருதவ: ப்ரஶாந்தா வஸுதாதிபா: ॥ 12

வஸுதாதிபா: - மன்னர்கள்
ம்ருதவ: - சினத்திற்கிடங்கொடாதவர்களாய்
ப்ரஶாந்தா: - மனதைச் சிதறவிடாதவர்களாய்
யுக்த தண்டா: - குற்றங்களுக்குத் தக்க தண்டனைகளை விதிக்கின்றவர்களாயிருக்க வேண்டும்.
ஹி - ஆனதால்
ஏகஸ்ய க்ருதே - ஒருவன் காரணமாய்
லோகான் து - உலகங்களையெல்லாம்
விநாஶயிதும் - அழிக்க
அர்ஹஸி ந - தேவரீர் திருவுளம் பற்றலாகாது.

सदा त्वं सर्वभूतानां शरण्यः परमा गतिः ।

को नु दारप्रणाशं ते साधु मन्येत राघव ॥

ஸதா த்வம் ஸர்வபூதாநாம் ஶரண்ய: பரமா கதி: । 13
கோ நு தாரப்ரணாஶம் தே ஸாது மன்யேத ராகவ ॥

ஸதா - 'எக்காலத்திலும்
ஸர்வ பூதாநாம் - எல்லாப் பிராணிகளுக்கும்
பரமா - வேண்டியவைகளை அளிக்கவல்ல
கதி: - புகுமிடமும்
ஶரண்ய: - அப்படிப்பட்டவர்களுக்கு 'களைக்கண்ணரர்கிறவரும்'★

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

த்வம் - தேவரீர்
ராகவ - ஸ்ரீராம!
தே - தேவரீரது
தாரப்ரணாஶம் - மனையாட்டி காணாமல் போயிருப்பதை
ஸாது - நியாயமாய்
க: நு - எவன்தான்
மன்யேத - நினைப்பான்?

★அதாவது சரணாகதி செய்தவர்களின் மனக்குறைகளை ஒழிக்கிறவரும்

सरितः सागराः शैला देवगन्धर्वदानवाः ।
नालं ते विप्रियं कर्तुं दीक्षितस्येव साधवः ॥

ஸரித: ஸாகரா: ஶைலா தேவகந்தர்வ தானவா: ।
நாலம் தே விப்ரியம் கர்தும் தீக்ஷிதஸ்யேவ ஸாதவ: ॥ 14

தீக்ஷிதஸ்ய - 'எவனுடைய முன்னோர்கள் ஜ்யோதிஷ்டோமம் முதலிய மகாயாகங்களைச் செய்திருக்கிறார்களோ அப்படிப்பட்டவராகிய
தே இவ - தேவரீருக்கும்
விப்ரியம் - அபசாரத்தை
கர்தும் - செய்ய
ஸரித: - நதிகளும்,
ஸாகரா: - கடல்களும்,
ஶைலா: - மலைகளும்,
தேவ கந்தர்வ தானவா: - தேவர்களும் கந்தர்வர்களும் தானவர்களும்
ஸாதவ: - அதர்மங்களுக்குப் பயப்படுகிறவர்களும்
அலம் ந - உடன்பட மாட்டார்கள்.

येन राजन् हृता सीता तमन्वेषितुमर्हसि ।
मद्द्वितीयो धनुष्पाणिः सहायैः परमर्षिभिः ॥

யேந ராஜன் ஹ்ருதா ஸீதா தமன்வேஷிதுமர்ஹஸி ।
மத்த்விதீயோ தநுஷ்பாணி: ஸஹாயை: பரமர்ஷிபி: ॥ 15

ராஜன் - 'நாதரே!
யேந - எவனொருவனால்
ஸீதா - சீதாப்பிராட்டியார்
ஹ்ருதா - திருடிக்கொண்டு போகப்பட்டிருக்கிறாளோ,
தம் - அவனை
தநுஷ்பாணி: - கோதண்டபாணியாய்
ஸஹாயை: - இது விஷயத்திலுதவி புரியும்
பரமர்ஷிபி: - முனிவர்பெருமான்களைக்கொண்டும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மத்த்விதீய: - என்னையும் துணையாகக் கொண்டும்
அன்வேஷிதும் - தேடிக்கண்டுபிடிக்க
அர்ஹஸி - தேவரீர் நிச்சயிக்க வேண்டும்.

समुद्रं च विचेष्यामः पर्वतांश्च वनानि च ।
गुहाश्च विविधा घोरा नदीः पद्मवनानि च ॥

ஸமுத்ரம் ச விசேஷ்யாம: பர்வதாம்ஸ்ச வநாநிச ।
குஹாஸ்ச விவிதா கோரா நதீ: பத்மவநாநி ச ॥

ஸமுத்ரம் ச - 'சமுத்திரத்தையும், 16
பர்வதான் ச - மலைகளையும்,
வநாநி ச - காடுகளையும்,
விவிதா: - பல
கோரா: - இருளடர்ந்த
குஹா: ச - குகைகளையும்,
நதீ: - நதிகளையும்,
பத்மவநாநி ச - தாமரை ஓடைகளையும்
விசேஷ்யாம: - நாம் தேடித் திரிவோம்.

देवगन्धर्वलोकांश्च विचेष्यामः समाहिताः ।
यावन्नाधिगमिष्यामस्तव भार्यापहारिणम् ॥

தேவகந்தர்வ லோகாம்ஸ்ச விசேஷ்யாம: ஸமாஹிதா: ।
யாவன்நாதிகமிஷ்யாமஸ் தவ பார்யாபஹாரிணம் ॥ 17

தவ - 'தேவரீரது
பார்யாபஹாரிணம் - மனைவியைத் திருடிப் போனவனை
அதிகமிஷ்யாம: ந யாவத் - நாம் கண்டுபிடிக்காதிருக்கும் வரையிலும்
ஸமாஹிதா: - மனத்தளர்ச்சிக்கிடங்கொடாதவர்களாய்
தேவகந்தர்வ லோகான் ச - தேவ லோகங்களையும், கந்தர்வ லோகங்களையும்கூட
விசேஷ்யாம: - தேடிப் பார்ப்போம்.

न चेत् साम्ना प्रदास्यन्ति पत्नीं ते त्रिदशेश्वराः ।
कोसलेन्द्र ततः पश्चात् प्राप्तकालं करिष्यसि ॥

ந சேத் ஸாம்நா ப்ரதாஸ்யந்தி பத்நீம் தே த்ரிதஸேஸ்வரா: ॥ 18
கோஸலேந்த்ர தத: பஸ்சாத் ப்ராப்தகாலம் கரிஷ்யஸி ॥

தே - 'தேவரீரது
பத்நீம் - பத்னியை
த்ரிதஸேஸ்வரா: - தேவோத்தமர்கள்
ஸாம்நா - நல்லபடியாக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ப்ரதாஸ்யந்தி ந - கொணர்ந்து கொடாதிருக்கின்றார்கள்
சேத் - என்றால்
தத: பஶ்சாத் - அதன் பின்னர்
கோஸலேந்த்ர - கோஸலதேச மன்னா!
ப்ராப்த காலம் - அக்காலத்திற்கேற்ற தொழிலை
கரிஷ்யஸி - தேவரீர் புரியலாம்.

शीलेन साम्ना विनयेन सीतां नयेन न प्राप्स्यसि चेन्नरेन्द्र ।
ततः समुत्सादय हेमपुङ्खैर्महेन्द्रवज्रप्रतिमैः शरौघैः ॥

ஶீலேந ஸாம்நா விநயேன ஸீதாம்
நயேந ந ப்ராப்ஸ்யஸி சேந்நரேந்த்ர ।
ததஸ்ஸமுத்ஸாதய ஹேம புங்கைர்
மஹேந்த்ர வஜ்ரப்ரதிமை: ஶரௌகை: ॥ 19

நரேந்த்ர - 'புருஷோத்தமா!
ஸீதாம் - சீதையை
ஶீலேந - நல்லபடியாக
ஸாம்நா - நல்ல வார்த்தையாலும்
விநயேன - மரியாதையாயும்
நயேந - தர்ம விதிப் பிரகாரமாகவும்
ப்ராப்ஸ்யஸி ந சேத் - தேவரீர் பெறாதுபோனால்
தத: - அதன்மேல்
மஹேந்த்ர வஜ்ர ப்ரதிமை: - இந்திரனது வஜ்ராயுதத்தை நிகர்த்த
ஹேம புங்கை: - பொன்முனைகளுற்ற
ஶரௌகை: - பாணவர்ஷங்களால்
ஸமுத்ஸாதய - தலைகீழாய்த் தடுமாறச் செய்யும்.'

இத்யார்ஷே ஸ்ரீமத் ராமாயணே வால்மீகீயே ஆதிகாவ்யே சதுர்விம்ஶதி ஸஹஸ்ரிகாயாம் ஸம்ஹிதாயாம் ஆரண்ய காண்டே க்ரோதஸம்ஹார ப்ரார்தநா நாம பஞ்சஷஷ்டிதம: ஸர்க: ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஷட் ஷஷ்டிதம: ஸர்க: - 66

तं तथा शोकसंतप्तं विलपन्तमनाथवत् ।
मोहेन महताविष्टं परिद्यूनमचेतसम् ॥

தம் ததா ஶோகஸந்தப்தம் விலபந்தமநாதவத் ।
மோஹேந மஹதாவிஷ்டம் பரித்யூனம் அசேதஸம் ॥

ततः सौमित्रिराश्वास्य मुहूर्तादिव लक्ष्मणः । 1
रामं संबोधयामास चरणौ चाभिपीडयन् ॥

தத: ஸௌமித்ரிராஶ்வாஸ்ய முஹூர்தாதிவ லக்ஷ்மண: ।
ராமம் ஸம்போதயாமாஸ சரணௌ சாபிபீடயன் ॥

ஸௌமித்ரி: - சுமித்ராதேவியின் புதல்வராகிய 2
லக்ஷ்மண: - லக்ஷ்மணர்
ததா - அப்படியாய்
ஶோகஸந்தப்தம் - சோகத்தால் தபித்துக்கொண்டிருந்தவரும்
அநாதவத் - திறமையற்றவர்போல்
விலபந்தம் - புலம்பிக்கொண்டிருந்தவரும்
மஹதா - அளவுகடந்த
மோஹேந - அன்பினதிசயத்தால்
ஆவிஷ்டம் - பற்றப்பட்டவராய்
அசேதனம் - அறிவிழந்து
பரித்யூனம் - வருத்தமுறுபவருமான
தம் ராமம் - அந்த ஸ்ரீராமரை
முஹூர்தாத் இவ - சற்றுநேரம்
ஆஶ்வாஸ்ய - நல்வார்த்தை சொல்லித் தேற்றி
தத: - அதன்பின்னர்
சரணௌ - திருவடிகளை
அபிபீடயன் ச - பிடித்துக்கொண்ட வண்ணமே
ஸம்போதயாமாஸ - பின்வருமாறு விவரமாய் விளக்கினார்.

महता तपसा राम महता चापि कर्मणा ।
राज्ञा दशरथेनासि लब्धोऽमृतमिवामरैः ॥

மஹதா தபஸா ராம மஹதா சாபி கர்மணா । 3
ராஜ்ஞா தஶரதேநாஸி லப்தோऽம்ருதமிவாமரை: ॥

ராம - 'ஸ்ரீராம!
தஶரதேந - தசரத
ராஜ்ஞா - சக்ரவர்த்தியாரால்
அமரை: - தேவர்களால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அம்ருதம் - அமிருதமானது
இவ - அடையப்பட்டது எப்படியோ அப்படியே
மஹதா - கடுமையான
தபஸா ச - காயக்லேசத்தாலும்
மஹதா - சிறந்த
கர்மணா அபி - புண்யகிருத்யங்களின் பயனாலும்
லப்த: அஸி - தேவரீர் அடையப்பட்டீர்.

तव चैव गुणैर्बद्धस्त्वद्वियोगान्महीपतिः ।
राजा देवत्वमापन्नो भरतस्य यथा श्रुतम् ॥

தவ சைவ குணைர் பத்தஸ் த்வத்வியோகான்மஹீபதி: ।
ராஜா தேவத்வமாபந்நோ பரதஸ்ய யதா ஶ்ருதம் ॥ 4

பரதஸ்ய - 'பரதனுக்கு
யதா - உள்ளபடி
ஶ்ருதம் ச - தெரிந்த விஷயம் இது.
தவ - தேவரீரது
குணை: ஏவ - குணங்களைக் கொண்ட
பத்த: - பேரன்பு வைத்திருந்த
மஹீபதி: - உலகாளும்
ராஜா - சக்கிரவர்த்தியார்
த்வத்வியோகாத் - தேவரீரை விட்டுப் பிரிந்தமையால்
தேவத்வம் - ஸ்வர்க்கவாஸியாகி விடுதலை
ஆபந்ந: - அடைந்தார்.

यदि दुःखमिदं प्राप्तं काकुत्स्थ न सहिष्यसे ।
प्राकृतश्चाल्पसत्त्वश्च इतरः कः सहिष्यते ॥

யதி துக்கமிதம் ப்ராப்தம் காகுத்ஸ்த ந ஸஹிஷ்யஸே ।
ப்ராக்ருதஶ்சால்பஸத்த்வஶ்ச இதர: க: ஸஹிஷ்யதே ॥ 5

காகுத்ஸ்த - 'ஸ்ரீராம!
ப்ராப்தம் - விதிப்பயனாய் விளைந்தண்
இதம் - இந்த
துக்கம் - கஷ்டத்தை
ந ஸஹிஷ்யஸே யதி - தேவரீர் சகிக்காதிருக்கின்றீர்ரென்றால்
இதர: - வேறு சாதாரணமானவனும்
ப்ராக்ருத: - கற்றறிவில்லாதவனும்
அல்ப ஸத்த்வ: ச - அல்ப பலமுள்ளவனுமான
க: ச - எவன்தான்
ஸஹிஷ்யதி - சகிப்பான்?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

दुःखितो हि भवाँल्लोकांस्तेजसा यदि धक्ष्यते ।
आर्ताः प्रजा नरव्याघ्र क्व नु यास्यन्ति निर्वृतिम् ॥

துக்கிதோ ஹி பவாந் லோகான் தேஜஸா யதி தக்ஷ்யதே ।
ஆர்தா: ப்ரஜா நரவ்யாக்ர க்வநு யாஸ்யந்தி நிர்வ்ருதிம் ॥ 6

பவாந்ஹி - 'தேவரீரே
துக்கித: - மனவேதனையால் மெய்மறந்தவராய்
லோகான் - பிரஜைகளை
தேஜஸா - ஆற்றலால்
தக்ஷ்யதே யதி - துன்புறுத்துகிறீர் என்றால்
நர வ்யாக்ர - புருஷோத்தம!
ஆர்தா: - துன்பப்படும்
ப்ரஜா: - பிரஜைகள்
நிர்வ்ருதிம் - துன்பங்களின் நிவிருத்தியை
க்வ நு யாஸ்யந்தி - எவனிடம் அடையப் போகின்றார்கள்?

लोकस्वभाव एवैष ययातिर्नहुषात्मजः ।
गतश्शक्रेण सालोक्यमपतत्स तमः स्पृशन् ॥

லோகஸ்வபாவ ஏவைஷ யயாதிர் நஹுஷாத்மஜ: ।
கதஶ் ஶக்ரேண ஸாலோக்யமபதத்தம: ஸ்ப்ருஶன் ॥ 7

ஏஷ: - 'இது
லோகஸ்வபாவ: ஏவ - லோக ஜனங்களுக்குச் சாதாரணமாய்ச் சம்பவிக்கிறதுதான்.
நஹுஷாத்மஜ: - நகுஷனின் புதல்வராகிய
ஸ: யயாதி: - அந்த யயாதி என்பவர்
ஶக்ரேண - இந்திரனோடு
ஸாலோக்யம் - தேவபதவியை
கத: - அடைந்து
தம: - ★செய்யத்தகாத பிழை
ஸ்ப்ருஶன் - பற்றியவராய் (ஒன்றை)
அபதத் - மானிட உலகிற்கு வந்துசேர்ந்தார்.

★அதாவது உலகில் உத்தமன் யாரென இந்திரன் அவரை வினாவ, அதற்கு அகங்காரத்தால் நான்தான் என்று சொல்லிய குற்றமாகிற இதை

महर्षिर्यो वसिष्ठस्तु यः पितुर्नः पुरोहितः ।
अह्ना पुत्रशतं जज्ञे तथैवास्य पुनर्हतम् ॥

மஹர்ஷிர் யோ வஸிஷ்டஸ்து ய: பிதுர் ந: புரோஹித: ।
அன்ஹா புத்ரஶதம் ஜஜ்ஞே ததைவாஸ்ய புனர்ஹதம் ॥ 8

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிது: - ‘தந்தைக்கும்
ந:து - நமக்கும்
புரோஹித: - குலகுரு
ய: - எவரோ அந்த
வஸிஷ்ட: - வசிஷ்ட பகவான்
புத்ரஶதம் - நூறு புதல்வர்களை
ஜஜ்ஞே - பெற்றார். (ஆர்ஷம்)
அஸ்ய - இந்த நூற்றுவருக்கும்
அன்ஹா - ஒரே நாளில்
ஹதம் - மரணமுண்டானது.
மஹர்ஷி: - மகரிஷி
ய: - எவரோ அந்த இவர்
புன: - அப்படியாகியும்
ததா ஏவ - முன்போலவே இருந்தனர். (அதாவது மன வேதனைப் படாதிருந்தனர்.)

या चेयं जगतां माता देवी लोकनमस्कृता ।
अस्याश्च चलनं भूमेर्दृश्यते कोसलेश्वर ॥

யா சேயம் ஜகதாம் மாதா தேவீ லோகநமஸ்க்ருதா ।
அஸ்யாஶ்ச சலனம் பூமேர் த்ருஶ்யதே கோஸலேஶ்வர ॥ 9

ஸத்ய ஸம்ஶ்ரய - ‘பிரஜைகளுக்கு ஹிதமே புரிகிறதென்றும் சத்தியம் குடிகொண்டிருக்கப் பெற்ற ஆத்மாவே!
யா - எவள்
ஜகத: - உலகத்திற்கு
மாதா - தாயும்
லோக நமஸ்க்ருதா - பிரஜைகளால் நமஸ்கரிக்கப்பட்டவளுமாகிய
இயம் ச - இவள்தான்
தேவீ - பூமகள்.
அஸ்யா: பூமே: ச - இந்த பூமகளுக்கும் கூட
சலனம் - பூகம்பம்
த்ருஶ்யதே - ஏற்படுகிறது.

यौ धर्मौ जगतां नेत्रे यत्र सर्वं प्रतिष्ठितम् ।
आदित्यचन्द्रौ ग्रहणमभ्युपेतौ महाबलौ ॥

யௌ தர்மௌ ஜகதாம் நேத்ரே யத்ர ஸர்வம் ப்ரதிஷ்டிதம் ।
ஆதித்யசந்த்ரௌ க்ரஹணமப்யுபேதௌ மஹாபலௌ ॥ 10

யௌ - ‘எவர்கள்
தர்மௌ - தர்மாத்மாக்களோ,
ஜகதாம் - உலகங்களுக்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நேத்ரௌ - இரு கண்களாக விளங்குகிறார்களோ,
யத்ர - எவ்விரண்டில்
ஸர்வம் - உலக வாழ்வு எல்லாம்
ப்ரதிஷ்டிதம் - குடிகொண்டிருக்கிறதோ அந்த
மஹாபலௌ - மகாசக்திவான்களாகிய
ஆதித்ய சந்த்ரௌ - சூரியனும் சந்திரனும்
க்ரஹணம் - ராகுவினால் பிடிபடுதலை
அப்யுபேதௌ - அனுபவிக்கின்றார்கள்.

सुमहान्त्यपि भूतानि देवाश्च पुरुषर्षभ ।
न दैवस्य प्रमुञ्चन्ति सर्वभूतादि देहिनः ॥

ஸுமஹாந்த்யபி பூதாநி தேவாஶ்ச புருஷர்ஷப ।
ந தைவஸ்ய ப்ரமுஞ்சந்தி ஸர்வ பூதாதி தேஹிந: ॥ 11

புருஷர்ஷப - 'புருஷோத்தம!
ஸுமஹாந்தி - மிகப்பெரிய
பூதாநி அபி - பிராணிகளும்
ஸர்வ பூதாதி தேஹிந:-எல்லாப் பிராணிகளிலும் சிறந்த மானிடர்களும்,
தேவா: ச - தேவர்களும்
தைவஸ்ய - விதிப்பயனை
ப்ரமுஞ்சந்தி ந - தவிர்க்க முடியாது.

शक्रादिष्वपि देवेषु वर्तमानौ नयानयौ ।
श्रूयेते नरशार्दूल न त्वं व्यथितुमर्हसि ॥

ஶக்ராதிஷ்வபி தேவேஷு வர்தமானௌ நயாநயௌ ।
ஶ்ரூயதே நரஶார்தூல ந த்வம் வ்யதிதுமர்ஹஸி ॥ 12

ஶக்ராதிஷு - 'இந்திரன் முதலிய
தேவேஷு அபி - தேவர்களிடத்திலும்
நயாநயௌ - சுகதுக்கமாகிற இரண்டும்
வர்தமானௌ - இருக்கிறதென்று
ஶ்ரூயதே - கூறப்படுகின்றன.
நரஶார்தூல - புருஷோத்தம!
த்வம் - தேவரீர்
வ்யதிதும் - துன்புறுவதற்கு
அர்ஹஸி ந - இடங்கொடுக்கலாகாது.

नष्टायामपि वैदेह्यां हृतायामपि चानघ ।
शोचितुं नार्हसे वीर यथान्यः प्राकृतस्तथा ॥

நஷ்டாயாமபி வைதேஹ்யாம் ஹ்ருதாயாமபி சாநக । 13
ஶோசிதும் நார்ஹஸே வீர யதா அன்ய: ப்ராக்ருதஸ் ததா ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அநக - 'பரிசுத்த மூர்த்தி!
வைதேஹ்யாம் - சீதாபிராட்டியார்
ஹ்ருதாயாம் அபி - திருடிக்கொண்டு போகப்பட்டே
நஷ்டாயாம் அபி - காணப்படாமலிருக்கையில்
வீர - சூரரே!
அன்ய: - சாதாரண
ப்ராக்ருத: - கற்றறியாதவன்
யதா ததா ச - எவ்வண்ணமோ அவ்வண்ணமே
ஶோசிதும் - மனவேதனைப்பட
ந அர்ஹஸே - தேவரீர் இடங்கொடுக்கக் கூடாது.

त्वद्विधा न हि शोचन्ति सततं सत्यदर्शिनः ।
सुमहत्स्वपि कृच्छ्रेषु रामानिर्विण्णदर्शनाः ॥

த்வத்விதா ந ஹி ஶோசந்தி ஸததம் ஸத்ய தர்ஶிந: ।
ஸுமஹத்ஸ்வபி க்ருச்ச்ரேஷு ராமாநிர்விண்ண தர்ஶநா: ॥ 14

ராம - ஸ்ரீராம!
ஸததம் - எக்காலத்திலும்
ஸத்ய தர்ஶிந: - பரமாத்ம ஞானிகளும்
அநிர்விண்ண தர்ஶநா:- விதிப்பயனால் வந்த ஆபத்துக்களில் மனம் சலியாதிருக்க வேண்டுமென்பதை அறிந்தவர்களுமான
த்வத்விதா: ஹி - தேவரீர் போன்றவர்கள் என்றால்
ஸுமஹத்ஸு - மிகக் கடுமையான
க்ருச்ச்ரேஷு அபி - ஆபத்துக்களிலும் கூட
ஶோசந்தி ந - மனத்தளர்ச்சியடைகின்றார்களில்லை.

तत्त्वतो हि नरश्रेष्ठ बुद्ध्या समनुचिन्तय ।
बुद्ध्या युक्ता महाप्राज्ञा विजानन्ति शुभाशुभे ॥

தத்த்வதோ ஹி நரஶ்ரேஷ்ட புத்த்யா ஸமநுசிந்தய ।
புத்த்யா யுக்தா மஹாப்ராக்ஞா விஜாநந்தி ஶுபாஶுபே ॥ 15

நரஶ்ரேஷ்ட - 'புருஷோத்தம!
புத்த்யா - அறிவைக்கொண்டு
தத்த்வத: - சிதறவிடாமலே
ஸமநுசிந்தய - தீர்க்காலோசனை செய்வீராக!
மஹாப்ராக்ஞா: - மகாபுத்திமான்கள்
புத்த்யா யுக்தா: ஹி - அறிவைச்சிதறவிடாமலிருக்கின்றவர்களாய்த்தான்
ஶுபா ஶுபே - செய்யத்தக்கதையும் செய்யத்தகாததையும்
விஜாநந்தி - பகுத்தறிகின்றார்கள்.

अदृष्टगुणदोषाणामध्रुतानां च कर्मणाम् ।
नान्तरेण क्रियां तेषां फलमिष्टं प्रवर्तते ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அத்ருஷ்ட குணதோஷாணாமஶ்ருதாநாம் ச கர்மணாம் ।
நாந்தரேண க்ரியாம் தேஷாம் பலமிஷ்டம் ப்ரவர்த்ததே ॥

அத்ருஷ்ட குண தோஷாணாம் - 'நன்மை தீமைகளை பகுத்தறிய முடியாத 16
தேஷாம் - அந்த
அஶ்ருதானாம் - புல்லறிவாளர்களுடைய
கர்மணாம் - செயல்களுக்கு
க்ரியாம் - பிரதிகாரத்தை
அந்தரேண து - செய்யாவிடிலோ
இஷ்டம் - மனோரதமாகிய
பலம் - பிரயோஜனம்
ந ப்ரவர்த்ததே - உண்டாக மாட்டாது.

त्वमेव हि पुरा राम मामेवं बहुशोऽन्वशाः ।
अनुशिष्याद्धि को नु त्वामपि साक्षाद्बृहस्पतिः ॥

த்வமேவ ஹி புரா ராம மாமேவம் பஹுஶோऽன்வஶா: ।
அநுஶிஷ்யாத்தி கோ நு த்வாமபி ஸாக்ஷாத்ப்ருஹஸ்பதி: ॥ 17

ராம - 'ஸ்ரீராம!
புரா - முன்னொருக்கால்
பஹுஶ: - எத்தனையோதரம்
ஏவம் - மேற்கண்டவாறு
மாம் ஹி - அடியேனுக்கே
த்வம் ஏவ - தேவரீரே
அன்வஶா: - உபதேசித்திருக்கின்றீர்.
ஹி - அப்படியிருக்கையில்
த்வாம் - தேவரீருக்கு
க: நு - எவன்தான்
ஸாக்ஷாத் - ஸாக்ஷாத்
ப்ருஹஸ்பதி: அபி - பிரகஸ்பதியென்றாலும்
அநுஶிஷ்யாத் - உபதேசிப்பன்?

बुद्धिश्च ते महाप्राज्ञ देवैरपि दुरन्वया ।
शोकेनाभिप्रसुप्तं ते ज्ञानं संबोधयाम्यहम् ॥

புத்திஶ்ச தே மஹாப்ராஜ்ஞ தேவைரபி துரன்வயா । 18
ஶோகேநாபிப்ரஸுப்தம் தே ஞானம் ஸம்போதயாம்யஹம் ॥

மஹாப்ராஜ்ஞ - 'ஸர்வ ஞானியே!
தே - தேவரீரது
புத்தி: ச - மனோபாவமோ
தேவை: அபி - தேவர்களாலுங்கூட
துரன்வயா - அறிய முடியாதது.
தே - தேவரீரது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஶோகேந - துயரத்தால்
அபிப்ரஸுப்தம் - துயில்கொண்டிருக்கும்
ஜ்ஞானம் - பரமாத்மஸ்வரூபத்தை
அஹம் - நான்
ஸம்போதயாமி - விண்ணப்பம் செய்து கொள்கிறேன்.

दिव्यं च मानुषं च त्वमात्मनश्च पराक्रमम् ।
इक्ष्वाकुवृषभावेक्ष्य यतस्व द्विषतां वधे ॥

திவ்யம் ச மானுஷம் ச த்வமாத்மனஶ்ச பராக்ரமம் ।
இக்ஷ்வாகு வ்ருஷபாவேக்ஷ்ய யதஸ்வ த்விஷதாம் வதே ॥ 19

இக்ஷ்வாகு வ்ருஷப - இக்ஷ்வாகு குலரத்தினமே!
த்வம் - தேவரீர்
ஆத்மன: - தேவரீரது
திவ்யம் ச - அமானுஷ்யமாய் விளங்குகிறதும்
மானுஷம் ச - மானிட உலகிற்கு நன்மை பயக்குகிறதாயுமிருக்கிற
பராக்ரமம் ச - பராக்கிரமத்தையே
அவேக்ஷ்ய - திருவுளத்தில் கொண்டு
த்விஷதாம் - அபசாரப்பட்டவர்களுடைய
வதே - வதையில்
யதஸ்வ - முயற்சிகொள்ள வேண்டும்.

किं ते सर्वविनाशेन कृतेन पुरुषर्षभ ।
तमेव त्वं रिपुं पापं विज्ञायोद्धर्तुमर्हसि ॥

கிம் தே ஸர்வவிநாஶேந க்ருதேந புருஷர்ஷப ।
தமேவ த்வம் ரிபும் பாபம் விஜ்ஞாயோத்தர்துமர்ஹஸி ॥ 20

புருஷர்ஷப - 'புருஷோத்தம!
ஸர்வ விநாஶேந - எல்லோருக்கும் அழிவை விளைவிக்கின்றதான
க்ருதேந - செயலால்
தே - தேவரீருக்கு
கிம் - என்ன பிரயோஜனம்;
த்வம் - தேவரீர்
பாபம் - அபசாரப்பட்ட
தம் - அந்த
ரிபும் ஏவ - சத்துருவை மட்டும்
விஜ்ஞாய - கண்டறிந்து,
உத்தர்தும் - வேரோடொழிக்க
அர்ஹஸி - திருவுளம் பற்ற வேண்டும்.'

இத்யார்ஷே ஶ்ரீமத் ராமாயணே வால்மீகீயே ஆதிகாவ்யே
சதுர்விம்ஶதி ஸஹஸ்ரிகாயாம் ஸம்ஹிதாயாம் ஆரண்ய காண்டே
ஔசித்ய ப்ரபோதநம் நாம ஷட் ஷஷ்டிதம: ஸர்க: ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸப்த ஷஷ்டிதம: ஸர்க: - 67

पूर्वजोऽप्युक्तमात्रस्तु लक्ष्मणेन सुभाषितम् ।
सारग्राही महासारं प्रतिजग्राह राघवः ॥

பூர்வஜோऽப்யுக்த மாத்ரஸ்து லக்ஷ்மணேன ஸுபாஷிதம் ।
ஸாரக்ராஹீ மஹாஸாரம் ப்ரதிஜக்ராஹ ராகவ: ॥

பூர்வஜ:	-	ஜ்யேஷ்டரும்	1
ஸாரக்ராஹீ அபி	-	நுண்ணறிவாளருமான	
ராகவ:	-	ஸ்ரீராமர்	
லக்ஷ்மணேன	-	லக்ஷ்மணரால்	
ஸுபாஷிதம்	-	இனிமையாய்ச் சொல்லப்பட்டதை	
உக்தமாத்ர: து	-	செவிக்கொண்டதுமே	
மஹாஸாரம்	-	மகத்தான ரகஸ்யத்தை	
ப்ரதிஜக்ராஹ	-	திருவுளத்தில் பற்றினார்.	

संनिगृह्य महाबाहुः प्रवृद्धं रोषमात्मनः ।
अवष्टभ्य धनुश्चित्रं रामो लक्ष्मणमब्रवीत् ॥

ஸந்நிக்ருஹ்ய மஹா பாஹு: ப்ரவ்ருத்தம் ரோஷமாத்மன: ।
அவஷ்டப்ய தநுஶ்சித்ரம் ராமோ லக்ஷ்மணமப்ரவீத் ॥ 2

மஹாபாஹு:	-	மகாபாகுவாகிய
ராம:	-	ஸ்ரீராமர்
ஆத்மன:	-	தனது
ப்ரவ்ருத்தம்	-	மகத்தான
கோபம்	-	கோபத்தை
ஸந்நிக்ருஹ்ய	-	முற்றிலும் ஒழித்து,
சித்ரம்	-	ஸர்வோத்கிருஷ்டமாகிய
தநு:	-	வில்லை
அவஷ்டப்ய	-	நாணைக்கயற்றிவிட்டு
லக்ஷ்மணம்	-	லக்ஷ்மணனைப் பார்த்து
அப்ரவீத்	-	பின்வருமாறு மொழிந்தார்.

किं करिष्यावहे वत्स क्व वा गच्छाव लक्ष्मण ।
केनोपायेन पश्याव सीतामिति विचिन्तय ॥

கிம் கரிஷ்யாவஹே வத்ஸ க்வ வா கச்சாவ லக்ஷ்மண । 3
கேநோபாயேன பஶ்யாவ ஸீதாமிதி விசிந்தய ॥

வத்ஸ	-	'குழந்தாய்!
கிம் கரிஷ்யாவஹே	-	'எதை நாம் செய்வோம்'

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

த்வ வா - 'எங்கே
கச்சாவ - நாம் போவோம்?'
லக்ஷ்மண - லக்ஷ்மணா!
கேந - 'எந்த
உபாயேன - உபாயத்தால்
ஸீதாம் - சீதையை
பஶ்யேயம் - நான் காண்பேன்?'
இதி - என்பதை
விசிந்தய - ஆலோசித்துச் சொல்.'

तं तथा परितापार्तं लक्ष्मणो राममब्रवीत् ॥

தம் ததா பரிதாபார்தம் லக்ஷ்மணோ ராமமப்ரவீத் ।
ததா - அப்படியாய்
பரிதாபார்தம் - பரிதாபப்பட்டுக் கொண்டிருந்த
தம் ராமம் - அந்த ஸ்ரீராமரைப் பார்த்து
லக்ஷ்மண: - லக்ஷ்மணர்
அப்ரவீத் - பின்வருமாறு பதில் சொன்னார்.

इदमेव जनस्थानं त्वमन्वेषितुमर्हसि ।
राक्षसैर्बहुभिः कीर्णं नानाद्रुमलतायुतम् ॥

இதமேவ ஜனஸ்தாநம் த்வமந்வேஷிதுமர்ஹஸி ।
ராக்ஷஸைர் பஹுபி: கீர்ணம் நாநாத்ருமலதா யுதம் ॥ 4
பஹுபி: - 'பல
ராக்ஷஸை: - அரக்கர்களால்
கீர்ணம் - நிறைந்துள்ளதும்,
நாநா த்ரும லதாயுதம் - பல மரங்களும் கொடிகளும் அடர்ந்துள்ளதுமாகிய
இதம் - இந்த
ஜனஸ்தாநம் ஏவ - ஜனஸ்தானத்தையே
அந்வேஷிதும் - தேடிப்பார்க்க
த்வம் - தேவரீர்
அர்ஹஸி - ஒப்புக்கொள்வீராக.

सन्तीह गिरिदुर्गाणि निर्दराः कन्दराणि च ।
गुहाश्च विविधा घोरा नानामृगगणाकुलाः ॥

ஸந்தீஹ கிரிதுர்காணி நிர்தரா: கந்தராணி ச ।
குஹாஶ்ச விவிதா கோரா நாநாம்ருக கணாகுலா: ॥ 5

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

आवासाः किन्नराणां च गन्धर्वभवनानि च ।
तानि युक्तो मया सार्धं समन्वेषितुमर्हसि ॥

ஆவாஸா: கின்னராணாம் ச கந்தர்வபவநாநி ச ।
தானி யுக்தோ மயா ஸார்தம் ஸமன்வேஷிது மர்ஹஸி ॥

இஹ - 'இவ்விடத்தில் 6
கிரிதுர்காணி - மலைகளில் புகமுடியாத இடங்களும்,
நிர்தரா: - சுனைகளும்,
கந்தராணி ச - குகைகளும்,
விவிதா: - பல
கோரா: - பயங்கரமான
நாநா ம்ருக கணாகுலா:- பலவகைதுஷ்டமிருகங்களால் நிறைந்துள்ளதுமான
குஹா: ச - பள்ளத்தாக்குகளும்
கின்னராணாம் - கின்னரர்களுடைய
ஆவாஸா: ச - வீடுகளும்
கந்தர்வ பவநாநி ச - கந்தர்வ மாளிகைகளும்
ஸந்தி - இருக்கின்றன.
மயா ஸார்தம் - என்னோடுகூட
யுக்த: - இருந்துகொண்டு
தானி - அவைகளை
அன்வேஷிதும் - தேடிப்பார்க்க
த்வம் - தேவரீர்
அர்ஹஸி - இணங்க வேண்டும்.

त्वद्विधा बुद्धिसंपन्ना महात्मानो नरर्षभाः ।
आपत्सु न प्रकम्पन्ते वायुवेगैरिवाचलाः ॥

த்வத்விதா புத்தி ஸம்பந்நா மஹாத்மானோ நரர்ஷபா: ।
ஆபத்ஸு ந ப்ரகம்பந்தே வாயுவேகைரிவாசலா: ॥ 7

நரர்ஷப - 'புருஷோத்தம!
புத்தி ஸம்பந்நா: - நல்லறிவு படைக்கப்பெற்ற
மஹாத்மான: - மகாத்மாக்களாகிய
த்வத்விதா: - உம்மைப்போன்றவர்கள்
வாயுவேகை: - புயல் காற்றுகளாலும்
அசலா: இவ - மலைகள் போலவே
ஆபத்ஸு - ஆபத்துக் காலங்களில்
ந ப்ரகம்பந்தே - மனஞ்சலியாதிருக்கின்றார்கள்.'

इत्युक्तस्तद्वचनं सर्वं विचचार सलक्ष्मणः ।
क्रुद्धो रामः शरं घोरं संधाय धनुषि क्षुरम् ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இத்யுக்தஸ் தத்வனம் ஸர்வம் விசசார ஸலக்ஷ்மண: ।
க்ருத்தோ ராம: ஶரம் கோரம் ஸந்தாய தநுஷி க்ஷுரம் ॥ 8

இதி - மேற்கண்டவாறு
உக்த: - சொல்லப்பட்டதற்கு செவிசாற்றிய
ராம: - ஶ்ரீராமர்
க்ருத்த: - ஆத்திரத்துடனிருப்பவராய்
கோரம் - கொடிய
க்ஷுரம் - கூரிய
ஶரம் - பாணத்தை
தநுஷி - வில்லில்
ஸந்தாய - பூட்டிக்கொண்டு,
ஸ லக்ஷ்மண: - லக்ஷ்மணரோடு கூடவே
தத் - அந்த
வனம் ஸர்வம் - காடு முழுவதையும்
விசசார - தேடித் திரிந்தார்.

ततः पर्वतकूटाभं महाभागं द्विजोत्तमम् ।
ददर्श पतितं भूमौ क्षतजार्द्रं जटायुषम् ॥
तं दृष्ट्वा गिरिशृङ्गाभं रामो लक्ष्मणमब्रवीत् ॥

தத: பர்வத கூடாபம் மஹாபாகம் த்விஜோத்தமம் ।
ததர்ஶ பதிதம் பூமௌ க்ஷதஜார்த்ரம் ஜடாயுஷம் ॥
தம் த்ருஷ்ட்வா கிரிஶ்ருங்காபம் ராமோ லக்ஷ்மணமப்ரவீத் ॥ 10

தத: - அவ்விடத்தில்
பர்வத கூடாபம் - மலைச்சிகரத்தை நிகர்த்தியிருக்கிறதும்
மஹாபாகம் - மகாபுண்யாத்மாவும்
த்விஜோத்தமம் - பக்ஷிகளிலுத்தமரும்
பூமௌ - தரையில்
க்ஷதஜார்த்ரம் - உடம்பெல்லாம் ரத்தம் தோய்ந்து
பதிதம் - விழுந்து கிடக்கிறதுமான
ஜடாயுஷம் - ஜடாயுவை
ததர்ஶ - பார்த்தார்.
கிரிஶ்ருங்காபம் - மலைச்சிகரத்தைப் போலிருக்கிற
தம் - அவரை
த்ருஷ்ட்வா - கண்முன் கண்டு
ராம: - ஶ்ரீராமர்
லக்ஷ்மணம் - லக்ஷ்மணரைப் பார்த்து
அப்ரவீத் - பின்வருமாறு சொன்னார்.

अनेन सीता वैदेही भक्षिता नात्र संशयः ।
गृध्ररूपमिदं व्यक्तं रक्षो भ्रमति कानने ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அநேந ஸீதா வைதேஹீ பக்ஷிதா நாத்ர ஸம்மய: ।
க்ருத்ர ரூப மிதம் வ்யக்தம் ரக்ஷோ ப்ரமதி கானனே ॥ 11

வைதேஹீ - 'விதேக மன்னரின் புதல்வியான
ஸீதா - சீதை
அநேந - இதனால்
பக்ஷிதா - தின்றுவிடப்பட்டாள்.
அத்ர - இதில்
ந ஸம்மய: - சந்தேகமில்லை.
கானனே - காட்டில்
வ்யக்தம் - வெளிவேஷமாய்
க்ருத்ர ரூபம் - கழுகு உருக்கொண்ட
இதம் ரக்ஷ: - இந்த அரக்கன்
ப்ரமதி - தரையில் புரண்டு கொண்டிருக்கிறான்.

भक्षयित्वा विशालाक्षीमास्ते सीतां यथासुखम् ।
एनं वधिष्ये दीप्तास्यैर्घोरैर्बाणैरजिह्मगैः ॥

பக்ஷயித்வா விமாலாக்ஷீமாஸ்தே ஸீதாம் யதாஸுகம் ।
ஏனம் வதிஷ்யே தீப்தாஸ்யைர் கோரைர்பாணைரஜிஹ்மகை: ॥ 12

விமாலாக்ஷீம் - 'தடங்கண்ணாளாகிய
ஸீதாம் - சீதையை
பக்ஷயித்வா - தின்றுவிட்டு,
யதாஸுகம் - ஸ்வேச்சையாய்
ஆஸ்தே - விழுந்துகிடக்கிறது.
ஏனம் - இதை
தீப்தாஸ்யை: - ஜ்வலிக்கும் முனைகளுடையதும்
கோரை: - பயங்கரமான
அஜிஹ்மகை: - குறி தப்பாது செல்ல வல்லவைகளுமான.
பாணை: - பாணங்களால்
வதிஷ்யே - கொல்லப் போகிறேன்.

इत्युक्त्वाभ्यपतद्गृध्रं संधाय धनुषि क्षुरम् ।
क्रुद्धो रामः समुद्रान्तां चालयन्निव मेदिनीम् ॥

இத்யுக்த்வா அப்யபதத் க்ருத்ரம் ஸந்தாய தநுஷி க்ஷுரம் । 13
க்ருத்தோ ராமஸ் ஸமுத்ராந்தம் சாலயந்நிவ மேதிநீம் ॥

க்ருத்த: - ஆத்திரத்துடனிருக்கும்
ராம: - ஸ்ரீராமர்
இதி - மேற்கண்டவாறு
உக்த்வா - சொல்லிவிட்டு,
ஸமுத்ராந்தம் - சமுத்திரங்களை எல்லையாகவுடைய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மேதிநீம் - நிலவுலகை
சாலயந் இவ - கலக்கமுறச் செய்கிறவர்போலாகி
க்ஷுரம் - கூரிய பாணத்தை
தநுஷி - வில்லில்
ஸந்தாய - கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு,
க்ருத்ரம் - கழுகை
அப்யபதத் - கிட்டினார்.

तं दीनं दीनया वाचा सफेनं रुधिरं वमन् ।
अभ्यभाषत पक्षी तु रामं दशरथात्मजम् ॥

தம் தீநம் தீநயா வாசா ஸபேநம் ருதிரம் வமன் ।
அப்யபாஷத பக்ஷீ து ராமம் தஶரதாத்மஜம் ॥ 14

தீந: - அதிகஷ்டதசையிலிருக்கும்
பக்ஷீ - கழுகு
ஸபேநம் - நுரையோடுகூடிய
ருதிரம் - ரத்தத்தை
வமன் - கக்கிக்கொண்டு
தீநயா - வாய்திறந்து பேச முடியாது வெளிவருகிற
வாசா - சொற்கொண்டு
தஶரதாத்மஜம் - தசரதர் குமாரராகிய
தம் - அந்த
ராமம் - ஸ்ரீராமரைப் பார்த்து
து - இச்சமயத்தில்
அப்யபாஷத - பின்வருமாறு மொழிந்தது.

यामोषधिमिवायुष्मन्नन्वेषसि महावने ।
सा देवी मम च प्राणा रावणेनोभयं हृतम् ॥

யாமோஷதி மிவாயுஷ்மந் அந்வேஷஸி மஹாவனே ।
ஸா தேவீ மம ச ப்ராணா ராவணேநோபயம் ஹ்ருதம் ॥ 15

ஆயுஷ்மந் - 'சிரஞ்சீவி!
யாம் - எவளொருவளை
மஹாவனே - பெருங்கானகத்தில்
ஓஷதிம் - மூலிகையை
இவ - எவ்வண்ணமோ அவ்வண்ணமே
அந்வேஷஸி - தேடித் திரிகின்றீரோ;
ஸா - அந்த
தேவீ - தேவியும்
மம - எனது
ப்ராணா: ச - உயிரும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உபயம் - ஆகிய அந்த இரண்டும்
ராவணேந - ராவணனால்
ஹ்ருதம் - கவரப்பட்டுவிட்டன.

त्वया विरहिता देवी लक्ष्मणेन च राघव ।
ह्रियमाणा मया दृष्टा रावणेन बलीयसा ॥

த்வயா விரஹிதா தேவீ லக்ஷ்மணேன ச ராகவ ।
ஹ்ரியமாணா மயா த்ருஷ்டா ராவணேன பலீயஸா ॥ 16

ராகவ - 'ஸ்ரீராம!
த்வயா - உம்மையும்
லக்ஷ்மணேன ச - லக்ஷ்மணரையும்
விரஹிதா - விட்டுப் பிரிந்திருந்த
தேவீ - தேவியார்
பலீயஸா - முரடனான
ராவணேன - ராவணனால்
ஹ்ரியமாணா - தூக்கிக்கொண்டு போகப்படுகிறவளாய்
மயா - என்னால்
த்ருஷ்டா - காணப்பட்டாள்.

सीतामभ्यवपन्नोऽहं रावणश्च रणे मया ।
विध्वंसितरथच्छत्रः पातितो धरणीतले ॥

ஸீதா மப்யவபந்நோऽஹம் ராவணஶ்ச ரணே மயா ।
வித்வம்ஸித ரதச் சத்ர: பாதிதோ தரணீதலே ॥ 17

அஹம் - 'நான்
ஸீதாம் - சீதாப்பிராட்டியாரை
அப்யவபந்ந: - மீட்க முயன்றேன்.
மயா - என்னால்
ரணே - போரில்
ராவண: ச - ராவணனும்
வித்வம்ஸித ரதச்சத்ர:- ரதமும் குடையும் முறிக்கப்பட்டவனாய்
தரணீதலே - தரையில்
பாதித: - வீழ்த்தப்பட்டான்.

एतदस्य धनुर्भग्नमेते चास्य शरास्तथा ।
अयं तु सारथिस्तस्य मत्पक्षनिहतो भुवि ॥
अयमस्य रणे राम भग्नः सांग्रामिको रथः ॥

ஏததஸ்ய தநுர்பக்நமேதே சாஸ்ய ஶராஸ்ததா ।
அயம் து ஸாரதிஸ்தஸ்ய மத்பக்ஷநிஹதோ புவி ॥ 18
அயமஸ்ய ரணே ராம பக்ன: ஸாங்க்ராமிகோ ரத: ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பக்னம் - 'முறிந்து கிடக்கிற
ஏதத் - இதோ இருக்கிற
தநு: - வில்லு
அஸ்ய - இவனுடையது.
ஏதத் - இதோ இருக்கும்
ஶராவரம் - கவசம்
அஸ்ய - இவனுடையது.
யுதி - போரில்
மத்பக்ஷ நிஹத: - எனது சிறகுகளால் கொன்று வீழ்த்தப்பட்டுக் கிடக்கும்
அயம் து - இவன்தான்
தஸ்ய ஸாரதி: - அவனது ஸாரதி.
ராம - ஸ்ரீராம!
ரணே - போரில்
பக்ன: - உருவழிக்கப்பட்ட
அயம் - இதோ இருக்கும்
ஸாங்க்ராமிக: - போர்
ரத: - ரதம்
அஸ்ய - இவனுடையது.

परिश्रान्तस्य मे पक्षौ छित्त्वा खड्गेन रावणः ।
सीतामादाय वैदेहीमुत्पपात विहायसम् ॥

பரிஶ்ராந்தஸ்ய மே பக்ஷௌ சித்த்வா கட்கேந ராவண: ।
ஸீதா மாதாய வைதேஹீ முத்பபாத விஹாயஸம் ॥ 19

ராவண: - 'ராவணன்
பரிஶ்ராந்தஸ்ய - சோர்ந்துபோன
மே - எனது
பக்ஷௌ - இரு சிறகுகளையும்
கட்கேந - கத்தியால்
சித்த்வா - அறுத்துத் தள்ளிவிட்டு,
வைதேஹீம் - விதேக மன்னரின் புதல்வியாகிய
ஸீதாம் - ஸீதாப்பிராட்டியாரை
ஆதாய - எடுத்துக்கொண்டு,
விஹாயஸம் - ஆகாயத்தில்
உத்பபாத - கிளம்பிச் சென்றான்.

रक्षसा निहतं पूर्वं न मां हन्तुं त्वमर्हसि ॥

ரக்ஷஸா நிஹதம் பூர்வம் ந மாம் ஹந்தும் த்வமர்ஹஸி ॥ 20

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பூர்வம்	-	'ஏற்கனவே
ரக்ஷஸா	-	அரக்கனால்
நிஹதம்	-	குற்றுயிராய் வீழ்த்தப்பட்டு கிடக்கும்
மாம்	-	அடியேனை
ஹந்தும்	-	கொல்ல
த்வம்	-	தேவரீர்
ந அர்ஹஸி	-	திருவுளம் பற்றலாகாது.'

रामस्तस्य तु विज्ञाय बाष्पपूर्णमुखस्तदा ।
द्विगुणीकृततापार्तः सीतासक्तां प्रियां कथाम् ॥

ராமஸ்தஸ்ய து விக்ஞாய பாஷ்ப பூர்ண முகஸ்ததா ।
த்விகுணீக்ருத தாபார்த: ஸீதாஸக்தாம் ப்ரியாம் கதாம் ॥ 21

ராம:	-	ஸ்ரீராமர்
ததா	-	அப்பொழுது
தஸ்ய	-	அதனது (ஜடாயுவினது)
ஸீதாஸக்தாம்	-	ஸீதாப்பிராட்டியாரிடமுள்ள பக்தியை நன்கு விளக்கிக் காட்டுகிறதும்
ப்ரியாம்	-	பிரயோஜனமாயுமிருக்கிற
கதாம்	-	விண்ணப்பத்தை
விக்ஞாய து	-	அறிந்துகொண்டு
த்விகுணீ க்ருத தாபார்த:	-	முன்னிலுமிருமடங்கு மனவேதனையால் தபிக்கின்றவராய்
பாஷ்ப பூர்ணமுக:	-	முகமெல்லாம் கண்ணீர் வடிக்கின்றவரானார்.

गृध्रराजं परिष्वज्य परित्यज्य महद्धनुः ।
निपपातावशो भूमौ रुरोद सहलक्ष्मणः ॥

க்ருத்ர ராஜம் பரிஷ்வஜ்ய பரித்யஜ்ய மஹத்தநு: ।
நிபபாதாவஶோ பூமௌ ருரோத ஸஹலக்ஷ்மண: ॥ 22

மஹத்தநு:	-	மகத்தான தனுசை
பரித்யஜ்ய	-	கீழே விட்டெறிந்துவிட்டு,
க்ருத்ர ராஜம்	-	புள்ளரசை
பரிஷ்வஜ்ய	-	கட்டித்தழுவி,
அவஶ:	-	மெய்மறந்தவராய்
ஸஹ லக்ஷ்மண:	-	லக்ஷ்மணனோடுகூடவிருக்குமவர்
பூமௌ	-	தரையில்
நிபபாத	-	படுத்துவிட்டார்.
ருரோத	-	வாய்விட்டுக் கதறினார்.

एकमेकायने दुर्गे निःश्वसन्तं मुहुर्मुहुः ।
समीक्ष्य दुःखितो रामः सौमित्रिमिदमब्रवीत् ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஏகமேகாயனே துர்கே நி:ஸ்வஸந்தம் முஹு: முஹு: ।
ஸமீக்ஷ்ய துக்கிதோ ராம: ஸௌமித்ரி மிதமப்ரவீத் ॥ 23

ராம: - ஸ்ரீராமர்
ஏகாயனே - மனதை ஒருமைப்படுத்திய வேளையாகிற
துர்கே - அந்த்யகால ஆபத்துத்தசையில்
ஏகம் - உதவிபுரிபவரின்றி தனிமையாய்
முஹு: முஹு: - அடிக்கடி
நி: ஸ்வஸந்தம் - பெருமூச்செறிந்து கொண்டிருக்குமவரை
ஸமீக்ஷ்ய - பார்த்து
துக்கித: - துன்பம்மீதூறப்பட்டவராய்
ஸௌமித்ரிம் - லக்ஷ்மணரைப் பார்த்து
இதம் - பின்வருமாறு
அப்ரவீத் - மொழிந்தார்.

राज्याद्भ्रंशो वने वासः सीता नष्टा द्विजो हतः ।
ईदृशीयं ममालक्ष्मीर्निर्दहेदपि पावकम् ॥

ராஜ்யாத் ப்ரம்ஸோ வனே வாஸ: ஸீதா நஷ்டா த்விஜோ ஹத: ।
ஈத்ருஸீயம் மமாலக்ஷ்மீர் நிர்தஹேதபி பாவகம் ॥ 24

ராஜ்யாத் - 'நாட்டிலிருந்து
ப்ரம்ஸ: - பிரிவு ஏற்பட்டது.
வனே - வனத்தில்
வாஸ: - வாஸமேற்பட்டது.
ஸீதா - சீதை
நஷ்டா - காணாமல் போய்விட்டாள்.
த்விஜ: - கழுகு
ஹத: - கொல்லப்பட்டிருக்கிறது.
ஈத்ருஸீ - இப்படிப்பட்டதாகிய
இயம் - இந்த
மம - எனது
அலக்ஷ்மீ: - துரதிர்ஷ்டம்
பாவகம் அபி - அக்னியையும்
நிர்தஹேத் - எரித்துவிடும்.

संपूर्णमपि चेदद्य प्रतरेयं महोदधिम् ।
सोऽपि नूनं ममालक्ष्म्या विशुष्येत्सरितां पतिः ॥

ஸம்பூர்ணமபி சேதத்ய ப்ரதரேயம் மஹோததிம் ।
ஸோऽபி நூநம் மமாலக்ஷ்ம்யா விஸுஷ்யேத் ஸரிதாம் பதி: ॥ 25

அத்ய - 'இப்பொழுது
ஸம்பூர்ணம் - பூர்ணமாய் நிறைந்துள்ள

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மஹோததிம் - பெருங்கடலை
ப்ரதரேயம் சேத் - பற்றுவேனாகில்
ஸரிதாம் பதி: - நதிகளுக்கு புகுமிடமாகும்
ஸ: அபி - அதுவும்
மம - எனது
அலக்ஷ்ம்யா அபி - துரதிர்ஷ்டத்தினாலேயே
நூநம் - நிச்சயமாய்
விஶுஷ்யேத் - வற்றிப் போய்விடும்.

नास्त्यभाग्यतरो लोके मत्तोऽस्मिन् सचराचरे ।
येनेयं महती प्राप्ता मया व्यसनवागुरा ॥

நாஸ்த்யபாக்யதரோ லோகே மத்தோऽஸ்மின் ஸசராசரே।
யேநேயம் மஹதீ ப்ராப்தா மயா வ்யஸநவாகுரா॥ 26

அஸ்மின் - 'இந்த
ஸசராசரே - அசைப்பொருள் அசையாப் பொருளடங்கிய
லோகே - உலகில்
மத்த: - என்னிலும்
அபாக்யதர: - பாக்யஹீனன் ஒருவனும்
அஸ்தி ந - இல்லை.
யேந - ஆகையால்தான்
இயம் - இந்த
மஹதீ - பெரும்
வ்யஸந வாகுரா - துயரமாகிற படுகுழியானது
மயா - என்னால்
ப்ராப்தா - அடையப்பட்டது.

अयं पितृवयस्यो मे गृध्रराजो जरान्वितः ।
शेते विनिहतो भूमौ मम भाग्यविपर्ययात् ॥

அயம் பித்ருவயஸ்யோ மே க்ருத்ர ராஜோ ஜராந்வித:। 27
ஶேதே விநிஹதோ பூமௌ மம பாக்யவிபர்யயாத்॥

அயம் - 'இந்த
மே பித்ரு வயஸ்ய: - எனது தந்தையின் தோழரும்
ஜராந்வித: - முதுமைப் பருவத்தை அடைந்தவருமாகிய
க்ருத்ர ராஜ: - புள்ளரசு
மம - எனது
பாக்ய விபர்யயாத் - துரதிர்ஷ்டத்தால்
பூமௌ - தரையில்
விநிஹத: - குற்றுயிராய் அடிக்கப்பட்டதாய்
ஶேதே - படுத்துக்கிடக்கிறது.'

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

इत्येवमुक्त्वा बहुशो राघवः सहलक्ष्मणः ।
जटायुषं च पस्पर्श पितृस्नेहं विदर्शयन् ॥

இத்யேவ முக்த்வா பஹுஶோ ராகவ: ஸஹலக்ஷ்மண: ॥
ஜடாயுஷம் ச பஸ்பர்ஶ பித்ருஸ்நேஹம் விதர்ஶயன் ॥ 28

ஸஹ லக்ஷ்மண: - லக்ஷ்மணரோடிருந்த
ராகவ: - ஸ்ரீராமர்
இதி ஏவம் - மேற்கண்டவாறும்
பஹுஶ: - இன்னும் பலவிதமாகவும்
உக்த்வா - சொல்லிவிட்டு,
பித்ரு ஸ்நேஹம் - தந்தையினிடத்திலுள்ள பக்தியை
விதர்ஶயன் ச - வெளியிட்டுக் காட்டிக்கொண்டே
ஜடாயுஷம் - ஜடாயுவை
பஸ்பர்ஶ - தடவிக்கொடுத்தார்.

निकृत्तपक्षं रुधिरावसिक्तं स गृध्रराजं परिरभ्य रामः ।
क्व मैथिली प्राणसमा गतेति विमुच्य वाचं निपपात भूमौ ॥

நிக்ருத்தபக்ஷம் ருதிராவஸிக்தம்
ஸ க்ருத்ரராஜம் பரிரப்ய ராம: ।
க்வ மைதிலீ ப்ராணஸமா கதேதி
விமுச்ய வாசம் நிபபாத பூமௌ ॥ 29

ராம: - ஸ்ரீராமர்
நிக்ருத்த பக்ஷம் - சிறகுகள் அறுக்கப்பட்டு
ருதிராவஸிக்தம் - ரத்தம் தோய்ந்துகிடக்கும்
தம் க்ருத்ர ராஜம் - அந்தப் புள்ளரசை
பரிரப்ய - இறுகக் கட்டிக்கொண்டு,
ப்ராணஸமா - 'உயிருக்கொப்பான
மைதிலீ - ஜானகீ
க்வ கதா - எங்கே போய்விட்டாள்?'
இதி - என்று சொல்லிக்கொண்டே
பாஷ்பம் - கண்ணீரை
விமுச்ய - விடுத்து,
பூமௌ - தரையில்
நிபபாத - விழுந்துவிட்டனர்.

*இத்யார்ஷே ஸ்ரீமத் ராமாயணே வால்மீகீயே ஆதிகாவ்யே
சதுர்விம்ஶதி ஸஹஸ்ரிகாயாம் ஸம்ஹிதாயாம் ஆரண்ய காண்டே
க்ருத்ரராஜதர்ஶநம் நாம ஸப்த ஷஷ்டிதம: ஸர்க: ॥*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அஷ்ட ஷஷ்டிதம: ஸர்க: - 68

राम: संप्रेक्ष्य तं गृध्रं भुवि रौद्रेण पातितम् ।
सौमित्रिं मित्रसंपन्नमिदं वचनमब्रवीत् ॥

ராம: ஸம்ப்ரேக்ஷ்ய தம் க்ருத்ரம் புவி ரௌத்ரேண பாதிதம் ।
ஸௌமித்ரிம் மித்ரஸம்பந்நமிதம் வசனமப்ரவீத் ॥ 1

ராம: - ஸ்ரீராமர்,
ரௌத்ரேண - கொடியனால்
புவி - தரையில்
பாதிதம் - வீழ்த்தப்பட்டு கிடக்கின்றவரும்
மித்ர ஸம்பந்நம் - தோழருக்கு உயிரைக் கொடுத்து உதவி புரிந்தவருமான
தம் க்ருத்ரம் - அந்தக் கழுகை
ஸம்ப்ரேக்ஷ்ய - கண்குளிரக் கடாக்ஷித்தருளி,
ஸௌமித்ரிம் - லக்ஷ்மணரைப் பார்த்து
இதம் - பின்வரும்
வசனம் - சொல்லை
அப்ரவீத் - மொழிந்தார்.

ममायं नूनमर्थेषु यतमानो विहङ्गम: ।
राक्षसेन हत: संख्ये प्राणांस्त्यजति दुस्त्यजान् ॥

மமாயம் நூநமர்தேஷு யதமாநோ விஹங்கம: ।
ராக்ஷஸேந ஹத: ஸங்க்யே ப்ராணான் த்யஜதி துஸ்த்யஜான் ॥ 2

அயம் - 'இந்த
விஹங்கம: - கழுகு
மம - எனது
அர்தேஷு - கைங்கர்யங்களில்
யதமாந: - ஒருபட்ட மனமுற்றதாய்
ஸங்க்யே - போரில்
ராக்ஷஸேந - அரக்கனால்
ஹத: - குற்றுயிராய்ப் புடைக்கப்பட்டதாய்
துஸ்த்யஜான் - யாவருக்கும் விட மனம் வராததாகிய
ப்ராணான் - உயிரை
நூநம் - இதோ
த்யஜதி - விடப்போகிறது.

अयमस्य शरीरेऽस्मिन्प्राणो लक्ष्मण विद्यते ।
तथा हि स्वरहीनोऽयं विक्लव: समुदीक्षते ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அயமஸ்ய ஶரீரே஽ஸ்மின் ப்ராணோ லக்ஷ்மண வித்யதே ।
ததா ஹி ஸ்வரவிஹீநோ஽யம் விக்லவ: ஸமுதீக்ஷதே ॥ 3

லக்ஷ்மண	-	'லக்ஷ்மணா!
அஸ்ய	-	இதனுடைய
அஸ்மின்	-	இந்த
ஶரீரே	-	உடலில்
அயம் ப்ராண:	-	இந்த எல்லாம் ஒடுங்கிய உயிர் ஒன்று மாத்திரம்
வித்யதே	-	இருக்கிறது.
ததா ஹி	-	ஆகையால்தான்
அயம்	-	இது
ஸ்வரஹீந:	-	குரல் விழுந்து
விக்லவ:	-	தடுமாற்றமுற்று
ஸமுதீக்ஷதே	-	விழித்து விழித்துப் பார்க்கிறது.

जटायो यदि शक्नोषि वाक्यं व्याहरितुं पुनः ।
सीतामाख्याहि भद्रं ते वधमाख्याहि चात्मनः ॥

ஜடாயோ யதி ஶக்நோஷி வாக்யம் வ்யாஹரிதும் புன: ।
ஸீதாமாக்யாஹி பத்ரம் தே வதமாக்யாஹி சாத்மன: ॥ 4

ஜடாயோ	-	'ஜடாயுவே!
புன:	-	இன்னும்
வாக்யம்	-	ஒரு சொல்லை
வ்யாஹரிதும்	-	வாய் திறந்து சொல்ல
ஶக்நோஷி யதி	-	நீர் முடிந்தவனாகில்
ஸீதாம்	-	சீதையைப்பற்றி
ஆக்யாஹி	-	விவரமாய் விளம்பு.
ஆத்மன:	-	உனது
வதம் ச	-	வதையைப் பற்றியும்
ஆக்யாஹி	-	விவரமாய்ச் சொல்லு.
தே பத்ரம்	-	உனக்கு தெய்வானுக்ரகம் கிடைக்கும்.

किंनिमित्तोऽहरत् सीतां रावणस्तस्य किं मया ।
अपराधं तु यं दृष्ट्वा रावणेन हृता प्रिया ॥

